# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

**MITRA TIMES - Tamil & English Monthly**

| | | | |
|---|---|---|---|
| மலர்: IX இதழ்: 1 | ஜூன் 2023 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ. 20/- |
| Vol.: IX Issue: 1 | June 2023 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20 |






கலைஞர் 100



பேச்சுப் போட்டியில் வென்றதால் அமெரிக்கா செல்லும் மாணவி!



இடம் மாறிய செங்கோல் கடந்து வந்த தடம்



முதுமை மொழி

ஆசிரியர் கடிதம்

## வெளிநாட்டு பயணம் வெற்றி!
## தமிழ்நாட்டில் அதிகரித்துள்ள அதிருப்தி!
## - சமாளிப்பாரா முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் !



# Highlights of new parliament House,India

As part of India's Central Vista Redevelopment Project, a new parliament building was constructed in New Delhi. Once inaugurated, it will serve as the seat of the Parliament of India, which currently occupies Parliament House (built in 1926), which is situated near new parliament. It opened on the 28th May 2023 by our Prime Minister Narendra Modi.

At a distance of 750 meters from the Rashtrapati Bhavan, it is located on Sansad Marg which crosses the Central Vista and is surrounded by the Vijay Chowk, India Gate, National War Memorial (India), Vice President's House, Hyderabad House, Secretariat Building, Prime minister's office and residence, ministerial buildings and other administrative units of Indian government.

The building is designed to have a lifespan of more than 150 years.[1] It is designed to be earthquake resistant and will incorporate architectural styles from different parts of India.[9] The proposed chambers for the Lok Sabha and the Rajya Sabha will have large seating capacities to accommodate more members than are currently present, since the number of MPs may increase with India's growing population and consequent future delimitation. The new complex will have 888 seats in the Lok Sabha chamber and 384 seats in the Rajya Sabha chamber. Unlike the present parliament building, it will not have a central hall. The Lok Sabha chamber will be able to house 1,272 members in case of a joint session. The rest of the building will have 4 floors with offices of ministers and committee rooms. The building will have a built area of 20,866 m2 (including its open-sky area of 2,000 m2 for a banyan tree), which makes it 10% smaller in size than the existing old circular building of 22,900 m2 (diameter 170.7 m) including its open sky area of 6,060 m2 or 1.5 acres, split in 3 sectors each half an acre.

The Parliament House has 3 entrances, named-Gyan Dwar, Shakti Dwar, and Karma Dwar.

The new building will also house Chola era 'Sengol', a sceptre gifted to the first Prime Minister Jawaharlal Nehru on the eve of the Indian Independance.



Concept by:
**S.SHRUTHI LAKSHMI**
B.Sc., (psychology)

The current Parliament building accommodates 550 members in the Lok Sabha and 250 members in the Rajya Sabha. However, the new Parliament building has been designed to accommodate future requirements, with seating for 888 members in the Lok Sabha and 384 members in the Rajya Sabha. Additionally, it houses a joint session chamber for simultaneous sittings of both houses, fostering collaboration and efficient governance.

# முதுமை மொழி!

**அ**ன்புடையீர் வணக்கம்!

மனிதன் மண்ணில் பிறந்த பின்பு குழந்தைப் பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம் என்ற நிலைகளில் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான். நாள் ஆக ஆக உடலில் உள்ள உறுப்புகள் தளர்வு அடையும்போது அதை முதுமைப் பருவம் என்று அழைக்கிறார்கள். குழந்தையாக இருக்கும் போதும் இளைஞனாக சுற்றும் போதும் இல்லாத ஒரு அனுபவம் முதுமை பருவத்தில் அமையும்.

* சிலருக்கு முதுமை தனிமையாக அமைந்துவிடும்

* சிலருக்கு முதுமை இனிமையாக அமைந்து விடும்

* சிலருக்கு முதுமை கொடுமையாக அமைந்து விடும்.

முதுமையில் அடுத்தவரின் தயவு இல்லாமல் தன்னுடைய வாழ்க்கையின் அடுத்த கட்டத்தை நகர்த்த முடியாமல் எவ்வளவோ தவிக்கிறார்கள். உடல் ரீதியாக சமூக ரீதியாக பொருளாதார ரீதியாக பல்வேறு சிக்கல்களில் சிக்கித் தவிக்கிறார்கள்.

மானிட வாழ்வில் தவிர்க்க முடியாத ஒரு பருவம் முதுமை. எல்லோரும் அதை கடந்தே தீரவேண்டும். கதைகளிலும் காவியங்களிலும் வரும் நாயகர்கள் போல் மரணமும் முதுமையும் வராமலே இருக்க நாம் யாரிடமும் வரம் வாங்கிக் கொள்ள வழியில்லை. முதுமையைத் தள்ளிப் போடலாம்; ஆனால் தவிர்க்க முடியாது.



முதுமை என்பது நோய் களின் மேய்ச்சல்காடு என்றோ சுமை என்றோ சாபம் என்றோ கருதி அஞ்சத் தேவையில்லை. எல்லோரும் முதுமையைச் சந்தித்தே தீர வேண்டும். முதுமை என்பது அனுபவங்களின் விளைநிலம். முதுமையை இயல்பான மனநிலையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். முதுமையைத் திட்டமிட்டு வாழக் கற்றுக் கொண்டால் உடல் நல, மன நலக் கோளாறுகளின்றி, பிறருக்குத் தொந்தரவின்றி மகிழ்ச்சியோடு இறுதி நிமிடம் வரை வாழமுடியும்.

தன்னுடைய பிள்ளைகள் ஒரு நிலை வரை தான் நம்முடைய பேச்சைக் கேட்பார்கள் என்கிற மன உறுதியை நமக்குள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். தனது மகனாக இருந்தால் அவனுக்கு திருமணம் ஆகும் வரை தன்னுடைய பேச்சை கேட்பதில் ஒரு நியாயம் இருக்கும். அவனுக்கு திருமணம் செய்து வைத்த பின்பு அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்த பின்பு அவனுக்கு என்ன தனி குடும்பம் அமைந்து விடுகிறது. அந்த நேரத்தில் நாம் பழைய அதிகார தோரணையோடு நம் மகனை நடத்தக் கூடாது. நடத்த முடியாது. ஆனால் அதே மகன் தன்னுடைய தந்தைக்கு தேவையான அனைத்து வசதிகளையும் அவர் கேட்காமலே செய்யாவிட்டாலும் பரவாயில்லை கேட்ட பின்பு செய்யாமல் இருப்பது நியாயம் இல்லை. ஏனென்றால் நாளைக்கு அவருக்கு முதுமைப் பருவம் வரும்.

அதைப்போல மகளுக்கு ஒரு திருமணம் செய்து கொடுத்து இன்னொருவருக்கு சொந்தமாக ஆக்கிவிட்ட பின்பு அவர்கள் விஷயத்தில் நாம் தேவையில்லாமல் தலையிட்டு மன உளைச்சலுக்கு ஆளாக கூடாது.

எனவே மகனோ மகளோ அவர்களுக்கென தனி கூடு



அமைந்து விட்ட பின்பு நாம் அதிலே பாரமாக இருப்பது நல்லதல்ல. அதே நேரத்தில் நம்மை வளர்த்து ஆளாக்கிய பெரியவர்கள் தவித்து விடப்படும் போது அதற்காக அவர்கள் படும் வேதனை நாளை நம் சந்ததியை பாதிப்புக்கு உள்ளாக்கும் என்று ஒவ்வொருவரும் எண்ண வேண்டும்.

சரி முதுமைப் பருவத்தில் உடல் ரீதியாக, மனரீதியாக, சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக நாம் திட்டமிட்டு நம்மை தயார் படுத்திக் கொண்டால் முதுமை நமக்கு இனிமையே என்று அமைந்து விடும்.

முதுமையில் இனிமை காண, முதுமையைத் தள்ளிப் போட சிலவற்றைக் கடைபிடிக்க வேணடும். முறையான வேலைத்திட்டம். தினசரி நடத்தல், எளிய உடற்பயிற்சிகளைச் செய்தல், போதுமான உறக்கம், திருப்திகரமான தாம்பத்திய மகிழ்ச்சி, கட்டுப்பாடான, ஒழுக்கமான பழக்கங்கள், நேரந்தவறாத உணவு, அன்புமயமான நண்பர்களை, தோழமையைப் பெறுதல், மனவளத்தை மேம்படுத்தும் நூல்வாசிப்பு போன்றவைகளைப் பின்பற்று வதால் முதுமையில் இனிமை காண முடியும்!

முதியோரை மதிப்போம்!

முதியோரைக் காப்போம்!

**– எம்.எஸ்.மூர்த்தி**


# உள்ளே...




**இடம் மாறிய செங்கோல் கடந்து வந்த தடம்!** 7



**பேச்சுப் போட்டியில் வென்றதால் அமெரிக்கா செல்லும் மாணவி!** 11



**மீண்டும் வருகிறது கைனடிக் லூனா வாகனம்!** 19




**கலைஞர் 100** 30



**பிராது மனு மீது தீர்வு: அருள்தரும் முருகப்பெருமான்!** 36



**போன் நம்பர் தேவையில்லை: வாட்ஸ் அப் அப்டேட்** 50




# கனரக வாகனம் கையாளும் பெண்மணி!

கிரேன், ரோடு ரோலர், டிராக்டர், எஸ்கலேட்டர், போர்க் லிப்ட், லாரி,ஜேசிபி, பேருந்து, கண்டெய்னர் லாரி உட்பட 20 வகை கனரக வாகனங்களையும் இயக்கும் திறன் பெற்று, அதற்கான உரிமைகளையும் பெற்று வைத்துள்ளார் கேரள மாநிலம், கொச்சியைச் சேர்ந்த, 72 வயது பெண் ராதாமணி!




கேரளத்தில் மட்டுமல்ல இந்தியாவிலே இப்படி எல்லா கனரக வாகனங்களை இயக்கும் உரிமம் பெற்றிருப்பவர் இவர் மட்டுமே!

ஆலப்புழா மாவட்டம், சேர்தலா இவர் பிறந்த ஊர். அப்பா தொழிலதிபர். நான்கு சகோதரர்கள்; இவர் மட்டும் தான் பெண்.

திருமணத்துக்கு முன் வரை, கன ரக வாகனங்களைத் தொட்டுப் பார்த்தது கூட கிடையாது. காரணம் சிறு வயது முதல் திருமணம் வரை வீட்டை விட்டு கூட வெளியிலே வர மாட்டார். சொன்னால் நம்ப மாட்டீர்கள்... அப்போது இவருக்கு மிதி வண்டி ஓட்டக் கூடத் தெரியாது.

அப்போதெல்லாம் பெண்களுக்கான பிரத்தியேக மிதிவண்டி கிடையாது. இடையில் பார் வைத்த ஆண்கள் ஓட்டும் மிதிவண்டியில் தான் மிதி வண்டி ஓட்டப் பழகவேண்டும். கட்டியிருக்கும் சேலை தடுக்கும் என்பதால் இவர் மிதிவண்டி ஓட்டப் பழக அச்சப் பட்டிருக்கிறார். இன்று கூட பைக், ஸ்கூட்டர் ஓட்டத் தெரிந்து இருக்கிற இவரால் மிதி வண்டி ஓட்டத் தெரியாது!



"இப்போது, அனைத்து விதமான கனரக வாகனங்களையும் இயக்குகிறேன். கேரளாவில், கனரக வாகனங்கள் இயக்குவதற்கான ஓட்டுனர் உரிமம் பெற்ற, முதல் பெண் நான் தான். கனரக வாகனங்களை நான் இயக்கத் துவங்கிய போது, 'வீட்டு வேலைகளைப் பாருங்க; வீட்டுக்குள் போய் உட்காருங்க...' என்று கிண்டலடிப்பர். பெண்களால் கனரக வாகனங்களை இயக்க முடியாது என்ற தவறான எண்ணமே, அதற்குக் காரணம். அதை நான் உடைத்தேன்"என்கிறார் ராதாமணி.

திருமணத்துக்குப் பிறகு, கொச்சி வந்து விட்டார். இவரது கணவர் அங்கே 1978இல் தோப்பும்படி என்ற இடத்தில் வாகனம் ஓட்டும் பயிற்சிப்பள்ளி தொடங்கினார்.

கேரளாவின் முதல் பயிற்சிப் பள்ளி அது தான். கார் மட்டுமல்லாமல் பேருந்து, லாரி என, கனரக வாகனங்களுக்கும் பயிற்சி அளித்தார். அது இன்றைக்கும் அங்கே செயல்பட்டு வருகிறது.

கணவருக்கு உதவலாம் என்று எண்ணியபோது வாகனங்களை

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 09 ஜூன் 2023 டைம்ஸ்- 1



தலைவர் / நிர்வாக இயக்குனர்
**எம்.எஸ். மூர்த்தி**

துணை தலைவர் /இணை இயக்குனர்
**திருமதி சுஜாதா மூர்த்தி**

நிர்வாக சிறப்பு ஆலோசகர்
கலைமாமணி **நடிகர் பூ.விலங்கு மோகன்**

தலைமை செய்தி ஆசிரியர்
**மணவூர்.கி.விடாரண்யம்**

தலைமை நிர்வாக ஆசிரியர்கள்
DR. **ஆ.தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
9789016153
DR.**ப.குணசீலன்** எம்.பி.ஏ.,
9962531325

நிர்வாக ஆசிரியர்
**ஆர்.குணசேகரன்**

செய்தியாளர்கள்
**ஆர்.ஹரி பாபு, பி.வினோத், வெ.சுரேஷ்**

செய்தி இணை ஆசிரியர்கள்
**கவி சுகந்தீனா /துடுப்பதி ரகுநாதன்**

இணையதள செய்தியாளர்
**பொன்.சாம்பசிவம்**

சட்ட ஆலோசகர்
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.எம்.பில்

வடிவமைப்பு
vidapublications@gmail.com

விளம்பரம் சந்தா தொடர்புக்கு
**சி.இளவரசி** - 044 23743007 /08
அலுவலகம்:
**உமா மகேஷ்வரி** - 9884295482
**ஆர்.நந்தினி** - 9884295328



**அலுவலகம்:**
**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,**
**9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**
**6374285644**
mitratimes2015@gmail.com
www.mitratimes.com




ஓட்ட சொல்லித்தரும் பயிற்சியாளரும் அந்தந்த வாகனங்களை ஓட்டும் உரிமம் பெற்றிருக்க வேண்டும் என்பது அரசாங்க விதிமுறை என ராதாமணிக்குத் தெரியவந்திருக்கிறது. பிறருக்குப் பல தரப்பட்ட வாகனங்களை ஓட்டக் கற்றுக்கொடுக்க கணவரிடம் பலதர வாகனங்களை ஓட்டப் பழகி கேரள அரசின் உரிமங்களை ஒன்றுக்குப் பிறகு ஒன்றாகப் பெற்றார் ராதாமணி.

ராதாமணி 1981 இல் கார் ஓட்டும் உரிமம்தான் முதன் முதலாகப் பெற்றார். 1988 இல் பஸ், லாரி கனரக வாகனங்கள் உரிமம் பெற்றார்.இப்போது சுமார் 20 கனரக வாகனங்களை ஓட்டும் மற்றும் அதற்கான உரிமங்களை ராதாமணி வைத்திருக்கிறார்.

தன், 32 ஆண்டு, டிரைவிங் சர்வீசில், இவர் இதுவரை ஒரு விபத்தைக் கூட ஏற்படுத்தியது கிடையாது. இதற்கு எல்லாம் காரணமாக இருந்த இவரது கணவர் 2004இல் இறந்து விட்டார்.

பயிற்சிக் கூடத்தை , இவரும் இவரது இரண்டு மகன்களும் சேர்ந்து நிர்வகித்து வருகின்றனர். பேரன் அரவிந்தும் ஒரு பயிற்சியாளன்.

கேரளாவில், ஆட்டோமொபைல் டிப்ளமோ முடித்த முதல் பெண், இவரது மகள் தான். இவர்களின் ஓட்டுனர் பயிற்சிப் பள்ளிகள், கேரளாவில், 13 இடங்களில் செயல்படுகின்றன.

இன்று இவர்களது வாகன பயிற்சிப் பள்ளிகள் மூலம், பல பெண்கள், வாகனம் ஓட்ட பயிற்சி எடுத்து உரிமமும் வாங்கி வருகிறார்கள். ஆனாலும் எல்லோரும் கார் போன்ற இலகுரக வாகனங்களையே ஓட்டப் பயிற்சி எடுக்கிறார்கள். "கனரக வாகனங்களை ஓட்டத் தெரிந்த பெண்களுக்கு, வெளிநாடுகளில் நல்ல வேலை வாய்ப்பு இருக்கிறது. நிதானமும், தீவிரப் பயிற்சியும் இருந்தால், எல்லா பெண்களாலும், கனரக வாகனங்களை நேர்த்தியாக இயக்க முடியும்! எனவே பெண்களே கனரக வாகனங்களை ஓட்ட உரிமம் பெற முன் வாருங்கள்!"என்று அழைக்கிறார் ராதாமணி!

**- சுஜாதாமூர்த்தி**

# இடம் மாறிய செங்கோல் கடந்து வந்த தடம்!

டெல்லியில் 96 ஆண்டுகள் பழமையான நாடாளுமன்றத்திற்கு பதிலாக புதிய நாடாளுமன்ற கட்டிடம் கட்ட பிரதமர் மோடி கடந்த 2020ல் அடிக்கல் நாட்டினார். தற்போது கட்டுமான பணிகள் முடிந்து இந்த புதிய கட்டிடத்தை பிரதமர் மோடி வரும் 28ம் தேதி திறந்து வைத்தார்.

திறப்பு விழாவின்போது, பிரதமர் மோடியிடம் திருவாவடுதுறை ஆதீனம் ஒரு செங்கோலை வழங்க அதை புதிய நாடாளுமன்றத்தில் திறப்பு விழாவின் போது கண்ணாடி பேழைக்குள் வைத்த காட்சியை நாம் தொலைக்காட்சியில் பார்த்தோம்.

இச் செங்கோல் 1947ல் நாடு சுதந்திரம் அடைந்ததை அடையாளப்படுத்தும் விதமாக திருவாவடுதுறை ஆதீனத்தால் வழங்கப்பட்ட செங்கோலாகும். இந்த செங்கோல் எப்படி உருவானது என்பது குறித்த சுவாரஸ்யமான தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளது.

திருவாவடுதுறை ஆதீனம் சைவ சித்தாந்த மடங்களில் மிகத்தொன்மையானது. 14ம் நூற்றாண்டில் மூவலூரில் பிறந்த ஸ்ரீ நமச்சிவாய தேசிகரால் இந்த ஆதீனம் துவங்கப்பட்டது. ஸ்ரீ மெய்கண்ட சந்தான மரபில் வந்த சித்தர் சிவப்பிரகாச சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்ட மூவலூர் வைத்தியநாதரே பின் நமச்சிவாய தேசிகராக மாறி மடத்தை நிறுவினார். இன்று 24வது பட்டமாக ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பண்டார சந்நிதிகள் வீற்றிருக்கிறார். திருவாவடுதுறை



செங்கோலுடன் நேரு



ஆதீனத்திற்கு விஜயநகர அரசு, நாயக்கர் அரசு, தஞ்சாவூர் மராட்டிய அரசு, திருவிதாங்கூர் ராஜ்ஜியம், சேதுபதி மன்னர்கள் என எல்லா அரச குடும்பங்களுடனும் நெருங்கிய தொடர்பு இருந்தது. வேதாகமத்தை பண்டார சாத்திரங்களை – திருமுறைகளை கொண்டு சைவ சமயத்தை பரவச் செய்யும் பொறுப்பு ஆதீனங்களிடமே உள்ளது. ஆதீனம் மற்றும் இதர மடங்கள் எல்லாமே தங்கள் சம்பிரதாயத்தை காக்கும் அளவிற்கு இந்த பண்பாட்டையும், நிலத்தையும் காக்கும் பொறுப்பையும் பெற்றுள்ளனர்.

அரசர்களை வழிநடத்தவும், அவர்கள் தர்மத்தை மீறும் போது சுட்டிக் காட்டவும், இந்த நிலத்தில் வேதாகம தர்மம் நிலைத்து செழிக்கவும் மடாதிபதிகளின் பங்கு ஈடு இணையற்றது. அரசர் காலங்களோடு ஆதீனங்களின் பணி அரசியலில் முடிந்து விட்டது என்றில்லை. எந்த வழியில் ஆட்சி நடந்தாலும், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதில் மடாதிபதிகளின் பங்கு பெரிய அளவில் இருக்கும். அந்த வகையில்தான் இந்தியா சுதந்திரம் பெற்று ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தின் பங்கு நேரடியாக இருந்தது.

சோழ மன்னர்களின் ஆட்சியில் முக்கிய அங்கமாக விளங்கி வந்தது செங்கோல். குறிப்பாக, அதிகார மாற்றத்தை குறிக்கும் வகையில் புதிய மன்னர்கள் ஆட்சி பொறுப்பேற்கும்போது செங்கோல் ஒப்படைக்கப்படும். இதை குறிக்கும் வகையில்தான் தற்போதும் அரசியல் கூட்டங்களில் தலைவர்களுக்கு செங்கோல் வழங்கப்பட்டு வருகிறது. நம்நாட்டின்

சுதந்திரத்திற்கு அடையாளமாக இருந்த 'செங்கோல்' திருவாவடுதுறை ஆதீனம் வழங்கியது என்பதும், அந்த செங்கோல் பாரதத்தின் புதிய நாடாளுமன்றத்தை தற்போது அலங்கரிக்கப் போகிறது என்பதும் தமிழகத்திற்கு பெருமையே.

திருவாவடுதுறை ஆதீனம் 24வது குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் கூறிய 5 அடி உயரம் கொண்ட இந்த செங்கோல் தங்க முலம் பூசப்பட்டது. செங்கோலின் மேற்பகுதியில் நீதியின் அடையாளமாக திகழும் நந்தி சிலை பொறிக்கப்பட்டுள்ளது. இந்த செங்கோல் ஜவஹர்லால் நேருவுடன் தொடர்புடைய பல வரலாற்று பொருட்களுடன், அலகாபாத் அருங்காட்சியகத்தில் நேரு கேலரியின் ஒரு பகுதியாக வைக்கப்பட்டு இருந்தது. 28ம் தேதி டெல்லியில் கட்டப்பட்டுள்ள புதிய நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழாவின் போதுவழங்கினேன் என்றார்.



ஆனால் இது புனைக்கதை என்கிறார் முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம்.

''செங்கோல் விவகாரத்தில் நிறைய புனைக்கதைகள் வருகிறது. புனைக்கதைகளை நம்ப வேண்டாம். தமிழக கவர்னர் புனைகதைக்கு மேலும் ஜோடித்து ஒரு கதை சொல்கிறார். உண்மையில் நடந்தது என்ன என்பதை நேரு, ராஜாஜியின் வரலாற்றில் வரலாற்று ஆசிரியர்கள் எழுதியிருக்கின்றனர்.

வரலாற்று ஆசிரியர்கள் சொன்னதில் திருவாவடுதுறை ஆதீனம் இங்கிருந்து ரெயிலில் பயணம் செய்து 1947ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14ந் தேதி மாலையில் ஜவஹர்லால் நேருவின் வீட்டுக்கு சென்றுள்ளார். நேருவும் வந்து பார்த்துள்ளார். வந்த இடத்தில் இந்த செங்கோலை கொடுத்து உங்களுக்கு நினைவு பரிசாக தருகிறேன் என்று கூறியிருக்கிறார். அதனை நேருவும்





வாங்கியிருக்கிறார். அந்த நேரத்தில் நேருவுக்கு பல நூறு நினைவு பொருட்கள் வந்தன.

அந்த நினைவு பொருட்கள் அனைத்தையும் வரிசைப்படுத்தி பத்திரமாக அலகாபாத் அருங்காட்சியகத்தில் வைத்தார். ஆகஸ்டு 14ந் தேதி மவுண்ட்பேட்டன் பிரபு டெல்லியிலேயே இல்லை. அவர் பாகிஸ்தான் சென்றிருந்தார். அன்று பாகிஸ்தான் நாட்டின் சுதந்திரதின நிகழ்ச்சியை முடித்துவிட்டு இரவு 7 மணிக்கு டெல்லி வந்தார். அதன்பின் வீட்டிற்கு சென்று விட்டு இந்திய சுதந்திர தின அன்று பாகிஸ்தான் நாட்டின் சுதந்திரதின நிகழ்ச்சியை முடித்துவிட்டு இரவு 7 மணிக்கு டெல்லி வந்தார். அதன்பின் வீட்டிற்கு சென்று விட்டு இந்திய சுதந்திர தின நிகழ்ச்சிக்கு இரவு 11 மணிக்கு மேல் வருகிறார். 12 மணிக்கு சுதந்திரம் கிடைக்கிறது. அதன்பின் நேரு உரையாற்றினார். நடந்தது அவ்வளவு தான்.

தங்க கோல் அலகாபாத் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு பேழையில் `நேருவுக்கு அளிக்கப்பட்ட தங்க கோல்' என எழுதப்பட்டிருந்தது. அதில் ஒன்றும் `வாக்கிங் ஸ்டிக்' என எழுதப்படவில்லை. வரலாற்று ஆசிரியர்கள் எழுதினால் அது வரலாறு. மற்றவர்கள் எழுதுவது எல்லாம் புனைகதைகள். அந்த செங்கோல் நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டிருப்பது எங்களுக்கு மகிழ்ச்சி தான்.

எது எப்படி ஆயினும் பல்வேறு விவாதங்கள் இருப்பினும் பாராளுமன்ற கட்டிட திறப்பு விழாவில் தமிழகத்தின் சார்பில் ஆதீனங்களுக்கு அளிக்கப்பட்ட மரியாதைக்கு அனைவரும் அரசியல் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் தாண்டி அனைவரும் நன்றி சொல்ல வேண்டும்

# வெளிநாட்டு பயணம் வெற்றி!
# தமிழ்நாட்டில் அதிகரித்துள்ள அதிருப்தி!
## - சமாளிப்பாரா முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் !




தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஜப்பான் மற்றும் சிங்கப்பூருக்கு பயணம் மேற்கொண்டார். பல தொழில் நிறுவன அதிபர்கள் மற்றும் அதிகாரிகளை சந்தித்துப் பேசிய முதலமைச்சர் சென்னை திரும்பினார். முதலமைச்சரை, திமுக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இந்த பயணத்தில், கடந்த மே 24 ஆம் தேதி தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக சிங்கப்பூரைச் சேர்ந்த மூன்று முக்கிய நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களுடன் தனித்தனியான சந்திப்பு நடைபெற்றது. டெமாசெக் நிறுவனத்தின் சேர்மனும் தலைமைச் செயல் அதிகாரியுமான தில்லான் பிள்ளை சந்திரசேகரா, செம்ப்கார்ப் நிறுவனத்தின் சேர்மனும் தலைமைச் செயல் அதிகாரியுமான கிம்யின் வாங், கேபிட்டாலேண்ட் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியான சஞ்சீவ் தாஸ்குப்தா ஆகியோருடனான சந்திப்பு வெற்றிகரமாக நிறைவடைந்து, புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. அப்போது, தமிழ்நாட்டின் தொழில்வளர்ச்சியில் அவர்கள் பங்கேற்க வேண்டும் என முதல்வர் கேட்டுக் கொண்டார். ஜப்பான் நாட்டின் முன்னணி நிறுவனமான ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனம், இந்தியாவில் முதல்முறையாக தமிழ்நாட்டில் ரூ.128 கோடி முதலீட்டில் மருத்துவ உபகரணங்கள் தயாரிப்பு தொழிற்சாலை நிறுவிட புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஜப்பான் நாட்டை சேர்ந்த 6 நிறுவனங்களுடன் ரூ.818.90 கோடி முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

"தமிழ்நாட்டின் மீதும் – தமிழ்நாடு அரசின் மீதும் தமிழ்நாட்டு மக்களின் மீதும் மிகப்பெரிய நம்பிக்கையை ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் தொழில் முதலீட்டாளர்களுக்கு ஏற்படுத்தி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி, தமிழ்நாட்டில் ஜனவரி 2024ல் நடைபெறும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அனைவரையும் அழைத்திருக்கிறேன். கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சி போலன்றித் தமிழ்நாடு மாறியிருக்கிறது, தமிழ்நாடு அரசு வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுகிறது என்ற நம்பிக்கையை தொழில் முதலீட்டாளர்களுக்கு ஏற்படுத்திய மனமகிழ்வுடன், வெற்றிகரமாக சென்னை திரும்புகிறேன்" என்று மகிழ்ச்சியோடு தன்னுடைய பயணத்தைப் பற்றி




குறிப்பிட்டார் தமிழக முதல்வர் மு .க. ஸ்டாலின்.

அவர் தமிழ்நாட்டில் இல்லாத நேரத்தில் உருவான பிரச்சனைகள் அவர் முன்பு இப்போது சவாலாக இருக்கின்றது.

அவர் தமிழ்நாட்டில் இருக்கும் போதே நடைபெற்ற கள்ளச்சாராய சம்பவத்தை அவரே ஓரளவிற்கு அதை சரி செய்து விட்டு தான் போனார். அவர் வெளிநாடு கிளம்பிச் சென்றபோது இங்கு அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களை சம்பந்தப்படுத்தி வருமான வரி சோதனை செய்திகள் வெளியாயின.

கர்நாடக மாநில தேர்தல் முடிவு காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. 2024 மக்களவை தேர்தலில் மேன் ஆப் தி மேட்ச் ஆக முதல்வர் மு.க ஸ்டாலின் இருப்பார். முதல்வர் மு.க ஸ்டாலின் வெளிநாடு சென்று தினமும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளும் செய்திகள் வந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் இதை திசை திருப்ப வேண்டும் என்ற எண்ணத்துடன் முதல்வர் தமிழகத்தில் இல்லாத நேரத்தில் பாஜக அரசு வருமான வரி சோதனை மேற்கொண்டுள்ளது. என்று தி.மு.க அமைப்புச் செயலாளர் ஆர் .எஸ். பாரதி பேட்டி கொடுத்தார்.

இதற்குப் பிறகு ஒவ்வொரு கடைகளிலும் பத்து ரூபாய் கூடுதலாக வசூல் ஆகிறது என்று அவ்வப்போது வீடியோக்கள் வெளியாகி இந்த அரசின் மீது கடுமையான அதிருப்தி ஏற்படுமாறு சமூக வலைதளங்களில் அரசுக்கு எதிராக செயல்படும் எதிர்க்கட்சிகள் வெளியிட்டு வந்தன. இந்த அதிருப்தியை மாற்ற முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

வெயில் காலத்தில் மின்வெட்டு என்பது சாதாரணமாக ஏற்றுக் கொள்ளக் கூடியது என்றாலும் அடிக்கடி ஏற்படுகின்ற மின்தடை திமுக ஆட்சிக்கு வந்தாலே இப்படித்தான் என்கிற மனநிலைக்கு ஆட்சிக்கு எதிராக மக்களின் அதிருப்தி நிலவுகிறது. ஆனால் அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள் அப்படி எதுவும் இல்லை என்று மறுக்கிறார். மின்சாரம் சீராக கிடைக்க சரியான நடவடிக்கை எடுப்பதன் மூலம் மக்களின் அதிருப்திலிருந்து முதல்வர் தனது கட்சியை மீட்டெடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதிகாரிகள் சில பேர் அரசுக்கு எதிராக செயல்படுகிறார்களோ என்று அச்சப்படுகிற அளவுக்கு சில நேரங்களில் அறிவிப்புகள் வெளியாகின்றன. அந்த அறிவிப்புகளை மறுக்க வேண்டிய சூழல் அவ்வப்போது அமைச்சர்களுக்கு ஏற்படுகிறது. சமீபத்தில் அண்ணா பல்கலைக்கழக பாடப்பிரிவில் தமிழ் நீக்கப்பட்டு விட்டதாக செய்தி வெளியானது. இதற்கு பதில் அளித்த உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி அவர்கள் எங்களுக்கு தெரியாமலேயே அதிகாரிகள் அறிவித்து விட்டார்கள் என்று சொன்னார் . அது மட்டுமல்ல முந்தைய அதிமுக ஆட்சியில் கோலோச்சிய அதிகாரிகளே தற்போது இந்த ஆட்சியிலும் முன்னுரிமை பெற்று இருப்பதால் திமுக ஆட்சிக்கு கெட்ட பெயர் ஏற்படுத்த உள்குத்து வேலை பார்க்கிறார்களோ என்கிற அதிருப்தியும் பொதுமக்களிடையே நிலவுகிறது இதையும் முதலமைச்சர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆவின் பால் நிறுவனத்தில் தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. அந்தத் துறையின் அமைச்சர் மாற்றப்பட்ட பிறகும் அதிகாரிகள் மட்டத்தில் போதிய ஒத்துழைப்பு இல்லை என்று தெரிய வருகிறது. ஆவினுக்கு எதிரான செய்திகள் தினந்தோறும் பத்திரிகையில் வந்த வண்ணம் உள்ளன ஒருவேளை இதன் பின்னணியில் அமுல் இருக்கிறதோ என்கிற அதிருப்தியும் நிலவுகிறது. இதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சரி செய்ய வேண்டும்.

மொத்தத்தில் சில செய்திகள் முதல்வரிடத்தில் சரியான கோணத்தில் கொண்டு செல்லப்படுவதில்லை என்று சில முன்னணி பத்திரிகைகளில் வருகின்ற செய்தி கவலை அளிக்கிறது.

எனவே முதல்வர் அவர்கள் சரியான முறையில் சரியான முடிவை சரியான நேரத்தில் எடுப்பார் என்று நம்புகிறோம்.




# பேச்சுப் போட்டியில் வென்றதால் அமெரிக்கா செல்லும் மாணவி!

**தி**ருவாரூர் மாவட்டம் கல்யாணமகாதேவி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 8ம் வகுப்பு பயின்று வரும் மாணவி சாதனா, இலக்கிய திருவிழாவில் மாவட்ட அளவில் முதலிடம் பிடித்து தமிழக அளவில் சிறப்பிடம் பெற்றமைக்காக அமெரிக்கா செல்லும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் சமீபத்தில் நடத்தப்பட்ட கலை இலக்கிய திருவிழாவில் விளையாட்டு, ஓவியம், பாட்டு, பேச்சு என பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வெற்றி பெற்றவர்கள் 7 நாட்கள் கல்வி சுற்றுலாவாக சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அந்த வகையில் திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த 18 மாணவர்கள் கல்வி சுற்றுலாவுக்கு சென்னை சென்று வந்தனர்.

இவர்களில் பல்வேறு மதிப்பீடுகளின்படி முதல் 3 இடங்களை பிடித்தவர்கள் அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர். இந்த 3 பேரில் ஒருவராக அமெரிக்கா செல்ல சாதனா தேர்வாகி இருக்கிறார். சிறுமி சாதனாவின் பெற்றோர் இருவரும் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



நான் பிறந்தது, வளர்ந்தது எல்லாமே பூந்தாலங்குடி கிராமம். எங்க அப்பா, அம்மா விவசாயம் பாக்குறாங்க. எங்க ஊருக்குப் பக்கத்துல இருக்குற கல்யாண மகாதேவி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில எட்டாம் வகுப்புப் படிக்கிறேன். தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறையால நடத்தப்பட்ட இலக்கிய மன்ற விழாவுல ஜெயிச்சி, மாநில அளவுல பேச்சுப் போட்டில சிறப்பிடம் பெற்று, இப்போ அமெரிக்கா போற வாய்ப்பைப் பெற்றிருக்கேன்.

கடந்த மார்ச் மாசம் நடந்த இலக்கிய மன்ற விழாவுல நான் பேச்சுப் போட்டியில கலந்துக்கிட்டு திருவாரூர் மாவட்ட அளவுல முதலிடம் வந்தேன். அதனால என்னை சென்னைக்கு அழைச்சிட்டு போனாங்க. அதுதான் என் வாழ்க்கையிலேயே முதல் முறையா நான் சென்னைக்குப் போனது. அங்க தமிழ்நாட்டின் பல மாவட்டத்திலேர்ந்து நிறைய மாணவர்கள், என்னை மாதிரியே தேர்வாகி வந்திருந்தாங்க, அவங்க கூட பேசிப் பழகுறதுக்கு நிறைய வாய்ப்புக் கிடைச்சிது. சென்னையில நிறைய இடத்துக்கு கல்வி சுற்றுலா போனோம். சட்டசபைக்குள்ள அழைச்சிட்டுப் போனாங்க. அங்க சட்டமன்ற உறுப்பினர்களையும், முதல்வரையும் நேர்ல பார்த்தது ரொம்ப மகிழ்ச்சியா இருந்துச்சு.கிட்டத்தட்ட ஒரு வாரமா எங்களுக்கே தெரியாம எங்களை கவனிச்சுட்டு வந்த, அங்க இருந்த ஆசிரியர்கள், எங்களுடைய திறமையையும் பண்பையும் வச்சு எங்களுக்கு மதிப்பெண் போட்டாங்க. அவங்க கொடுத்த மதிப்பெண் அடிப்படையில, நான் மாநில அளவில் சிறப்பிடம் பெற்றிருக்கேன். அதனாலதான் இப்போ எனக்கு அமெரிக்கா போறதுக்கு வாய்ப்புக் கிடைச்சிருக்கு."என்று சொல்லும் போது சாதனாவின் சாதனை கண்ணில் தெரிந்தது.

– கவிஞர் சுகந்தீனா

# கடும் வெயிலில் முகத்தை பாதுகாப்பது எப்படி!

**கோ**டை வெயிலில் உடல் முழுக்க பாதிக்கப்பட்டாலும் உடனடியாக பாதிக்கப்படுவது முகம் மட்டுமே. எனவே முகத்தை பாதுகாப்பாகவும் பளபளப்பாகும் வைத்துக்கொள்ள சில எளிய வழிமுறை உள்ளது.

பொதுவாக முகம் பிரகாசமாக இருக்க, எண்ணெய் வழிவதில் இருந்து பாதுகாக்க முல்தானிமட்டி என்னும் இந்த ஒரு பொருள் பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலான அழகு பொருட்களில் முல்தானிமட்டி கலக்கப்படுகிறது. இந்த முல்தானிமட்டியுடன் எந்த பொருட்களை சேர்க்கும் பொழுது நம்முடைய முகம் மினுமினுப்பாக ஜொலிக்க செய்கிறது? என்பதைத் தான் இந்த அழகு குறிப்பு சார்ந்த பதிவின் மூலம் இனி தொடர்ந்து அறிந்து கொள்ள இருக்கிறோம்.

முல்தானி மட்டி முகத்தில் இருக்கக்கூடிய அதிகப்படியான எண்ணெய் பிசுக்கை வெளியேற்றி, முகத்தை கிருமிகளில் இருந்து பாதுகாப்பாக வைத்து மென்மையாக மாற்றுகிறது. இதனால் அதிக அளவில் இந்த முல்தானி மட்டியின் இறக்குமதியும் நடைபெறுகிறது. இதன் விலையும் மலிவாக இருப்பதால் பெரும்பாலானோர் இதை அதிகம் வாங்கி முகத்திற்கு பூசி அழகுக்காக பயன்படுத்துகின்றனர்.

இதை சாதாரணமாகவே தண்ணீரில் குழைத்து, முகத்தில் தடவி நன்கு உலர விட்டு கழுவி வந்தால் முகம் பிரகாசமாக ஜொலிக்கும். அப்படி இருக்கும் பொழுது இதனுடன் சில பொருட்களை சேர்த்து நாம் பேக் போல பயன்படுத்தும் பொழுது, எப்படியான ரிசல்ட் கிடைக்கும்? என்று பாருங்கள். ரொம்பவே அசத்தலான, சூப்பரான ரிசல்ட் முகத்தில் தெரிய முல்தானி மட்டி உடன் இந்த நான்கு பொருட்களை சேர்த்து பயன்படுத்துங்கள். இதை தனித்தனியாகவும் நீங்கள் பயன்படுத்தி விதவிதமான பிரச்சனைகளில் இருந்து விடுபடலாம். அதில் முதலாவது ஆக இருப்பது எலுமிச்சை சாறு.



எலுமிச்சை சாற்றுடன் முல்தானி மட்டி சேரும் பொழுது, முகத்தில் இருக்கக்கூடிய முகப் பருக்கு நல்ல ஒரு நிவாரணம் கிடைக்கிறது. முல்தானிமட்டி உடன் தக்காளி சாற்றை சேர்க்கும் பொழுது, முகம் வறண்ட தன்மையிலிருந்து மாறி மிருதுவாக ஈரத்தன்மையை தக்க வைத்துக் கொள்ள உதவுகிறது. மேலும் முல்தானி மட்டி உடன் புதினா சாற்றை சேர்க்கும் பொழுது முகத்தில் இருக்கக்கூடிய முகப்பருக்கள் நீங்கி முகம் பொலிவுறுகிறது. அதேபோல



முல்தானிமட்டி உடன் பன்னீர் சேர்த்து பயன்படுத்தும் பொழுது முகம் மாசு, மரு இல்லாமல் சுருக்கங்கள் நீங்கி, இளமையை தக்க வைத்துக் கொள்ள உதவுகிறது.

அந்த வரிசையில் இந்த நான்கு பொருட்களையும் சேர்த்து பயன்படுத்தும் பொழுது அபரிமிதமான ஆற்றல் புரிந்து நம்முடைய சருமத்தை பலவிதமான பிரச்சனைகளில் இருந்து மீட்டெடுத்து, நமக்கு கண்ணாடி போல ஜொலிப்பான முகத்தை கொடுக்கிறது. ஒரு டீஸ்பூன் அளவிற்கு முல்தானி மட்டியை ஒரு சிறிய அளவிலான பௌலில் சேர்த்துக் கொள்ளுங்கள். அதனுடன் ஒரு டீஸ்பூன் எலுமிச்சை சாறு, ஒரு டீஸ்பூன் புதினா சாறு, ஒரு டீஸ்பூன் பன்னீர், ஒரு டீஸ்பூன் தக்காளி சாறு ஆகியவற்றை சேர்த்து நன்கு பேஸ்ட் போல கலந்து வைத்துக் கொள்ளுங்கள்.

பின்னர் முகத்தில் கீழிருந்து மேலாக மசாஜ் செய்வது போல தடவி மசாஜ் செய்ய வேண்டும். இப்படி செய்யும் பொழுது முகத்தில் இருக்கக்கூடிய இறந்த செல்கள் நீங்கி, புதிய செல்கள் ஊக்குவிக்கப்படுகிறது. மேலும் முக துவாரங்களுக்குள் இருக்கும் அழுக்குகளை நீக்கி, முகத்தை இறுக செய்கிறது. நன்கு அரை மணி நேரம் உலர விட்டு விடுங்கள். முகம் இறுகிவிடும், அதன் பிறகு கழுவி சுத்தம் செய்து கொள்ளுங்கள். அவ்வளவு தான் சூப்பராக முகம் கண்ணாடி போல மினுமினுப்பாக இருக்கும்.




## தாய்மொழித் தமிழே
## வாழ்க நின்புகழே!

*அருந்தமிழே*
*அரிதான அரித்தமிழே!*
*முத்தமிழே*
*முருகுத்தமிழே!*
*செந்தமிழே*
*செருக்கில்லா தமிழே!*
*வண்டமிழே*
*வன்மையில்லா தமிழே!*
*கொடுந்தமிழே*
*கொடுமையில்லா தமிழே!*
*தனித்தமிழே*
*தன்னலமில்லா தமிழே!*
*தீந்தமிழே*
*தீமையில்லா தமிழே!*
*ஒண்டமிழே*
*ஒளிவில்லா தமிழே!*
*பைந்தமிழே*
*பழிக்காத தமிழே!*
*மறைத்தமிழே*
*மறைவில்லா தமிழே!*
*வீரத்தமிழே*
*வீழ்ச்சியில்லா தமிழே!*
*மறத்தமிழே*
*மறக்கவியலா தமிழே!*
*வாழ்க வான்தமிழே!*
*வளர்க தமிழ்புகழே!*

**– பெ.விண்ணக வேளாங்கன்னி வின்சி**



*மரத்திலிருந்து*
*வீழ்ந்து உதிரும் சருகில்லை ஞானம்*
*மனத்திலிருந்து*
*வான்விரியும் சிறகு அஃது!!!!*

*தேடல் மட்டுமே தேவை அதற்கு*
*தேவை பற்றிய தேடலே நமக்கு!!!*

*ஆயிரம் போதி மரங்கள் கீழ்*
*அமர்ந்தாலும் போதாது...*
*இது மாறாத வரை!!!!*

*சுயநல பார்வை தவிர்த்து*
*பொதுநலப் பார்வையில்*
*சிந்தனை முகிழ்த்தால்...*
*போதி மரமில்லை*
*கசாப்பு கடை நிழலிலும்*
*ஞானம் கிடைக்கும் !!!!*

*புத்தன் ஞானம் அடைந்தது*
*போதி மரத்தடியில் இல்லை...*
*அவன் ஞானமடைந்த இடத்தில்தான்*
*போதி மரம் இருந்தது....!!!*

**– உமா ஸ்கந்தவேள்**



# நீட் தேர்வுக்கு மாற்று மருத்துவ படிப்புகள்!

நீட் தேர்வு தேவையில்லாத மருத்துவப் படிப்பு டாக்டர் கனவு வாய்க்குமா? வாய்க்காதா என்ற குழப்பத்தோடு இருக்கும் மாணவர்களுக்கு குறிப்பிடத்தகுந்த வாய்ப்பு, துணை மருத்துவப் படிப்புகள். தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள், சுயநிதி மருத்துவக் கல்வி நிறுவனங்களில் பல்வேறு துணை மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கான அறிவிப்பை மருத்துவக் கல்வி இயக்ககம் வெளியிட்டுள்ளது. +2 பொதுத்தேர்வில் எடுத்த மதிப்பெண்களின் அடிப்படையில் ஒற்றைச் சாளர முறையில் மாணவர்களைத் தெரிவு செய்ய, தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்கம் விண்ணப்பிப்பதற்கான விதிமுறைகளை வெளியிட்டுள்ளது.

**என்னென்ன துணை மருத்துவப் படிப்புகள் (Auxillary or para - medical courses) உள்ளன?**

1) B .Pharm - 4 ஆண்டுகள்
2) B .Sc (Nursing ) 3 ஆண்டுகள்
3) B.P.T (Bachelor of Physiotheraphy) 4 ஆண்டுகள் ( 8 செமஸ்டர்) மற்றும் 6 மாத உறைவிட இன்டர்ன்ஷிப்
4) B.A.S.L.P (Bachelor of Audiology and Speech Pathology) 4 ஆண்டுகள் மற்றும் 6 மாத உறைவிட இன்டர்ன்ஷிப்
5) B.Sc (Radiology & Imaging Technology)- 3 ஆண்டுகள் மற்றும் 6 மாத உறைவிட இன்டர்ன்ஷிப்
6) B.Sc (Radio Therapy Technology) 3 ஆண்டுகள் மற்றும் 6 மாத உறைவிட இன்டர்ன்ஷிப்
7) B.Sc (Cardio Pulmonary Perfusion Technology) 3 ஆண்டுகள் மற்றும் 1 ஆண்டு உறைவிட இன்டர்ன்ஷிப்
8 ) B.O.T (Bachalor of Occupational Theraphy)- 4 ஆண்டுகள் ( 8 செமஸ்டர்) மற்றும் 6 மாத உறைவிட இன்டெர்ன்ஷிப்
9) B.Optom (Bachalor of Ophthalmology) - 3 ஆண்டுகள் மற்றும் 1 ஆண்டு உறைவிட இன்டெர்ன்ஷிப்

**யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம்?**

இந்திய குடியுரிமையுள்ள, தமிழ்நாட்டை சொந்த மாநிலமாகக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க இயலும்.

B.Sc(Nursing) படிக்க, 31.12.2021 நிலவரப்படி 17 வயது நிறைவடைந்தவர்களும் 30 வயதுக்கு உட்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம். , எஸ்.சி, எஸ்.சி.ஏ, எஸ்.டி பிரிவினர் வயது 35 வரை இருக்கலாம். மற்ற படிப்புகளுக்கு விண்ணப்பிக்க, 31.12.2021 நிலவரப்படி 17 வயது நிரம்பியிருக்க வேண்டும்.

+2 வில் இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் ( அல்லது) இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது ஏதேனும் ஒரு பாடத்துடன் கணிதம் உள்ள பிரிவை எடுத்துப் படித்து 40 விழுக்காடு மதிப்பெண் பெற்று ஒரே தடவையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

B .Pharm / B.A.S.L.P படிப்புகளுக்கு +2வில் குறிப்பிட்ட பாடங்களின் கூட்டு சராசரியாகக் குறைந்தது 40 விழுக்காடும், எஸ்.சி, எஸ்.சி.ஏ, எஸ்.டி மாணவர்கள் +2வில் தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும். பிற படிப்புகளுக்கு +2வில் மேற்குறிப்பிட்ட பிரிவுகளை எடுத்துப் படித்துத் தேர்ச்சி பெற்றிருப்பதே தகுதியாகும்.

**எவ்வாறு மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்?**

விண்ணப்பித்த மாணவர்கள் ஒற்றைச் சாளர முறையில் +2வில் எடுத்த மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். மாநிலப் பாடத்திட்டம் அல்லாத பாடத் திட்டமெனில், மதிப்பெண்கள் நார்மலிசேஷன் செய்யப்படும்.



**இடஒதுக்கீடு**

ஒற்றைச் சாளர முறை கவுன்சிலிங் படி, பொதுப்பிரிவினருக்கு 31 விழுக்காடும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30 விழுக்காடும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 விழுக்காடும், ஆதி திராவிடர்களுக்கு 18 விழுக்காடும், பழங்குடியினருக்கு 1 விழுக்காடும் இடஒதுக்கீடு வழங்கப்படும்.

பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 30 விழுக்காட்டில், 3.5 விழுக்காடு, முஸ்லிம்களுக்கும், ஆதி திராவிடர்களுக்கான 18 விழுக்காட்டில் 2 விழுக்காடு அருந்ததியர்களுக்கும் ஒதுக்கப்படும்

B .Sc (Nursing ), B PT, B.A.S.L.P, B.O.T- இவை 4 ஆண்டுகால படிப்புகள். மற்றவை 3 ஆண்டுகால படிப்புகள்.

அரசு கல்லூரிகளில், B.Pharm, B.A.S.L.P., B.Sc (Radiology & Imaging Tech), B.Sc (Radio Theraphy), B.Sc (Cardio Pulmonary perfusion Tech) படிப்புகளுக்கு ஆண்டுக்கு ரூ.3000 முதல் ரூ.5000 ஆகும். B.Pharm, B.Sc (Nursing), B.P.T, B.O.T போன்ற படிப்புகளுக்கு தனியார் கல்லூரிகளில் ஆண்டுக்கு முறையே, ரூ.45,000 ஆகும்.

**எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?**

அல்லது www.tnhealth.org, www.tn.gov.in ஆகிய இணையதளங்களில் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தோடு "The Secretary, Selection Committee, Kilpauk, Chennai 104 என்ற பெயரில் எடுக்கப்பட்ட 400 ரூபாய்க்கான வரைவோலையையும் இணைத்து அனுப்ப வேண்டும். எஸ்.சி, எஸ்,சி,ஏ, எஸ்.டி பிரிவினருக்குக் கட்டணம் இல்லை. முன்னாள் ராணுவத்தினர் பிள்ளைகள், மாற்றுத் திறனாளிகள் 100 ரூபாய்க்கான வரைவோலை இணைத்தால் போதும். சிறப்புப் பிரிவினர் அதற்குறிய சான்றிதழை இணைக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட விண்ணப்பத்தை நேரிலோ அல்லது அஞ்சலிலோ 'THE SECRETARY, SELECTION COMMITTEE, 162–EVR PERIYAR HIGH ROAD, KILPAUK, CHENNAI-10' என்ற முகவரிக்கு சேர்க்க வேண்டும்.

# இன்றையத் தேவை இயற்கை வேளாண்மை !



Prof. Dr.S.VINCENT
M.Phil., Ph.D., MNASc., FNABS., FRSB (Lon).

*Dean of Research*
Loyola College (College of Excellence)
&
*Formerly Director*
Loyola Institute of Frontier Energy (LIFE)
Loyola College (College of Excellence)
Nungambakkam
Chennai-600 034, INDIA
&
*Formerly Member Secretary*
Tamil Nadu State Council for Science & Technology(TNSCST)
Ministry of Higher Education
Government of Tamil Nadu
Chennai-600 025

**உ**லகெங்கும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வரும் மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக உணவின் தேவையும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. எனவே நாமும் நகர மயம் ,நவீன மயம், தொழில் மயம் என்ற உடனடித் தேவையின் அடிப்படையில் இயற்கை விவசாய முறையை கைவிட்டு நவீன விவசாய முறைக்கு மாறி,நவீன உரங்களை பயன்படுத்தி அதன் மூலம் அதிக அளவில் விவசாய உற்பத்தி பொருட்களை அதிகரித்து ஆரோக்கியமற்ற உணவுப் பொருட்களை பயன்படுத்துவதன் மூலமாக நமக்கும் நம் சந்ததியினருக்கும் பல்வேறு நோய்களை நாம் உருவாக்கிக் கொண்டே இருக்கின்றோம்.... மனிதனாகப் பிறந்த நமக்கும் நம்மை சார்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிற கால்நடை போன்ற பிற உயிரினங்களுக்கும் உணவு என்பது அன்றாட தேவையாக இருக்கிறது.. எனவே நாம் அனைவருக்கும் பாதுகாப்பான இயற்கையான உணவு என்பது என்றென்றைக்கும் அவசியம்.



இன்று உலகின் பல நாடுகளில் தேவையற்ற போர்களாலும், மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்கான சரியான திட்டமிடல் இல்லா மனிதநேயமற்ற செயல்பாடுகளால்,குழந்தைகள் முதல் முதியோர் வரை தங்களின் அடிப்படை தேவைக்கு கூட அரசுகளையும்,பிறரையும் சார்ந்து இருக்கின்ற மக்களாகவும்,ஆதரவற்றவர்களாகவும்,அகதிகள ாகவும் மாற்றப்படும் நிலை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது... இது போன்று நாடுகளுக்கு இடையிலான போர்களால் ஏற்படுகின்ற பாதிப்புகள் மட்டுமின்றி பல்வேறு சூழ்நிலை மாற்றங்களால் உலகில் ஏற்படுகின்ற வறுமையினை போக்கிட குறைந்த செலவில் அதிக உற்பத்தி தரும் இயற்கை விவசாயம் உலகெங்கும் உடனடி தேவையாக உள்ளது.

ஐ.நா.வின் பத்தாண்டுகளில் நீடித்த வளர்ச்சிக்கான கல்வி(2005 2014) எனும் இத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திறன்களில் பயிற்சி அளித்தல் மற்றும் களப்பணியை மேற்கொள்ள செய்தல், இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களுக்கான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்,ஆலோசனை சேவையை மேற்கொள்ளுதல, நீடித்த வளர்ச்சிக்கான கல்வி எனும் பரிவர்த்தனையினை தொடர்ந்து நடத்துவது ஆகிய பணிகளை இந்தியாவில் அகமதாபாத்தினை தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் 'சுற்றுச்சூழல் கல்விக்கான மையம்' இந்தியாவில் செயல்படுத்திட தனக்கு கிடைத்த வாய்ப்பாக கருதியே பல்வேறு செயல் திட்டங்களை ,இந்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் துணையோடு கவனம் செலுத்தி நடைமுறைப்படுத்தி வருகின்றது.

சுற்றுச்சூழல் கல்விக்கான மையம் குழந்தைகளுக்கான பாடத்திட்டத்தில் சுற்றுச்சூழல் கல்வியை கற்பிக்க வகை செய்தல், சுற்றுச்சூழல் கல்விக்கான தேர்வு முறைகள்,இளைஞர்களுக்கான கல்வி ஊடகங்கள் வாயிலாக சுற்றுச்சூழல் தகவல் அளித்தல், இயற்கையை அனுபவித்தல், சுற்றுச்சூழல் கல்வியைப் பற்றிய விழிப்புணர்வு விளக்கம் அளித்தல், நீடித்த வளர்ச்சிக்கான அறிவை நிர்வகித்தல்,தொழிலகங்களின் சுற்றுச்சூழலை போற்றிடும் தொடங்காற்றலை (இனிசியடிவ்ஸ்) ஊக்குவித்தல்,நீடித்த கிராமப்புற

வளர்ச்சி, பாதுகாப்பான நீடித்த நகர்ப்புற வளர்ச்சி, சிறந்த,சுத்தமான குடிநீர் மற்றும் கழிவு மேலாண்மை,எளிதில் சேதமடையும் பகுதிகளுக்கான சுற்றுச்சூழல் கல்வி பல்வகை உயிர்க்கோள பாதுகாப்பு,இயற்கை அமைப்பு மேம்பாடு மற்றும் பாதுகாப்பு சார்ந்த சுற்றுலா,பேரிடர் ஆயத்தம் மற்றும் புனரமைப்பு பயிற்சி அளித்தல்,தகவல் வலை பின்னல் ஏற்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாத்தல்வலிமையை உருவாக்குதல்,அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் அனைத்து சமுதாயத்தினர் பங்கேற்பதற்கு உரிய வாய்ப்புகளையும் வசதிகளையும் ஏற்படுத்தி தருதல் ஆகிய இயற்கையை பாதுகாக்கும் உயரிய நோக்கங்களின் அடிப்படையில் ஐ.நா.வின் பத்தாண்டுகளில் நீடித்த வளர்ச்சிக்கான கல்வி எனும் திட்டத்தை முன்னெடுத்து செல்லுதல், சுற்றுச்சூழல் கல்வியில் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், தேசிய ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும் தமது பங்கிற்கு ஆசிரியர்களுக்கு சுற்றுச்சூழல் சார்ந்த பயிற்சிகளை அளிப்பதோடு பள்ளி ஆசிரியர்களுக்கும்,கல்வியல் கல்லூரி பேராசிரியர்களுக்கும் அவ்வப்போது சுற்றுச்சூழல்



கல்வியில் பயிற்சியை அளித்து யுனெஸ்கோ,யுனிசெப் போன்ற சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து இயற்கை சுற்றுச்சூழலை பாதுகாக்க சிறப்பாக செயலாற்றி வருகிறது. இவ்வாறு அரசு மற்றும் அரசு சாரா கல்வி நிறுவனங்கள் மூலமாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்,பெற்றோர் என அனைவருக்கும் இயற்கை சூழ்நிலையை பாதுகாக்க விழிப்புணர்வு அளித்து பயிற்சி அளிப்பதன் மூலமாக எதிர்கால சந்ததியினர் இயற்கையோடு இணைந்த தங்களின் ஒவ்வொரு நகர்வுகளையும் முன்னெடுப்பர் எனவே நாம் ஒவ்வொருவரும் அதிக அளவிலான நெகிழி பயன்பாடு இயற்கை விவசாயத்திற்கும் ,நீர் மேலாண்மைக்கும் எதிரானது என்பதை நாம் அனைவரும் உணர்ந்து,இயற்கையை பாதுகாக்க,இயற்கை விவசாயத்தை பாதுகாக்க நெகிழி மற்றும் இயற்கைக்கு ஒவ்வாத பிற மாசு படுத்தும் செயற்கை பொருட்களை பயன்படுத்துவதை அறவே கைவிட்டு உலகிற்கே முன்னுதாரணமாய் விளங்கும் நமது தமிழக அரசின் நெகிழி இல்லா"மஞ்சப்பை" திட்டத்தை உடனடியாக பரவலாக்கி இயற்கை அன்னையை,இயற்கை விவசாயத்தின் மூலம் பாதுகாத்திட அரசின் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் நாம் ஆர்வமுடன் பங்கேற்று முனைப்போடு செயல்பட வேண்டும்.

குறிப்பாக நமது தமிழக அரசு அண்மையில் வெளியிட்ட தமிழக வேளாண் பட்ஜெட் 2023 2024ல் வேளாண் துறையை மேம்படுத்த பல்வேறு சிறப்பான திட்டங்களை வெளியிட்டுள்ளது. அதில் மிகவும் முக்கியமானது காவிரி டெல்டாவில் ஆயிரம் கோடி செலவில் வேளாண் தொழில் பெருந்தடம் அமைத்தல் மேலும் வறட்சி வெள்ள பாதிப்புகளை சமாளிக்கும் பயிர் ரகங்களை உருவாக்க முன்னுரிமை அளிக்க இருப்பது, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் ,மாவட்டங்களில் சிறுதானிய மண்டலங்கள் விரிவாக்கம் அதன் மூலம் ஊட்டச்சத்து மிக்க சிறுதானிய உற்பத்தியை அதிகரித்தல், தென்னை வளர்ச்சி மேம்பாடு, எண்ணெய் வித்துக்களின் சிறப்பு மண்டலங்கள், வட்டாரத்திற்கு ஒரு வேளாண் விஞ்ஞானி உழவர் அலுவலர் தொடர்பு திட்டம், மூன்று முதல் நான்கு கிராமங்களுக்கு ஒரு வேளாண் விரிவாக்க அலுவலர் நியமனம்,நெல் ஜெயராமன் மரபு சார் நெல் ரகங்கள் உற்பத்தி செய்து பரவலாக்குதல்,சேலம் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் கழிவு மண்ணில் இருந்து மதிப்பு கூட்டப்பட்ட இயற்கை உரம் தயாரித்தல்,மதுரை மல்லிகைக்கு இயக்கம் பலா இயக்கம்,மிளகாய் மண்டலம்,முருங்கை இயக்கம்,குளிர்கால காய்கறிகள் சாகுபடிக்கு முன்னுரிமை வழங்குதல்,நுண்ணுயிர் பாசனத்திற்கு நிதி என்ன பல்வேறு வேளாண்மை மேம்பாட்டு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.இதுபோன்று மக்களின் அவசிய தேவையை உணர்ந்து,குறிப்பாக இயற்கை விவசாயத்தை போற்றிட,பாதுகாத்திட இந்தியா மட்டுமின்றி , உலகம் முழுக்க நாம் பல்வேறு சிறப்பு திட்டங்களை வகுத்து இயற்கை விவசாயத்தின் மூலம் உலகையே பாதுகாக்க வேண்டியது இன்றைய உடனடி அவசியமாகும்.

இத்தகைய சூழ்நிலையில் நமது செந்தமிழின் 'விவசாய கோமகன்' நம்மாழ்வாரின் கூற்றாகிய " அடி காட்டிற்கு நடு மாட்டுக்கு நுனி வீட்டுக்கு" என்பதை இயற்கை விவசாயத்தின் சூத்திரமாக அமைத்து,நாம் ஒவ்வொருவரும் இயற்கை விவசாயத்தின் மாண்பினை பேணி பாதுகாத்தல் மூலம் உலக சுற்றுச்சூழலையும் அதனையே சார்ந்துள்ள அனைத்து வகை உயிர்களையும் என்றென்றும் செம்மை பெற வழி வகுப்போம்.

# வெறும் வயிற்றில் வெந்நீர் தேன் கலந்து குடிக்கலாமா?

**தே**ன் மருத்துவ குணம் நிறைந்த ஒரு பொருள். தினமும் காலையில் வெறும் வயிற்றில் வெதுவெதுப்பான நீரில் தேன் கலந்து குடிப்பதால் உடலுக்கு கிடைக்கும் நன்மைகள் ஏராளம்.

வாய்வுத் தொல்லையால் அவதிப் படுபவர்கள் வெந்நீரில் தேன் கலந்து குடித்து வந்தால் அதிலிருந்து விடுபடலாம்.

நோயெதிர்ப்பு மண்டலத்தை வலிமைப்படுத்தும் சக்தி தேனில் உள்ளது. நோய்களை உண்டாக்கும் பாக்டீரியாக்களை அழிக்கும். மேலும் நோயெதிர்ப்பு மண்டலம் வலிமையடையும்.

வெதுவெதுப்பான நீரில் தேனைக் கலந்து குடித்து வந்தால் உடலில் தேங்கியுள்ள டாக்ஸின்கள் முழுமையாக வெளியேறும். மேலும் உடலில் இருந்து கழிவுப்பொருட்களை வெளியேற்றும்.

தேனில் இருக்கக்கூடிய ஆன்டி ஆக்ஸிடன்ட் சருமத்திற்கு நல்ல பாதுகாப்பை வழங்கும். சுத்தமான மற்றும் பொலிவான சருமத்தைப் பெற உதவும்.

உடல்எடையைக்குறைக்கநினைப்பவர்கள் வெந்நீரில் தேன் கலந்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் உடல் எடை வேகமாக குறையும்.

வெதுவெதுப்பான நீரில் தேன் கலந்து குடித்து வந்தால் தொண்டையில் இருக்கும் புண் மற்றும் வறட்டு இருமலை சரிசெய்யும்.

தேனை உட்கொள்வது உங்கள் ஆரோக்கியத்திற்கு பல வழிகளில் நன்மை பயக்கும். தேனில் வைட்டமின் சி, வைட்டமின் பி6, கார்போஹைட்ரேட், அமினோ அமிலங்கள் போன்ற ஊட்டச்சத்து கூறுகள் நிறைந்துள்ளன. ஆனால் வெறும் வயிற்றில் தேனை உட்கொள்வது உங்களுக்கு அதிக நன்மை பயக்கும். காலையில் வெறும் வயிற்றில் தேனை உட்கொண்டால், உடல் எடை குறையவும், சளி தொல்லை நீங்கவும், நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தவும் உதவுகிறது. இதனுடன், தேனில் உள்ள பாக்டீரியா எதிர்ப்பு பண்புகள் தொண்டை புண் மற்றும் தொற்றுநோயிலிருந்து உங்களை பாதுகாப்பதில் வைப்பதில் உதவியாக இருக்கும்.





# மீண்டும் வருகிறது கைனடிக் லூனா வாகனம்!

இந்திய சாலைகளை ஒரு காலத்தில் ஆட்சி செய்து கொண்டிருந்த வாகனங்களில் ஒன்று கைனடிக் லூனா (Kinetic Luna). நமது அப்பாக்களும், தாத்தாக்களும் உயிருக்கு உயிராக நேசித்த மொபட் (Moped) இது. ஆனால் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பே கைனடிக் லூனாவின் உற்பத்தி நிறுத்தப்பட்டு விட்டது.

பழைய கைனடிக் லூனாவில் 50 சிசி இன்ஜின் வழங்கப்பட்டிருந்தது. இந்த இன்ஜினுடன், கைனடிக் லூனா திரும்ப வரப்போவதில்லை. மாறாக கால மாற்றத்திற்கு ஏற்ப எலெக்ட்ரிக் ஸ்கூட்டர் (Electric Scooter) அவதாரத்தில் கைனடிக் லூனா 'கம்பேக்' கொடுக்க போகிறது. இந்த விஷயம் தற்போது அதிகாரப்பூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

கைனடிக் க்ரீன் (Kinetic Green) நிறுவனத்தின் நிறுவனரும், தலைமை செயல் அதிகாரியுமான சுலஜா ஃபிரோடியா மோத்வானிதான் இந்த தகவலை தெரிவித்துள்ளார். விரைவில் விற்பனைக்கு வரவுள்ள கைனடிக் லூனா எலெக்ட்ரிக் ஸ்கூட்டரின் பெயரை அவர் தற்போது அறிவித்துள்ளார். இந்திய மக்களின் எதிர்பார்ப்புகளை எகிற வைத்துள்ள இந்த எலெக்ட்ரிக் ஸ்கூட்டர் இ லூனா '(e Luna) என்ற பெயரில் விற்பனை செய்யப்படும்.

இதில் 'e' என்பது Electric என்பதை குறிக்கிறது. கைனடிக் இ லூனா எலெக்ட்ரிக் ஸ்கூட்டரில், ஒரு முறை முழுமையாக நிரப்பினால் சுமார் 100 கிலோ மீட்டர்கள் வரை பயணம் செய்ய கூடிய வகையிலான பேட்டரி (Battery) வழங்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ரேஞ்ச் (Range), தினசரி பயன்பாடுகளுக்கு ஏற்றதாக இருக்கும். அனேகமாக இதன் விலை (Price) 50 ஆயிரம் ரூபாய் என்ற அளவில் மட்டுமே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அனேகமாக அடுத்த ஆண்டில், கைனடிக் இ லூனா முறைப்படி விற்பனைக்கு அறிமுகம் செய்யப்பட்டு விடும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இ லூனா எலெக்ட்ரிக் ஸ்கூட்டருக்கு தேவையான பாகங்களை எல்லாம் உற்பத்தி செய்யும் பணிகளை கைனடிக் க்ரீன் நிறுவனம் ஏற்கனவே தொடங்கி விட்டது. எனவே 2024ம் ஆண்டில், கைனடிக் இ லூனா எலெக்ட்ரிக் ஸ்கூட்டரை நாம் விற்பனைக்கு எதிர்பார்க்கலாம். 50 ஆயிரம் ரூபாய் என்ற விலையில் எதிர்பார்க்கப்படுவதால், கைனடிக் இ லூனா விற்பனையில் சாதிப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் அதிகம்.

அந்த காலத்தில் மிகவும் பிரபலமாக இருந்த வாகனங்கள் எல்லாம் தற்போது எலெக்ட்ரிக் அவதாரத்தில் மீண்டும் விற்பனைக்கு வந்து கொண்டுள்ளன. பஜாஜ் சேத்தக் (Bajaj Chetak) ஸ்கூட்டர் இதற்கு ஒரு உதாரணம். பஜாஜ் நிறுவனம் சேத்தக் ஸ்கூட்டரை எலெக்ட்ரிக் வடிவத்திற்கு மாற்றி தற்போது விற்பனை செய்து வருகிறது.

இந்த வரிசையில்தான் கைனடிக் லூனாவும், எலெக்ட்ரிக் அவதாரத்தில் மீண்டும் சந்தைக்கு வரவுள்ளது. ஹிந்துஸ்தான் அம்பாஸிடர் (Hindustan Ambassador) கார் கூட, எலெக்ட்ரிக் வடிவில் மீண்டும் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தகவல்கள் வெளியாகி கொண்டிருப்பது இங்கே குறிப்பிடத்தக்க விஷயம் ஆகும்.

# ஓயாமல் தொடரும் சவார்க்கர் சர்ச்சை!



மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கிற்கு அருகே பாகுர் என்ற கிராமத்தில் 1883ஆம் ஆண்டு மே 28ஆம் தேதி பிறந்த சாவர்கர் தனது பள்ளிப்பருவத்தில் திலகர் ஏற்படுத்திய சிவாஜி உற்சவம், கணபதி உற்சவம் போன்ற நிகழ்வுகளில் கலந்து கொள்ளத் தொடங்கியதோடு தனது பங்களிப்பையும் வழங்கத் தொடங்கினார்.

9 வயதில் தாயையும் 16 வயதில் தந்தையும் இழந்த அவர், தனது 15 ஆவது வயதிலேயே இந்திய விடுதலைக்காக துர்கா தேவி சிலை முன் சபதம் எடுத்ததாக கூறப்படுகிறது.

விநாயக் தாமோதர் சாவர்க்கர் என்ற பொதுவாக வி.டி. சாவர்க்கர், இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு சர்ச்சைக்குரிய வரலாற்று ஆய்வாளர்களால் கருதப்படுகிறார். விடுதலைப்போராட்ட வீரர், எழுத்தாளர், பேச்சாளர், அரசியல்வாதி உள்ளிட்ட பன்முகத்தன்மை கொண்டவராக அறியப்படும் சாவர்க்கர், பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான சுதந்திர போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

1906ஆம் ஆண்டு பாரிஸ்டர் படிப்பிற்காக லண்டன் சென்ற சாவர் அங்கு சுதந்திர இந்தியா என்ற அமைப்பை உருவாக்கினார். குண்டுகள் தயாரிக்கவும், துப்பாக்கி சுடவும் அங்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டது. ஆயுத போராட்டம் மூலம் இந்திய விடுதலையை அடைய முடியும் என்ற கருத்தாக்கத்தை சவார்க்கர் தீவிரமாக கொண்டிருந்ததாக கூறுகின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

ஆங்கிலேயர்கள் சர் கர்சன் வில்லி மற்றும் நாசிக் மாவட்ட ஆட்சியர் ஜாக்சன் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்ட வழக்கில் 1910ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் தேதி சாவர்க்கரை கைது செய்த ஆங்கிலேய அரசு அவரை கப்பல் மூலம் இந்தியாவுக்கு அனுப்பியது.

அப்போது கப்பல் கழிப்பறை ஜன்னலை உடைத்து பிரான்சின் மார்செய்ல் துறைமுகத்தை அடைந்த சாவர்க்கர் பிரஞ்சு காவலர்களால் சிறைப்பிடிக்கப்பட்டு ஆங்கிலேயர்களிடம் ஒப்படைக்கப்பட்டார். சட்டவிரோதமாக ஆயுதம் பயன்படுத்தியது, மக்களை தூண்டும் விதமாக பேசியது உள்ளிட்ட குற்றங்களுக்காக 50 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து அந்தமான் சிறைக்கு சாவர்க்கர் அனுப்பப்பட்டார்.



11 ஆண்டுகள் சிறையில் கடும் சித்ரவதைக்குள்ளான சாவர்க்கர், பிரிட்டீஷ் ஆட்சியாளர்களுக்கு 1911, 1913, 1914, 1918, 1920 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து மன்னிப்பு கடிதங்களை எழுதியதாக ஆவணங்கள் தெரிவிக்கின்றன. மன்னிப்பு கடிதங்களில் எதிரொலியாக 1920ஆம் ஆண்டு மே 2ஆம் தேதி மகாராஷ்டிராவில் உள்ள ரத்தினகிரி சிறைக்கு மாற்றப்பட்டார். பாரத புண்ணிய பூமி என்பது இந்துகள், சீக்கியர், பௌத்தர் மற்றும் ஜைனர்களுக்கு மட்டுமே சொந்தமானது. இதன் அடிப்படையில் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் இந்த நாட்டின் குடிமகனாக இருக்கமுடியாது. அவர்கள் இந்துவாக மாறினால்" இது சாத்தியம்," என்று சாவர்க்கர் கூறுகிறார். ரத்தனகிரி மாவட்டத்தைவிட்டு வெளியேறக்கூடாது. அடுத்த 5 ஆண்டுகளுக்கு அரசியல் நடவடிக்கைகளை ஈடுபடக்கூடாது என்ற ஆங்கிலேயர்களின் நிபந்தனைகளை ஏற்ற சாவர்க்கர் 1924ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி விடுதலையானார்.

காந்தியின் அரசியல் முடிவுகளை கடுமையாக விமர்சனம் செய்த சாவர்க்கர், இந்திய பிரிவினையை கடுமையாக எதிர்த்தார். 1948ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் நாள் நடந்த மகாத்மா காந்தி படுகொலையில் கைதான நாதுராம் கோட்சே உடன் கூட்டுச்சதியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பிபரவை 5ஆம் தேதி கைது செய்யப்பட்டார். பின்னர் இந்த வழக்கில் போதிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் சாவர்க்கர் விடுதலையானார்.

1966ஆம் ஆண்டு பிப்ரவரி 26ஆம் தேதி இயற்கை எய்திய நிலையில் அவருக்கு 1970ஆம் ஆண்டு தபால் தலை வெளியிடப்பட்டது. எப்போதெல்லாம் இந்து மதத்திற்கு ஆதரவாக கருத்து சொல்லப்படுகிறதோ அப்போது சவார்க்கரின் பெயரும் எப்போது எல்லாம் மதச்சார்பின்மைக்கு ஆதரவாக பேசப்படுகிறதோ அப்போதெல்லாம் சவார்க்கரின் பெயர் சர்ச்சைக்கு ஆளாகிறது.

# அகந்தையும் ஆணவமும் அழிவின் ஆரம்பம்!




லெபனானில்...

பெரும் பணக்காரர்களில் ஒருவர் எமில் புஸ்தானி. பெய்ரூத்தில் தமக்காக ஓர் அழகிய கல்லறையை பார்த்துப் பார்த்துக் கட்டினார். சொந்தமாக ஒரு ஜெட் விமானம் வைத்துக் கொண்டு அதில் அவர் மட்டும் பயணம் செய்வார்...



அப்படி பயணம் செய்யும்போது ஒருநாள் அது கடலில் விழுந்தது... அவரது உடலைக் கண்டுபிடிக்க மில்லியன் கணக்கில் டாலர்கள் செலவு செய்யபட்டன. இறுதியில் விமானம் மட்டுமே கிடைத்தது.

அவர் கட்டி வைத்த கல்லறையில் அடக்கம் செய்ய கடைசி வரை அந்த உடல் கிடைக்கவே இல்லை.

அது போல பிரிட்டனைச் சார்ந்த பெரும் பணக்கார யூதர் ரூட் சைல்ட். அவரிடமிருந்த அபரிதமான செல்வச் செழிப்பால் சில சமயம் பிரிட்டன் அரசுக்கே கடன் கொடுப்பாராம். ரொக்கமாக இருக்கும் செல்வத்தை சேமித்து வைக்க பாதுகாப்பு அம்சங்களுடன் தனியாக ஓர் அறையைக் கட்டினார்.

ஒருமுறை அங்கு நுழைந்தவர் அறியாமல் கருவூலக் கதவை அடைத்துவிட்டார். அவ்வளவு தான்..! கடைசி வரை கதவு திறக்கவே இல்லை. சப்தமிட்டார்.. கத்தினார்.. யாருக்கும் கேட்கவில்லை. காரணம், அவர் தங்குவது வீடல்ல.. அரண்மனை. பெரும்பாலும் அரண்மனையிலிருந்து பலநாள் உல்லாசப் பயணம் சென்றுவிடுவார். அன்றும் அவ்வாறே சென்றிருப்பதாக குடும்பத்தார் நினைத்தனர்.

பசியாலும் தாகத்தாலும் கத்திக் கத்தி கூச்சலிட்டு பணக்கட்டுகளுக்கு மேல் கிடந்து மரணித்தார். மரணிக்கு முன் விரலைக் காயப்படுத்தி சுவரில் எழுதினார் இப்படி: "உலகிலேயே பெரும் பணக்காரர் பசியாலும் தாகத்தாலும் இறக்கிறார்".

சில வாரங்களுக்குப் பின்னரே அவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

பணம் மட்டுமே தேவைகளை பூர்த்தி செய்கிறது என நினைப்பவர்களுக்கு ஒரு செய்தி..

ஒருநாள் உலகைப் பிரிந்தே ஆகவேண்டும். ஆயினும், எங்கே..? எப்போது..? எப்படி..? என்பது மட்டும் புரியவே புரியாது...புரியவும் முடியாது.

உல்லாசப் பயணம் சென்றால் திரும்பலாம்.. உலகைப் பிரிந்தால் திரும்ப முடியுமா..?


எனவே, யாரையும் வெறுக்காமல், யாரையும் ஒடுக்காமல், யாரையும் காயப்படுத்தாமல், யாரையும் கேவலப்படுத்தாமல், நாங்கள் மட்டுமே வசதியாக வாழ வேண்டும்... எங்களிடம் மட்டுமே பணம், வசதி இருக்க வேண்டும் என நினைக்காமல் வாழ்வோம்!

வருமானம் அதிகரிக்க அதிகரிக்க நம் செல்வமும் அதிகரிக்கும்... ஒன்றுக்கு 10 வீடுகள் வாங்கலாம்... ஆனால் நாம் தூங்கவதற்கு 6 அடி கட்டில் போதும்... அறுசுவை உணவை ஒவ்வொரு வேளையும் உண்ணலாம்.. ஆனால் மறுநாள் அதுவே மலமாகி விடும்...

உண்மையான மகிழ்வு பிறருக்கு அளிப்பதில் தான் உள்ளது... நல்ல நண்பர்களுடன் சேர்ந்து ஒரு கப் தேநீர் அருந்தும் போது கிடைக்கும் ஆனந்தம் நாம் மட்டும் தனியாக நம் வசதிக்கேற்ப ஸ்டார் ஹோட்டலில் சாப்பிடும் போது நிச்சயமாக கிடைக்காது...

சுயநலத்துடன் வாழாதீர்கள். அகந்தையில் தலைக்கனத்துடன் நடக்காதீர்கள். மனிதம் வளருங்கள்... அன்பை விதையுங்கள், சக மனிதனை மனிதனாய் மதியுங்கள்!

# எண்ணம் உயர்ந்தால் எல்லாம் உயரும்: பிளாட்டோ



எண்ணம் உயரியதாக இருந்தால் அந்த வானமும் வசப்படும்.... என்ற தத்துவத்திற்கு சொந்தக்காரர் "பிளாட்டோவின்" சில சுவாரஸ்ய தகவல்கள் இதோ....!!!

தத்துவம் என்றால் ஆங்கிலத்தில் பிலாசபி என்று பொருள். பிலா, சோபியா என்ற இரண்டு இலத்தீன் சொற்களால் உருவானது பிலாசபி என்ற சொல். பிலாஸ் என்றால் அறிவு சோபியா என்றால் நேசிப்பது. எனவே அறிவை நேசிப்பது தான் தத்துவம் என்று ஆகிறது.

அப்படி அறிவை நேசித்து அந்த நேசத்தை பரப்பியவர்களைத்தான் மாபெரும் தத்துவ ஞானிகள் ஆக உலகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் இன்று மாபெரும் தத்துவ ஞானியான பிளாட்டோவை பற்றி இந்த தொகுப்பில் பார்க்கலாம். மக்களை கவர்ந்த பண்டையை கிரேக்கர்களுள் ஒருவர்தான் பிளாட்டோ.

கிபி 427 ஆம் ஆண்டில் ஏதென்ஸில் ஒரு பணக்கார குடும்பத்தில் பிறந்தார் பிளாட்டோ. ஆனால் செல்வத்தின் மீது ஈடுபாடு இல்லாமலேயே அவர் வளர்ந்தார்.

இசையிலும், ஓவியத்திலும் அவருக்கு நிறைய ஈடுபாடுகள் இருந்தது. கவிதைகளும் எழுதுவார்.

கிரேக்கத்தில் அப்போதெல்லாம் கட்டாய ராணுவ சட்டம் இருந்ததால் பிளாட்டோ சிறிது காலம் ராணுவ சேவை ஆற்றினார். போரில் கலந்து கொண்ட அனுபவமும் அவருக்கு உண்டு. தனது இருபதாம் வயதில் சாக்ரடீசிடம் மாணவராக சேர்ந்து 8 ஆண்டுகள் அவரிடம் சீடராக இருந்தார். ஆரம்பத்தில் அரசியலில் ஆர்வம் ஏற்பட்டது. ஆனால் அப்போதைய அரசியல்வாதிகள் சுயநலவாதிகளாக இருந்ததாலும் சர்வாதிகாரமும், அநீதிகளும் மலிந்திருந்தாலும் அவருக்கு அரசியலில் வெறுப்பு ஏற்பட்டது.

அந்த சமயத்தில்தான் அவரது மானசீக குருவான சாக்கிரடீசுக்கு விஷம் கொடுத்து சாகும் தண்டனை விதிக்கப்பட்டது. அந்த மரணத்தை தடுத்து நிறுத்த முயன்றவர்களுள் இவரும் ஒருவர்.

சாக்கிரடீஸ் மீது இவருக்கு இருந்த ஈடுபாடு கண்ட ஏதேன்ஸ் நகர ஆட்சியாளர்கள் பிளாட்டோவின் மீது ராஜ துரோக குற்றம் சாட்டினர். அசம்பாவிதம் நிகழும் முன் நண்பர்களின் அறிவுரையை ஏற்று வெளியேறினார். அப்போது அவருக்கு வயது 30 தான்.

கிமு 399 ஆம் ஆண்டில் ஏதேன்ஸை விட்டுச் சென்ற பிளாட்டோ அடுத்த 12 ஆண்டுகள் எகிப்து, இத்தாலி, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு சென்று அங்கிருந்த அரசியல் முறைகளையும், சமூக அமைப்புகளையும் கண்டறிந்தார். இந்தியாவிற்கும் வந்த பிளாட்டோ இந்துக்களின் ஆத்ம தியானங்களையும் வர்ணாசிரம தர்மத்தையும் ஆராய்ந்தார்.

கிமு 387 ஆம் ஆண்டில் தன் தாய் நாட்டிற்கு திரும்பினார் பிளாட்டோ. வருங்கால சந்ததிக்கு இளைஞர்களை தயார்படுத்த விரும்பினார். தனி மனிதனின் அறிவும் பண்பும் வளர கல்வியும், தத்துவ சிந்தனையும் அவசியம் என்பதை உணர்ந்த அவர் பிளாட்டோ அகாடமி என்ற கல்வி கலைக்கூடத்தை நிறுவினார். அந்த கலைக்கூடம் தான் உலகில் தோன்றிய முதல் பல்கலைக்கழகம் என்பது குறிப்பிடத்தக்கது.

கி மு நான்காம் நூற்றாண்டில் கணிதமும், வானியலும் செழித்து விளங்குவதற்கு முக்கிய காரணம் பிளாட்டோவின் அந்த அகாடமி தான். அது தொடங்கப்பட்ட 20 ஆண்டுகளுக்குள் அதன் பெருமை உலகம் முழுவதும் பரவியது. அந்த புகழ் மிக்க அகாடமியில் கல்வி பயின்றவர்களில் முக்கியமானவர் கிரேக்கம் தந்த இன்னொரு தத்துவ ஞானி அரிஸ்டாட்டில்.

பிளாட்டோ தன்னுடைய அனுபவங்களையும், எண்ணங்களையும் ஒன்று திரட்டி எழுதிய உலகப் புகழ்பெற்ற நூல் தி ரிபப்ளிக்.

ஒரு நாடு எப்படி இருக்க வேண்டும்? அது எப்படி ஆளப்பட வேண்டும்? அது மக்கள் எப்படி இருக்க வேண்டும்? என்று 2500 ஆண்டுகளுக்கு முன்பே சிந்தித்து எழுதப்பட்ட நூல் தான் அது. அவர் உருவாக்கித் தந்த அரசியல் சித்தாந்தங்களும், சமூக அமைப்புகளும் எந்த அளவில் பொருந்தக் கூடியவனாய் இருக்கின்றன.

பெண் உரிமை என்பது இந்த 21 ஆம் நூற்றாண்டில் கூட சில நாடுகளில் அப்பட்டமாக மீறப்படும் ஒன்றாக இருக்கிறது. ஆனால் 25 நூற்றாண்டுகளுக்கு முன்பே பெண் உரிமையை வற்புறுத்தி இருக்கிறார் ப்ளேட்டோ. கிரேக்க மொழியில் பிளாட்டோ என்றால் பரந்த என்று பொருள்.

பெயருக்கு ஏற்பவே பரந்த சிந்தனைகளுக்கு சொந்தக்காரராக இருந்தார் பிளாட்டோ. இவர் ஏறக்குறைய 80 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார்.

அவருடைய இறுதிக்காலம் அமைதியாகவே கழிந்தது. பிறந்த தினத்திலேயே அவர் உயிர் பிரிந்தது. அவரது மரணத்தைக் கேட்டு மாணவர்கள் கண்ணீர் சிந்தினார்கள். ஏதேன்ஸ் நகரமே இருள் சூழ்ந்து சோக மயமாக காட்சியளித்தது. அவரது உடலை சகல மரியாதையோடு ஏதேன்ஸ் நகரமே அணிதிரண்டு சென்று அடக்கம் செய்ததாக வரலாறு கூறுகிறது.

எண்ணமே செயலுக்கு அடிப்படை என்பதுதான் பிளாட்டோவின் அடிப்படை தத்துவம். எண்ணம் உயரியதாக இருந்தால் செயலும் உயரிய தாக இருக்கும் என்று அவர் நம்பினார். அவருடைய எண்ணங்கள் உயரியதாக இருந்ததால்தான் உலகின் முதல் பல்கலைக்கழகம் உருவானது. ஒழுக்கமான அரசியல் சிந்தனைகளும் உலகம் முழுவதும் பரவின.

எனவே நம்முடைய எண்ணம் உயரியதாக இருந்தால் நம்முடைய செயல்பாடுகளும் உயரும். செயல்பாடுகள் உயர உயர நமக்கு அந்த வானமும் வசப்படும்.



# நீரிழிவு நோயும் நீங்கள் கவனிக்க வேண்டியதும்!



நீரிழிவு நோயால் ஏறக்குறைய உடம்பில் அனைத்து உறுப்புகளும் பாதிப்படைகின்றன. கீழ்க்கண்ட பாதிப்புகள் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

**இதய பாதிப்பு:** நீரிழிவு நோயாளிகளுக்கு இதயத்திற்கு செல்லும் ரத்த ஓட்டம் குறைந்து மாரடைப்பு, இதய தசை நோய் (Cardiomyopathy), உயர் ரத்த அழுத்தம் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகிறது.

**மன ஆரோக்கிய பாதிப்பு:** நீரிழிவு நோயாளிகளுக்கு மன அழுத்தத்தினால் கோபம், எரிச்சல், வெறுப்பு, சலிப்பு போன்றவை ஏற்படலாம்.கண் பாதிப்பு: கண் விழித்திரை பாதிப்பு, கண் அழுத்த நோய் (Glaucoma), கண் புரை போன்ற கண் பார்வை குறைபாடு பிரச்சினைகள் வரலாம்.



நீரிழிவு நோயாளிகளுக்கு ரத்த நாளங்கள் மற்றும் சிறுநீரக செல்கள் பாதிப்படைவதால் சிறுநீரகங்கள் வீக்கம் அடைகின்றன. ரத்தம் வடிகட்டும் செயல்பாடு குறைவதால் சிறுநீரக செயலிழப்பு ஏற்படுகிறது.

ரத்த சர்க்கரை அதிகமாகும்போது மூளையில் உள்ள நரம்பு செல்கள் பாதிப்படைந்து டிமென்ஷியா, பக்கவாதம் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம்.நீரிழிவு நோயாளிகள் சருமத்தில் கருமையாதல், சருமத்தில் தடிப்பு உருவாகுதல் (அகான்த்தோஸிஸ் நைக்ரிகன்ஸ்), தோல் தொற்று, கொப்பளங்கள், தோல் வறட்சி, அரிப்பு போன்றவை ஏற்படலாம்.

**நோய் எதிர்ப்பு மண்டல பாதிப்பு:** ரத்த சர்க்கரை அதிகமாகும்போது நோய் எதிர்ப்பு மண்டலம் வலுவிழந்து தொற்றுகள் ஏற்பட வழி வகுக்கிறது. சிறு தானியங்கள், நெல்லி, நாவல் பழம், வெந்தயம், ஆவாரம் பூ பொடி, இவை சரியான நேரத்திலும் அளவிலும் உட்கொண்டால் ரத்த சர்க்கரை அளவு கட்டுப்படுத்தப்பட்டு இந்த பாதிப்புகள் பெருமளவு குறையும்.

# மனிதன் மகிழ்ச்சிக்கு எல்லை எது?

**ம**கிழ்ச்சி. அடிப்படையாக மனிதன் 4 விஷயத்திற்காக ஏங்குகிறான்..

நல்ல ஆரோக்கியம், நிறைவான பொருளாதாரம், தனி மனித உறவு, மற்றும் சமூகத்தில் தனக்கான ஒரு அங்கீகாரம்...

இதெல்லாம் கிடைத்தாலும்... அவனுக்கு ஒரே ஒரு வியாதி என்னன்னா இல்லாததை நினைத்து கவலைப்படுவது. அவனுக்கு இருக்கிறது வச்சு சந்தோசமா வாழ தெரியாது.. காலங்காலமா அடுத்தவனை பார்த்தே அவன் வாழ்க்கையே சரியா வாழ மறந்துட்டான்.

இது எல்லாத்துக்கும் காரணம் அவன் மனசு தான். நம்மோட மனசு எதிர்பார்ப்பதை கைவிட்டு வருவதை அனைத்தையும் முழுமையாக ஏற்றுக் கொள்ளும் போது அப்போ ஒரு அசாத்திய தைரியம் வரும் பாருங்க.. போடா என்ன வந்தாலும் பாத்துக்கலாம் ... அந்த நொடியில மனதுக்குள்ளேயே ஒரு அமைதியும் தெளிவும் பிறக்கும்.



மனிதனுக்க இருக்குற மிகப் பெரிய வியாதி எப்பவும் மத்தவங்களோட தன்னை உயர்வாக காட்டிக்குறே எண்ணம் தான் மூலகாரணம். இதை புரிஞ்சு தவிர்த்திட்டா நிம்மதியும் சந்தோஷமும் நம்ம வாழ்க்கையில எப்பவும் இருக்கிறது என்று கண்டுபிடித்துவிடலாம்.


## மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

ஆறாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

**ஆயுள்சந்தா : ரூ.2400.00**

**ஆறாண்டு சந்தா : ரூ.1440.00**

**ஆண்டு சந்தா : ரூ.240.00**

மேலும் விபரங்களுக்கு: **044 - 23743007/8**

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

| | | |
|---|---|---|
| Name | : | MITRA TIMES |
| A/C no | : | 50200012576292 |
| Bank | : | HDFC Bank |
| Branch | : | T.Nagar |
| IFSC | : | HDFC0000206 |


# மீண்டும் பெருந்தொற்றா!

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை!



சீனா - லாவோஸ் ரயில்வேக்காக சீனாவின் நிதி பங்களிப்பில் அந்நாட்டின் தெற்கு எல்லையில் இருந்து லாவோஸ் தலைநகர் வியன்டியேனை இணைக்கும் அதி விரைவு ரயில் பாதை அமைக்கும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகிறது. இந்த ரயில் பாதையில் முக்கிய வழித்தடங்களில் சுமார் 422 கிலோ மீட்டர் தூரம் வனப்பகுதிக்குள் வருகிறது. பெல்ட் அண்ட் ரோட் திட்டத்தின் கீழ் வரும் மிகப்பெரிய ரயில்பாதையை மலைகளை குடைந்து சுரங்கங்கள் அமைத்தும், காடுகளை அழித்தும் அமைப்பதன் மூலம் அங்குள்ள வவ்வால்கள் மனிதர்களை எளிதில் நெருங்கும் அபாயம் இருப்பதாக எச்சரிக்கின்றனர் ஆய்வாளர்கள்.

சீனா, லாவோசில் ஏற்கனவே வவ்வால் உணவுப் பொருளாகவும், அதன் ஒரு சில பகுதிகள் விவசாயத்திற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வவ்வால் உடல் பகுதிகளை சேகரித்து வழங்கும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுவதும் நடைமுறையில் உள்ளது. அதே நேரத்தில் கோவிட் 19க்கு முன்னதாக பாதிப்புகளை ஏற்படுத்திய சார்ஸ், நிபா, எபோலா உள்ளிட்ட வைரஸ்கள் வவ்வால் மூலமே பரவியதாகவும், தற்போது வனத்தை அழித்து ரயில் பாதை அமைப்பதன் மூலம் அதன் சுற்றுவட்டாரத்தில் சுமார் 25 கிலோ மீட்டர் வரை பாதிப்புக்குள்ளாகும் பகுதியாக கண்டறியப்படும் என்றும் கூறுகின்றனர் நிபுணர்கள்.



இதன் மூலமாக தெற்காசியா, சீனாவின் பெரும்பகுதி உள்ளிட்ட இடங்கள் எளிதில் பாதிக்கும் வாய்ப்பு உள்ளதாகவும், இதன் மூலம் மீண்டும் ஒரு பெருந்தொற்று உருவாக வாய்ப்பு ஏற்படும் என்றும் எச்சரிக்கின்றனர் ஆய்வாளர்கள். இது தொடர்பாக லாவோஸ் மற்றும் சீனாவின் தூதரங்களில் கேள்வி எழுப்பியும் அதற்கான எந்த விளக்கமும் இதுவரை அளிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. பொருளாதார வளர்ச்சி, வர்த்தக மேம்பாடு என்ற அடிப்படையில் அமைக்கப்படும் அதி விரைவு ரயில் பாதையால் வவ்வால் இனங்கள் மூலமாக மீண்டும் ஒரு அச்சுறுத்தல் எழுவது உலக நாடுகளை சற்று கலக்கத்தில் ஆழ்த்தி உள்ளது.

கொரோனா பெருந்தொற்றை விட அதிக பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய ஆபத்தான தொற்று நோய் பரவ வாய்ப்புள்ளது. அது பரவாமல் தடுப்பதற்கான பேச்சுவார்த்தைக்கு உலகநாடுகள் முன்னுரிமை தரவேண்டுமென உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது

ஏற்கனவே இரண்டு முறை பெரும் தொற்றால் நாடு பொருளாதார சமூக ரீதியாக பெருமளவில் பாதிக்கப்பட்டதை நினைக்கும் போது மீண்டும் ஒரு பெருந்தொற்று வந்தால் நாடு தாங்குமா என்பது கேள்விக்குறி!

மித்ரா டாக்கீஸ்

## விக்ரமுக்கு ஈடாக மாளவிகா மிரட்டும் நடிப்பு!



பொன்னியின் செல்வனில் ஆதித்த கரிகாலனாக மிரட்டிய விக்ரம் தற்போது தங்கலான் மூலம் அதிரடி காட்ட வருகிறார். பா ரஞ்சித் இயக்கத்தில் உருவாகி வரும் இப்படத்தில் பசுபதி, மாளவிகா மோகனன், பார்வதி உள்ளிட்ட பல நட்சத்திரங்கள் முக்கிய கதாபாத்திரத்தை ஏற்று நடித்து வருகின்றனர்.

மாளவிகா இப்படத்தில் தன்னுடைய கடின உழைப்பை கொடுத்திருந்தது பற்றி ஒரு பேட்டியில் வெளிப்படையாக தெரிவித்துள்ளார். அந்த வகையில் அவருடைய கேரக்டர் சக்தி வாய்ந்ததாகவும், கடுமையாகவும் இருக்கும் என தெரிவித்துள்ளார்.மேலும் அந்த கேரக்டருக்காக அவர் சிலம்பம், ஜிம்னாஸ்டிக், ரோலிங், கிங்ஸ், ஜம்ப்ஸ் போன்ற பல வித்தைகளையும் கற்றுக் கொண்டாராம். அது மட்டுமின்றி பீரியட் படமாக தங்கலான் உருவாவதால் மேக்கப் உள்ளிட்டவற்றிலும் வித்தியாசம் இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.அந்த வகையில் மாளவிகா இதுவரை நடித்த படங்களிலேயே கடினமான உடல் உழைப்பை கொடுத்த படம் இதுவாகத்தான் இருக்கும்.

குறிப்பாக விக்ரமின் நடிப்புக்கு ஈடு கொடுக்கும் வகையில் மாளவிகா மோகனன் நடிப்பு இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

## சில வரிச் செய்திகள்



**கீர்த்தி சுரேஷ்**: சாணிக் காயிதம் வெற்றிக்கு பிறகு மாரி செல்வராஜ் இயக்கத்தில் உதயநிதி ஸ்டாலின் உடன் மாமன்னன் திரைப்படத்தில் நடித்துள்ளார். அதைத்தொடர்ந்து சைரன் என்னும் படத்தில் ஜெயம் ரவிக்கு ஜோடியாக நடிக்க உள்ளார். அடுத்தடுத்த பட வாய்ப்புகள் தேடி வருகிறது.

**ப்ரியா பவானி சங்கர்:** ருத்ரன், பத்து தல வெற்றிக்கு பிறகு ரா. கார்த்திக் இயக்கத்தில் வெளிவர இருக்கும் வான் என்னும் திரைப்படத்தில் துல்கர் சல்மானுக்கு ஜோடியாக நடிக்க உள்ளார். அதன் பின் இந்தியன் 2 அடுத்தடுத்த படங்களில் தன் நடிப்பினை வெளிக்காட்டி முன்னணி கதாநாயகியாக வலம் வருகிறார் ப்ரியா பவானி சங்கர்.






**காஜல் அகர்வால்:** ஷங்கர் இயக்கத்தில் வெளிவர இருக்கும் இந்தியன் 2 வில் முன்னணி ஹீரோயினாக காஜல் அகர்வால் இடம்பெறுகிறார். அதைத்தொடர்ந்து கருங்காவியம், சியான் விக்ரமின் நடிப்பில் உருவாக இருக்கும் கருடா படத்திலும் இவர் நடிக்கிறார்.



**சாய் பல்லவி:** கார்கி படத்திற்குப் பிறகு ராஜ்கமல் ஃபிலிம் இன்டர்நேஷனல் தயாரிப்பில் சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளிவர இருக்கும் எஸ்.கே 21 படத்தில் கதாநாயகியாக இருக்கிறார் சாய் பல்லவி. அதன் பின் தெலுங்கில் புஷ்பா த ரூல் ஸ்டோரி என்னும் படத்திலும் இவர் இடம் பெறுகிறார்.





**ஐஸ்வர்யா ராஜேஷ்:** ரன் பேபி ரன், ஃபர்ஹானா படத்திற்குப் பிறகு இவர் இந்தியன் 2, இடம் பொருள் ஏவல், தீயவர் குலைகள் நடுங்க போன்ற படங்களின் படப்பிடிப்பில் பிசியாக இருந்து வருகிறார் ஐஸ்வர்யா ராஜேஷ்.

பன்முகத் திறமை கொண்ட சித்தார்த் தன் முதல் படத்திலேயே கதாநாயகனாகவும் மற்றும் உதவி இயக்குனர் ஆகவும் செயல்பட்டார். இருப்பினும் குறிப்பிட்ட படங்களை தவிர்த்து மற்ற படங்கள் பெரிதும் பேசப்படாத நிலையில் தற்பொழுது அடுத்தடுத்த படங்களில் கால்ஷீட் கொடுத்து வருகிறார்.

சங்கர் இயக்கத்தில் லைக்கா தயாரிப்பில் உருவாகும் படம் தான் இந்தியன் 2. இப்படத்தில் சித்தார்த் சப்போர்ட்டிங் ரோலில் இடம் பெறுகிறார். பல எதிர்பார்ப்புகளோடு அமைய இருக்கும் இப்படத்தில் இவரின் நடிப்பு கூடுதல் வெற்றியை பெற்று தரும் என அவர் எதிர்பார்த்து வருகிறார்.



### காதர் பாட்சா என்கிற முத்துராமலிங்கம்:

## ஆர்யாவின் அட்டகாசம்!

கொம்பன், மருது, விருமன் வரிசையில் இயக்குனர் முத்தையா இயக்கத்தில் முதல்முறையாக ஆர்யா கதாநாயகனாக நடித்துள்ள திரைப்படம் தான் காதர் பாட்ஷா என்ற முத்துராமலிங்கம். ஜி ஸ்டுடியோஸ் மற்றும் ட்ரம்ஸ்டிக்ஸ் புரொடக்ஷன்ஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ள இந்த காதர் பாட்சா என்ற முத்துராமலிங்கம் படத்தில் ஆர்யாவுடன் இணைந்து வெந்து தணிந்தது காடு படத்தின் கதாநாயகி சித்தி இத்னானி கதாநாயகியாக நடித்துள்ளார். மேலும் இளைய திலகம் பிரபு, பாக்யராஜ், சிங்கம் புலி, ஆடுகளம் நரேன், தமிழ், மதுசூதன ராவ், அவினாஷ், ஸிரி.விஜய் முருகன் மற்றும் பலர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். ஸி.வேல்ராஜ் ஒளிப்பதிவில், வெங்கட் ராஜன் படத்தொகுப்பு செய்ய, காதர் பாட்சா என்ற முத்துராமலிங்கம் திரைப்படத்திற்கு ஜிவி பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார்.

"இந்த திரைப்படம் எனக்கு மிக முக்கியமான படம். முதல் முறையாக கிராமத்து வேடத்தில் நடித்துள்ளேன். இயக்குநர் முத்தையா எளிதில் திருப்தி ஆக மாட்டார். ஹீரோவை நன்றாக காட்ட வேண்டும் எனப் பயங்கரமாக உழைப்பார். ஒவ்வொரு காட்சிக்கும் கடுமையாக மெனக்கெடுவார். படத்தை மிகச்சிறப்பாக எடுத்துள்ளார். ஜிவி எப்போது தூங்குகிறார் என்றே தெரியவில்லை, நடிப்பு இசை என ஓடிக்கொண்டே இருக்கிறார். இப்படத்தில் அட்டகாசமான பாடல்கள் தந்துள்ளார். சிங்கம் புலி, நரேன் என அனைவரும் நன்றாக நடித்துள்ளனர். நாயகி சித்தி இத்னானிக்கு மிக முக்கியமான பாத்திரம் என்னை விட அவருக்குத் தான் டயலாக் அதிகம். மிக உணர்வுப்பூர்வமான படமாக வந்துள்ளது"என்கிறார் படநாயகன் ஆர்யா.

# வடிவங்கள் முதல் கழுவேத்தி மூக்கன் வரை! யார் இந்த கண்ணன் "யார்" கண்ணன்!

திரைத் துறையில் இயக்குனர்களாக இருப்பவர்கள் ஒரு கட்டத்தில் நடிகர்களாக மாறி வருகிறார்கள். பாரதிராஜா தொடங்கி பல்வேறு இயக்குனர்கள் இந்த பட்டியலில் அடங்குவார்கள். இயக்குனர்களாக இருந்து நடிகர்களாக மாறி நடிக்கும் போது அவர்கள் இயல்பாகவே தெரிகிறார்கள். காரணம் தாங்கள் இன்னொரு நடிகரிடம் என்ன எதிர்பார்க்கிறோமோ அதை தன் வடிவத்தில் காட்டுகிறார்கள். இயக்குனர்களை நடிகர்களாக இயக்கும் இயக்குனர்கள் அவர்களிடம் அதிகம் நடிப்பை பற்றி சொல்வதில்லை. உங்களுக்கு எப்படி தோன்றுகிறதோ அப்படி நடிங்க சார் என்று சொன்னாலும் இயக்குனர் சொல்படி நடப்பவர்கள் சிறந்த நடிகர்களாக ரசிகர்களால் கொண்டாடப்படுகிறார்கள். அந்த வகையில் 1982 ஆம் ஆண்டு வடிவங்கள் என்ற திரைப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமாகி பல்வேறு திரைப்படங்களை இயக்கி பின்னர் நடிகராக மாறி இன்றைக்கு கழுவேத்திமூக்கன் படத்தில் சிறப்பாக பேசப்படுபவர் "யார்" கண்ணன். தான் இயக்கிய யார் படத்திற்கு பின் அவர் இப்படித்தான் அழைக்கப்படுகிறார்.

1957 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ந்தேதி பிறந்தார். பத்து பேரில் எட்டாவது ஆகப் பிறந்தவர் இவர். இவரது தந்தை சுதந்திரப் போராட்ட தியாகி. 1978 ல் கலைத்துறையில் தனது பயணத்தை துவக்கிய யார் கண்ணன் 45 ஆண்டுகளாக மேடைப் பேச்சாளர், கவிஞர், பாடலாசிரியர், கதாசிரியர், துணை இயக்குனர், இயக்குனர், நடிகர் என கலை வாழ்க்கையில் பல வடிவங்களை கொண்ட யார் கண்ணன் இயக்கிய முதல் படம் வடிவங்கள். தன்னுடைய கலைப் பயணத்தைப் பற்றி பல்வேறு தளங்களில் அளித்துள்ள பேட்டிகளின் சிறப்பம்சங்கள் இங்கே தொகுத்து தரப்பட்டுள்ளது.

கல்லூரி படிக்கும் பொழுது கவிதைகள் எழுதும் பழக்கம் உண்டு. அந்த கவிதைகளை ஒரு டைரியில் குறித்துக் கொண்டு வருவேன். ஒவ்வொரு கவிதையும் அந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளை கட்டாயம் சொல்லும். "அரிசி விலை பருப்பு விலை ஆனை விலை ஆன விதம் அறியாமல் உறங்குகிறான்"என்ற கவிதை விலைவாசியை குறித்து சொன்னது. இதுபோல பல சம்பவங்களை கவிதையாக நோட்டுப் புத்தகத்தில் குறித்து வந்தேன். அதேபோல எங்கள் பகுதியில் ஆன்மீக அரசியல் பொதுக்கூட்டம் நடைபெற்றால் அதற்கான அறிவிப்பினை செய்வதற்காக என் கையிலே மைக்கை கொடுப்பார்கள். கிருபானந்த வாரியார் ,கீரன், கிரிதரசாத் போன்ற ஆன்மீக பேச்சாளர்கள் வருவதை ஊர் முழுக்க ஒலிபெருக்கியில் சொல்லிக் கொண்டே வருவேன். என்னுடைய தந்தை தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அருகில் மதுக்கூர் கிராமத்தைச் சேர்ந்தசுதந்திரப் போராட்ட தியாகி . அவருடன் காங்கிரஸ் கட்சியில் நடைபெறும் கூட்டத்திற்கு விளம்பரம் செய்வேன். அம்மையார் இந்திரா காந்தி அவர்கள் வந்த போது மன்னார்குடி முழுவதும் அவர்கள் வருகையை ஒலிபெருக்கியில் பேசியதும் அவருக்கு அருகாமையில்மேடையில் நின்றதும் வாழ்நாளில் எனக்கு கிடைக்காத பெரும்பேறு. எனக்குள்ளே கவிதை பேச்சு,




ஆகியவை உருவானதும் அதை மேலும் மெருகேற்ற என்னுடைய உறவினர்கள் சென்னைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே இயக்குனர் மகேந்திரன் பாடல் ஆசிரியர் வாய்ப்பு கேட்டு நான் எழுதிய கவிதை நோட்டுகளை கொடுத்தேன். அதைப் பார்த்து இயக்குனர் மகேந்திரன் உன் கையெழுத்து அழகாக இருக்கிறது முதலில் என்னிடம் வேலைக்கு சேர்ந்து கொள் பிறகு மற்றவற்றை பார்க்கலாம் என்றார். ஏனிப்படிகள் படத்தில்ரூ1200/_ சம்பளத்துக்கு மறக்க முடியாத அனுபவம். அப்போது1982 வடிவங்கள் என்ற திரைப்படத்தை இயக்கினேன் எதிர்பார்த்த அளவுக்கு போகவில்லை. 1984 ஆம் ஆண்டு கை கொடுக்கும் கை படத்தில் ஆற்றிய போது கலைப்புலி தாணு அவர்கள் எனக்கு அறிமுகமானார். 1985 ஆம் ஆண்டு கலைப்புலி தாணு அவர்கள் யார் என்ற படத்தை இயக்கும் வாய்ப்பை கொடுத்தார் அதற்கு பிறகு தான் என்னுடைய பெயரை யார் கண்ணன் என்றே அழைக்க ஆரம்பித்தார்கள்

தொழில்நுட்ப வசதிகள் அதிகம் இல்லாத அந்த காலத்தில் கிராபிக்ஸ் இல்லாமல் பிரம்மாண்டமான படமாக யார் திரைப்படம் வெற்றி பெற்றது எனக்கு ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது.அதேபோல சிறிய பட்ஜெட்டில் ராமராஜன் அவர்களை வைத்து நம்ம ஊரு நாயகன் என்ற படத்தை இயக்கினேன் அது வெள்ளி விழா கொண்டாடியது. இதுவும் என்னை திரையுலகம் திரும்பிப் பார்க்க வைத்தது.

2010 வரை எட்டு படங்களை இயக்கிய இவர் 2006 இல் காசு படத்தின் மூலம் நடிகராக தனது பயணத்தை தொடங்குகிறார். வண்ணத்திரையில் 2023 கழுவர்த்தி மூர்க்கன் வரை நடித்துள்ளார் இதில் சிவகார்த்திகேயனுக்கு அப்பாவாக வருத்தப்படாத வாலிபர் சங்கத்திலும் அருள்நிதிக்கு அப்பாவாக கழுவேத்தி மூக்கனிலும் நடிப்பது இவருக்கு ரசிகர்களிடையே தனித்துவத்தை ஏற்படுத்தி உள்ளது.

சின்னத்திரையிலும் தனது பயணத்தை இயக்குனர் கே பாலசந்தரின் ரகுவம்சம் தொடரில் தொடங்கி பல்வேறு முக்கிய தொலைக்காட்சி தொடர்களில் நடித்துள்ளார். 45 ஆண்டு காலமாக கலைத்துறையில் பயணிக்கும் இவரது சாதனைப் பயணம் நூறு ஆண்டுகளை தொட மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துகிறோம்.

தொகுப்பு: **கி.விடாரண்யம்**
செய்தி ஆசிரியர்

# அஞ்சலகத்தில் பிரசாத விற்பனை!

**ரா**மேஸ்வரம் கோயில் கோடி தீர்த்தம் மற்றும் பிரசாதத்தை தபால்துறையினர் டோர் டெலிவரி செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளனர்.

தீர்த்த தலமான ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயிலில் உள்ள 22 தீர்த்தங்களை நீராடினால் பாவங்கள் நீங்கி புண்ணியம் சேரும் என்பது ஐதீகம். இதில் 22வது கோடி தீர்த்தம் அனைத்து தீர்த்தங்களையும் நீராடிய மகிமை கிடைக்கும்.

இந்நிலையில் இந்த கோடி தீர்த்தத்தை தனி நபர்கள் யூடியுப் மூலம் அதிக விலைக்கு விற்பதாகவும், தீர்த்தம் உண்மையானது தானா என சந்தேகம் எழுந்தது.

இதனையடுத்து அஞ்சல் துறை, ஹிந்து அறநிலையதுறை இணைந்து ஆன்லைனில் (www.tnhrce.gov.in). 100 மி.லி., கோடி தீர்த்தம் செம்பில் அடைத்தும், 100 கிராம் கற்கண்டு, ராமநாதசுவாமி மற்றும் பர்வதவர்த்தினி அம்மன் படம், விபூதி, குங்குமம் அடங்கிய பிரசாத பாக்கெட் விற்கிறது.

இதனை ராமேஸ்வரம் அஞ்சல் துறை ஊழியர்கள் புக் செய்து அந்தந்த பகுதி அஞ்சல் துறை அலுவலகத்திற்கு அனுப்பியதும், டோர் டெலிவரி செய்யப்படுகிறது.

கோடி தீர்த்தம், பிரசாதம் அடங்கிய பார்சலை 200 கி.மீ., க்குள் உள்ள பக்தருக்கு கட்டணம் ரூ.205ம், 200 முதல் 1000 கி.மீ., வரை ரூ. 215, ஆயிரம் கி.மீ., மேல் ரூ.235 ஆகும்.

இக்கட்டணத்தை பக்தர்கள் ஆன்லைனில் செலுத்திட வேண்டும் என ராமநாதபுரம் கோட்ட அஞ்சல் துறை கண்காணிப்பாளர் தீர்த்தாரப்பன் தெரிவித்தார்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் அஞ்சல் துறை மூலம் ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயில் கோடி தீர்த்தம் 100 மி.லி செம்பில் அடைத்தும், 100 கிராம் கற்கண்டு, ராமநாதசுவாமி மற்றும் பர்வதவர்த்தினி அம்பாள் படம், விபூதி, குங்குமம் அடங்கிய பிரசாதம் ஆன்லைன் வாயிலாக விற்பனை தொடங்கப்பட்டுள்ளது.இதன் விலை ரூ.145. அஞ்சல் செலவு தனி. இதற்கான கட்டணத்தை பக்தர்கள் www.tnhrce.gov.in என்ற இந்து சமய அறநிலையத் துறை இணையதளத்தில் செலுத்தினால் பக்தர்கள் வீட்டுக்கே சென்று வழங்கப்படும் என கோயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.



# கலைஞர் 100



1924 ஆம் ஆண்டு ஜூன் 3 ஆம் தேதி திருவாரூர் மாவட்டம் திருக்குவளையில் பிறந்தார்.

1938ல் மாணவ நேசன் என்ற கையெழுத்து பகுதியை நடத்தினார் ஓடி வந்த இந்தி பெண்ணே கேள் நீ நாடி வந்த கோழை நாடு இதுவல்லவே என்று புலிக்கொடி ஏந்தி திருவாரூர் வீதிகளில் இந்திக்கு எதிராக போராட்டம் நடத்தினார்.

1942: அவரது பத்திரிக்கை 'முரசொலி' நிறுவப்பட்டது.

1957: அவர் குளித்தலை தொகுதியில் இருந்து முதன் முதலாக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1961: திமுக பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1962: தமிழ்நாடு சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

1967: பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்த போது அவரது அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1969: பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்கு பிறகு தமிழக முதல்வராக பதவியேற்றார்.

1970: உலகத் தமிழ் மாநாட்டின் ஒரு அங்கமாக இருந்தார்.

1971: இரண்டாவது முறையாக முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

1976ல் அவருடைய ஆட்சி கலைக்கப்பட்டு நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்டது அப்போது அவரது மருமகன் முரசொலி மாறன் மகன் மு .க. ஸ்டாலின் உள்ளிட்ட கட்சியினர் 500 பேர் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட போது சென்னை மவுண்ட் ரோடில் தன்னந்தனியாக நின்று போராடினார்

19891991: எம். ஜி. இராமச்சந்திரன், மறைவுக்குப் பின் மூன்றாம் முறை ஆட்சியமைத்தார்.

1996: நான்காவது முறையாக முதலமைச்சரானார்.

2006: ஐந்தாவது முறையாக மாநிலத் தேர்தலில் வெற்றிப்பெற்று, மீண்டும் முதலமைச்சரானார்.

பெரியாரின் 'குடி அரசு' இதழில் உதவி ஆசிரியாராக சிறிதுகாலம் பணியாற்றிய கருணாநிதி, நவம்பர் 11, 1945ல் குடி அரசு இதழில் 'மூனாகானா' என்கிற பெயரில் "அண்ணாமலைக்கு அரோகரா" என்றும், 'ஜனநாயகம்' இதழில் ப.ஜீவானந்தம் எழுதிய "ஈரோட்டுப்பாதை" கட்டுரைக்கு மறுப்பாக 'பேனாமுள்' என்கிற பெயரில் "எழுதவில்லை" என்றும் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

*செய்தி வாசிப்பாளாராகவும்கூட கருணாநிதி செயல்பட்டிருப்பது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கும். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இந்திய தேசிய ராணுவத்தின் மூலம் பிரிட்டிஷ் அரசை அன்றைய இந்திய எல்லைப் பகுதிகளில் இருந்து தாக்க முற்பட்ட சூழலை விளக்கி திருவாரூரில் பள்ளி மாணவராக இருந்த கருணாநிதி செய்தியாக வாசித்துள்ளார்.

"நான் பெற்ற முதல் குழந்தை". மாணவ நேசனை பிரதியெடுப்பதில் உள்ள சிரமங்களைக் களைய முற்றப்பட்டபோது தோன்றிய யோசனையின் விளைவுதான் முரசொலி. துண்டு வெளியீடுகளாக

ஆகஸ்ட் 10, 1942ல் முரசொலியைத் திருவாரூரில் தொடங்கியபோது கருணாநிதிக்கு வயது 18. அச்சகத்திலிருந்து முரசொலியை மூட்டைகளாக கட்டிக்கொண்டு ஓடம்போக்கி ஆற்றின் மூங்கில் பாலத்தை கடந்து விஜயபுரத்தில் இருந்து திருவாரூரில் இருந்த முரசொலி அலுவலகத்திற்கு தன்னுடைய நண்பர் கனகசுந்தரத்துடம் நடந்தே வந்த முரசொலியின் அந்த ஆரம்ப நாட்களை கருணாநிதி பல்வேறு சமயங்களில் நினைவுகூர்கிறார்.

துண்டு வெளியீடுகளாக முரசொலி வந்துகொண்டிருந்த சமயம். அக்டோபர் 5, 1944ல் "வருணமா? மானமா?" என்ற தலைப்பில் சிதம்பரத்தில் நடைபெறவிருந்த வருணாசிரம மாநாட்டைக் கண்டித்து முரசொலியில் கருணாநிதி எழுதிய கட்டுரை பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, கருணாநிதி சிதம்பரத்தில் நுழைய தடை விதிக்கப்பட்டது.



தமிழ் இதழியலில் கேள்வி பதிலையும், கடித முறையையும் கையாண்டதில் கருணாநிதிக்குத் தனித்த இடம் உண்டு. அண்ணாவின் "தம்பிக்கு..." கடித முறையை ஒற்றி "உடன்பிறப்பே" என்று கருணாநிதி எழுதும் கடிதம் வெளியாகும் நாட்களில் முரசொலியில் விற்பனை வழக்கத்தைவிட கூடுதலாக இருந்திருக்கிறது. 1977 ஆரம்பித்து அக்டோபர் 2016 வரை அவர் எழுதிய கடிதங்களின் எண்ணிக்கை 3517.

முதலமைச்சராக ஆட்சியில் இருந்தபோதிலும் எதிர்கட்சித் தலைவராக ஆட்சியில் இல்லாமல் போனாலும் கருணாநிதியின் அன்றாட அலுவல் முரசொலி அலுவலகத்திற்கு வருகைதராமல் நிறைவுறாது. பயணங்களிலும்கூட தவிர்க்க முடியாத சூழல்கள் தவிர்த்து எல்லா காலங்களிலும் தொடர்ச்சியாக எழுதிவந்த கருணாநிதி எழுதிய பக்கங்களின் மொத்த எண்ணிக்கை லட்சங்களைத் தாண்டும்.

இன்றைய இளம் தலைமுறையினர் கற்றுக்கொள்ள விஷயங்கள் ஏராளமாக அவரிடம் இருந்தது.

ஒரு செயலை செய்ய முற்பட்டால் அதில் தன்னுடைய முழு கவனத்தையும் செயல்படுத்தி அதில் வெற்றி காணும் வரை கொஞ்சம் கூட மனம் தளராமல் இன்னும் சொல்லப்போனால் எதிர்த்து வருகின்ற தடைகளையும் எதிர்நோக்கி வெற்றி காண்பதில் தான் உழைப்புக்கு உரிய பலன் கிடைக்கும். அதே போல நேரம் காலம் பார்த்து உழைக்க மாட்டார் அவர். எப்போதும் ஏதேனும் ஒன்றில் தன்னுடைய கவனத்தை ஈடுபடுத்திக் கொண்டே இருப்பார். எல்லாத் துறைகளிலும் முத்திரை பதித்திருக்கிறார்.

கலைஞர் 100



# பலன் தரும் சர்க்கரைவள்ளி கிழங்கு!

**ஏ**றக்குறைய சாகாவரம் தரும் ஒரு உணவு என்ன தெரியுமா?


மிக மிக மலிவு விலையில் கார்த்திகை, மார்கழி, மாதங்களில் தெருக்களில் கொட்டி விற்கப்படும் சர்க்கரைவள்ளி கிழங்கு (Sweet Potatoes) தான் அது.

நாம் உண்ணும் உணவுகள் கலப்படமா? சுகாதாரமானதா? ஆரோக்கியமானதா? என்று தெரியாமலேயே சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறோம்.!

அவ்வாறு சாப்பிடும்போது உணவு செரித்து அதை சக்தியாக்கிய பிறகு நமது உடலில் தங்கும் கழிவுகள் தான் Free Radicals எனும் கேன்சரை உண்டாக்கும் நஞ்சு!

அத்தகைய நஞ்சு நமது வாகனங்களில் நீண்ட தூரம் அதிக நாட்கள் பயணித்த பிறகு சைலன்சரில் படிந்திருக்கும் கரிக்கழிவு போன்றது தான் அந்த Free Radicals.







எப்படி வண்டியை சர்வீஸ் விட்டு சைலன்சரை சுத்தம் செய்கிறோமோ அதற்கு இணையானது தான் நாம் உண்ணும் சர்க்கரைவள்ளி கிழங்கு (Sweet Potatoes).

அது நமது உடலில் தேங்கும் கேன்சரை உண்டாக்கும் கழிவுகளை சுத்தமாக துடைத்து எடுத்து ஒழிக்கிறது.

நீங்கள் உங்கள் வாழ்நாள் முழுக்க கேன்சர் பற்றிய பயமே இல்லாமல் வாழவேண்டும் என்று நினைத்தால் சீசனில் கிடைக்கும் சர்க்கரைவள்ளி கிழங்கை தேவையான அளவு சாப்பிடுங்கள்.

# வாய்ப்புகளைத் தேடாதீர்கள்; நீங்களே உருவாக்குங்கள்!



உலகில் வாய்ப்புகள் நிறைந்து உள்ளது. நாம் தான் அதைக் கண்டு கொள்வது இல்லை.. கொஞ்சம் மூளையை உபயோகப்படுத்தினால் நாமும் வாழ்வில் முன்னேற்றம் காணலாம்.. பொதுவாக அனைவரும் சொல்லும் ஒரே வார்த்தை சின்ன வயதில் இதுவாகணும், அதுவாகணும் என்று ஆசைப்பட்டேன்.

ஆனால் பிறகு அதெல்லாம் கனவாகப் போய் விட்டது. வாழ்க்கை முடிந்து விட்டது இனிமேல் என்ன இருக்கிறது என்று புலம்புவார்கள்.

முதலில் அந்த எண்ணத்தில் இருந்து வெளியே வர வேண்டும். நீங்கள் ஏதாவது ஆசைப்பட்டு இருந்தால் ஒருநாள் நிச்சயம் அது உங்கள் கைவசமாகும். அதற்கான வாய்ப்புகளை நீங்கள் உருவாக்க வேண்டும்.நடந்துபோன செயல்களில் ஏற்ப்பட்ட தோல்விகளை விட்டு விட்டு இனி நடக்கப் போகும் செயல்களை எப்படி வெற்றிகரமாக செயல்படுத்துவது என்று முடிவு செய்ய வேண்டியது நாம் தான். அது தான் உண்மை. எத்தனை இடர்பாடுகள் வந்தாலும், அத்தனையையும் தாங்கிக் கொண்டு மீண்டு வரத்தான் வேண்டும்.. மனிதனுக்கு இக்கட்டான சூழ்நிலையில் தான் மூளை அதில் இருந்து விடுபட சுறுசுறுப்பாக இயங்கி வழியைக் காண்கிறது. ஆகவே துன்பம் வரும் போது துவண்டு விடாமல் சுறுசுறுப்பாய் இயங்க வேண்டும்.

மனோதிடம் இருந்தால் எந்தச் சூழ்நிலையையும் எளிதில் சமாளித்து விடலாம் என்பதை அவ்வப்போது நினைவூட்டுகின்றனர் நம்மைச் சுற்றியிருக்கும் சிலர்.

தொழிலிலும், வாழ்க்கையிலும் வெற்றி அடைய வாய்ப்பு என்பது முக்கியத் தேவையாக இருக்கிறது. வாய்ப்பை சரியாக பயன்படுத்திக் கொள்வதற்கும், வெற்றிக்கும் இடையே தொடர்பு இருக்கிறது.

ஜப்பானைச் சேர்ந்த கோட்டானி மகோட்டோ, என்பவர் சில ஆண்டுகளுக்கு முன்பு பிழைப்பு தேடி டோக்கியோ நகரத்திற்கு வந்தார்.குடி இருக்க வீடு இல்லை.கையில் காசு இல்லை..

எத்தனையோ வேலைகளுக்கு விண்ணப்பித்தும் வேலை கிடைக்கவில்லை. சிந்தனை செய்தார். கொஞ்சம் வித்தியாசமாக தன்னையே வாடகைக்கு விட முடிவு செய்தார். "நான் வேலை அற்றவன். நகைச்சுவை உணர்வு மிக்கவன். உங்களை எப்போதும் மகிழ்ச்சியாக வைத்திருக்க என்னால் முடியும். நீங்கள் கொடுக்கும் வேலைகளை செய்வனே செய்வேன். உணவும், தங்கும் இடமும் அளித்து, மாதம் 500 ரூபாய் சம்பளம் கொடுத்தால் எனக்குப் போதும்"என்று சமூக வலைதளத்தில் வெளியிட்டார்.

நிறையப் பேர் கோட்டானியைத் தொடர்பு கொள்ள ஆரம்பித்தனர். ஓரிரு நாட்களிலிருந்து ஒரு வாரம், ஒரு மாதம் வரை இவரை வாடகைக்கு எடுத்தார்கள்.. 500 ரூபாய் மிகவும் குறைவான ஊதியம் என்பதால் உடைகள், செருப்பு, போன் கட்டணம் என்று பலவற்றையும் தாங்களாகவே விரும்பிச் செய்கிறார்கள். உலகம் அன்பால் ஆன மக்களால் நிறைந்தது என்பதைக் கண்டு கொண்டேன். இதுவரை எந்த வாடிக்கையாளரும் மோசமாக என்னை நடத்தியதில்லை என்றார்..

ஆம்..தன்னம்பிக்கை உள்ளவர்களே வாய்ப்பைச் சரியாக பயன்படுத்திக் கொள்கிறார்கள். நம்பிக்கை இல்லாதவர்களோ கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தத் தெரியாமல் அல்லல்படுகின்றார்கள்..

ஆம்.,நண்பர்களே..,

வாய்ப்பு நம்மைத் தேடி வராது. நாம் தான் தேடிப் போக வேண்டும். நம்பிக்கையுடன் இருப்பதாகக் கூறி, வரும் வாய்ப்புகளை தட்டிக் கழிக்கக் கூடாது. வாய்ப்புகள் வரும் எனக் காத்து இருப்பதை விட, வாய்ப்புகளை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்..



எஸ்.ஜானகி

# பித்தப்பை கல் நீக்கும் எளிய மருத்துவம்!

கொழுப்பு அதிகம் உள்ள உணவு உண்பதால் பித்தப்பையில் கல் உருவாகிறது. இதன் அறிகுறி வலது நெஞ்சில் வலி, நேர் பின்னே முதுகில் வலி, வலது தோளிலிருந்து உள்ளங்கை வரை வலி பரவும்.

இந்த பித்தப்பை ஒரு சிறு உறுப்பு தான் இது மனிதனின் ஈரலுக்கு கீழ் அமைந்து இருக்கும். இதனுடைய செயல் பாடுகள் என்னவென்றல், உணவு செரிமானத்தில் இந்த பித்தப்பையின் பங்கு முக்கியமானது. அது போல் இது மனிதனின் பித்த நீரை சேமித்து வைத்து கொள்ளும் ஒரு தனி அறை. நாம் உண்ணும் உணவானது செரிப்பதற்கு தேவையான அமிலத்தை நம்முடைய ஈரல் சுரக்கிறது. இந்த அமிலம் பலவகையான பொருட்களால் ஆனது.

மேற்புற வாயிற்று பகுதியில் மற்றும் முதுகு புரத்தின் மேற்புறத்தில் வலி உண்டாகும். இந்த நோய் உள்ளவர்களுக்கு குமட்டல் உண்டாகும்.

வாந்தி உண்டாகும். உணவு பாதையில் பிரச்னை உருவாகும்,வாயு தொல்லை உண்டாகும், அசீரணம் பிரச்சனைகள் உண்டாகும்.





**பித்தப்பை கல் நீங்க மருத்துவம்:**

நெருஞ்சில் இலையை பொடிசெய்து காலையில் இரண்டு ஸ்பூன் எடுத்து தண்ணீரில் கலந்து குடிக்க வேண்டும். அப்படி குடித்து வந்தால் ஆறுநாட்களில் இந்த நோயை குணப்படுத்தலாம்.

கொழுப்பு அதிகம் உள்ள உணவு உண்பதால் பித்தப்பையில் கல் உருவாகிறது. இதன் அறிகுறி வலது நெஞ்சில் வலி, நேர் பின்னே முதுகில் வலி, வலது தோளிலிரிந்து உள்ளங்கை வரை வலி பரவும். இதன் அறிகுறி தென்பட்டால் எலுமிச்சை சாரை ஒரு கப் நீரில் பிழிந்து ஒரு மணிநேரத்திற்கு ஒரு முறை அருந்தவும்.

ஒரு கப் தண்ணீரை கொதிக்க விட்டு கொதி வந்தவுடன் நெருப்பை அணைத்து, இதில் அரை டீஸ்பூன் கீழாநெல்லி கீரை பொடியை சேர்த்து கலக்கவும். பத்து நிமிடம் கழித்து நீர் ஆறியவுடன் வடிகட்டி அருந்தவும். ஒரு நாளைக்கு ஒருமுறை குடித்தால் போதும். இதை ஒரு வாரம் குடிக்கவும்.

கீழநேல்லிக் கீரை கல்லை கரைக்கும் தன்மை கொண்டது. இது பித்தப்பைக் கல், கிட்னியில் கல், கல்லீரலில் கல் அனைத்தையும் கரைக்க வல்லது. அறுவை சிகிச்சை மூலம் பித்தபையை அகற்றினால் பிற்காலங்களில் அஜீரனக் கோளறு, குடற்புண் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

**– திருமதி.தனலட்சுமி, சிவகங்கை**

# கர்நாடக காங்கிரஸ் வெற்றிக்குப் பின்னால் சசிகாந்த் ஐ.ஏ.எஸ்.!



சசிகாந்த் செந்தில் கர்நாடக கேடர் ஐஏஎஸ் அதிகாரி. தன் பணிக்காலத்தில் அவர் கர்நாடக மாநிலத்தில் சித்ரதுர்கா, ராய்ச்சூர் மாவட்டங்களில் ஆட்சியராகப் பணியாற்றியுள்ளார். பல்வேறு துறைகளிலும் பணியாற்றியுள்ளார். அதனால் அவருக்கு கர்நாடக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், தேவைகள் என்னவென்பது குறித்த ஆழமான, தெளிவான புரிதல் இருந்துள்ளது.

சசிகாந்த் செந்தில், 2019 செப்டம்பரில் தனது பணியை ராஜினாமா செய்தார். 'தேசத்தை கட்டமைக்கும் அடிப்படை அமைப்புகள் சிதைக்கப்படுகின்றன. அவற்றை காப்பாற்ற வேண்டும்' என்று கூறியே அவர் தனது பணியை ராஜினாமா செய்தார்.

அதன் பின்னர் தமிழக காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் சமூகவலைதளப் பிரிவு ஒருங்கிணைப்பாளராகவும் இருந்தார். கர்நாடகத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் முன்னாள் ஐபிஎஸ் அதிகாரியும் தமிழக பாஜக தலைவரும் அண்ணாமலை பாஜக சார்பில் தேர்தல் பணிக்காக அனுப்பப்பட்ட அதே வேளையில், காங்கிரஸ் சார்பில் களமிறக்கப்பட்டது சசிகாந்த் செந்திலே. கட்சியின் கட்டளையை ஏற்று கர்நாடக தேர்தலில் காங்கிரஸ் வெற்றிக்கான பணியை கையில் எடுத்தார். அதை இப்போது திறம்பட முடித்துள்ளார்.

அதுமட்டுமல்ல பல்வேறு தருணங்களிலும் கர்நாடக மாநிலத்தில் பாஜகவின் நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சித்துள்ளார். ஹிஜாப் தடை விவகாரம், ஊழல் விவகாரம், முஸ்லிம்களுக்கான 4 சதவீத உள் ஒதுக்கீடு ரத்து விவகாரம் என பல்வேறு முக்கியப் பிரச்சினைகள் குறித்தும் தனது சமூக வலைதள பக்கத்தில் விரிவாக விமர்சித்து வந்துள்ளார். அவை அனைத்துமே அதிக கவனம் பெற்றவையாக உள்ளன. கீழே உள்ள ட்வீட் அதற்கு ஓர் சான்று.

அதேபோல் மே 3 ஆம் தேதி சசிகாந்த் செந்தில் பதிவு செய்த ட்வீட் ஒன்று கவனம் பெற்றது. "6 மாத கால கடின உழைப்பிற்கு மே 10ஆம் பலன் கிடைக்கப்போகிறது. 'Connect centre' கனெக்ட் சென்டர் என்றழைக்கப்பட்ட காங்கிரஸ் வார் ரூம் கட்சியில் கூர்மையான தேர்தல் நிர்வாகத்தில் சிறந்த பங்களிப்பைக் கொடுத்தது" என்று பதிவிட்டிருந்தார்.

5 தேர்தல் வாக்குறுதிகளின் மூளை: காங்கிரஸ் கட்சி தனது தேர்தல் வாக்குறுதியை வெளியிட்டபோது அதில் குடும்பத் தலைவிகளுக்கு ரூ.2000 தொகை, பெண்களுக்கு இலவசப் பேருந்து உள்ளிட்ட 5 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டது. இவற்றின் மூளையாக செயல்பட்டவர் சசிகாந்த் செந்தில் என்று கூறப்படுகிறது.தேர்தல் அறிக்கையை காங்கிரஸ் வெளியிடுவதற்கு முன்னர் செந்தில் கள ஆய்வு மேற்கொண்டுள்ளார். ஒரு பெரிய குழுவுடன் இதற்காக ஒரு வார் ரூமே அவர் அமைத்துள்ளார். துடிப்பான இளைஞர்கள் நிரம்பிய அந்த வார் ரூம் மூலம் அவர் தீவிர கள ஆய்வு மேற்கொண்டு தேர்தல் அறிக்கையில் எந்த மாதிரியான அறிவிப்புகளை வெளியிட்டால் அது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை தரும் என்பது குறித்து கட்சி மேலிடத்திற்கு ஒரு அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். அதனை கவனமாக பரிசீலித்த காங்கிரஸ் மூத்த முக்கியத் தலைவர்கள் தேர்தல் அறிக்கையை இறுதி செய்து வெளியிட்டுள்ளனர்.சசிகாந்த் செந்தில் அமைத்திருந்த வார் ரூம் பற்றி மகாராஷ்டிராவை சேர்ந்த காங்கிரஸ் பிரமுகர் நிகில் காம்ப்ளே கூறுகையில், "வார் ரூமின் திட்டம் தெள்ளத் தெளிவாக இருந்தது. அவர்கள் அனைவரும் கர்நாடக மக்களின் பிரச்சினைகள் என்னவென்பதை அறிய பணிக்கப்பட்டனர். கூடவே அதற்கான தீர்வாக என்னவெல்லாம் என்பதை வகுப்பதாகவும் இருந்தது. மக்களிடமே பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர். மக்களிடம் என்ன தீர்வு எதிர்பார்க்கிறார்கள் என்றும் கேட்டறிந்தனர். இதன் அடிப்படையிலேயே மிகக் கவனமாக தேர்தல் உத்தியும், தேர்தல் அறிக்கையும் வகுக்கப்பட்டது" என்றார்.

சசிகாந்த் 1979 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சென்னையில் பிறந்தார். அவரது தந்தை பி. சண்முகம் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மற்றும் அவரது தாயார் அம்பிகா ஓய்வு பெற்ற மத்திய அரசு அதிகாரி. சசிகாந்த் திருச்சிராப்பள்ளியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முதல் வகுப்பில் பட்டம் பெற்றார் மற்றும் மின்னணுவியல் துறையில் இளங்கலை பொறியியல் பட்டம் பெற்றுள்ளார்.

# பிராது மனு மீது தீர்வு: அருள்தரும் முருகப்பெருமான்!

முருகப்பெருமான் சுயம்பு மூர்த்தியாக அருள்புரியும் கடலூர் மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற திருமுதுகுன்றம் என்ற விருத்தாசலம் அருகே உள்ள மணவாளநல்லூர், கொளஞ்சியப்பர் (சுயம்பு முருகன்), சித்திவிநாயகர்.

ஆண்டவனின் நீதிமன்றத்தில் தவறுகளுக்கு நிச்சயம் தண்டனை உண்டு, தவறு செய்து வருந்துபவர்களுக்கு மன்னிப்பும் உண்டு. அப்படிப்பட்ட அப்பழுக்கற்ற நீதியின் காவலனாகத் திருக்கோயில் கொண்டு உள்ளவரே கொளஞ்சியப்பர்.

மணவாள நல்லூர் விருத்தாசலம் சேலம் சாலையில் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது கொளஞ்சியப்பர் அருள்பாலிக்கும் மணவாள நல்லூர் திருத்தலம். இங்கே கொளஞ்சியப்பர் என்ற பெயருடன் அருள்பாலிக்கிறார் முருகப்பெருமான்.

இவ்வாலயத்தில் முருகப்பெருமான் நீதி வழங்குபவராகவும், வைத்தியராகவும் இருந்து அருள்பாலித்து வரு கிறார். எனவே தீராத நோய் உள்ளவர்கள் இத்திருத்தலத்தில் ஒரு மண்டலம், அரை மண்டலம் என அவரவர்களுக்கு வசதிப்படும் நாட்கள் தங்கி கொளஞ்சியப்பரை தரிசிப்பதுடன், அவரது சன்னிதியில் பூஜித்து வழங்கப்படும் வேப்ப எண்ணையைப் பெற்று உடம்பில் பூசியும், அருந்தியும் பூரண குணமடைந்து செல்வதும் இத்திருக்கோவிலின் மகிமையாகக் கூறலாம்.

முருகப் பெருமான் வேண்டுதல் கடவுளாக உள்ளார். பக்தர்களின் கோரிக்கைகள் பிரார்த்தனை சீட்டில் எழுதப்பட்டு இங்குள்ள தல விருட்சத்தில் வேண்டுதலாக கட்டப்படுகிறது.நியாயமான கோரிக்கைகள் 3 நாட்கள் அல்லது 3 வாரங்கள் அல்லது 3 மாதங்களில் முருகக் கடவுள் நிறை வேற்றி வைப்பார் என பக்தர்களால் நம்பப் படுகிறது.

கோவில் நிர்வாகம் ஒரு சிறு காணிக்கை பெற்றுக் கொண்டு காணிக்கை சீட்டை விநியோகிக்கிறது. பக்தர்களின் வேண்டுதல் நிறைவேறியவுடன் திரும்ப காணிக்கை செலுத்தி பிரார்த்தனை சீட்டை எடுத்து விட வேண்டும் என்பது கோவில் ஐதீகம்.

மக்கள் காகிதத்தில் எழுதி கொடுக்கும் குறைகள் முதலில் மூலவரான கொளஞ்சியப்பர் சன்னிதானத்தில் வைக்கப்பட்டு பூஜிக்கப்படுகிறது. அதன்பிறகு, கோயில் வளாகத்தின் உள்ளேயே இருக்கும் முனியப்பர் சன்னிதானத்தின் முன்புறத்தில் அமைந்துள்ள சூலம், ஈட்டி போன்றவற்றில் கட்டப்படும். தங்கள் வேண்டுதல், கோரிக்கை நிறைவேறிய பிறகு மக்கள் மீண்டும் இந்தக்கோயிலுக்கு வந்து தங்கள் பிராதினை திரும்பப் பெற்றுக்கொள்கிறார்கள். பிராது கட்டும் வேண்டுதலுக்கு வசூலிக்கும் கட்டணத்திலும் ஒரு புதுமையான முறைமை கடைபிடிக்கப்படுகிறது. கோயில் நிர்வாகத்தின் பொதுவான கட்டணத்திற்குப்



பிறகு, பிராது கட்டும் நபர் எங்கிருந்து வருகிறாரோ அந்த இடத்திற்கும் கோயிலுக்கும் இடையே உள்ள தொலைவு கணக்கிடப்பட்டு, ஒரு கிலோமீட்டருக்கு 25 பைசா வீதம் வசூலிக்கப்படுகிறது.குறைந்தபட்ச கட்டணம் பத்து ரூபாய்தான். தங்கள் ஊரிலிருந்து கோவில் வரை உள்ள தூரத்தைக் கிலோமீட்டருக்கு பத்து பைசா வீதம் கணக்கிடுகிறார்கள். கட்டணத்தைக் கணக்கிட்டு அலுவலகத்தில் செலுத்தி விட்டு ஒரு வெள்ளைத் தாளில் பிராதுகளை எழுதித் தர வேண்டும்.

இந்த ஆலயத்தில் தினசரி நான்குகால பூஜைகள் நடைபெறுகின்றது. பவுர்ணமி, கிருத்திகை போன்ற மாத பூஜைகள் தவிர, சித்திரை பவுர்ணமிஅன்று பால்குட அபிஷேக விழா, வைகாசி விசாகத்தன்று புஷ்பாஞ்சலி மற்றும் ஏக தின லட்சார்ச்சனை, கந்தசஷ்டி லட்சார்ச்சனை, ஆங்கிலப்புத்தாண்டு மற்றும் தமிழ்புத்தாண்டு வழிபாடு, பங்குனி மாதத்தில் பத்துநாட்கள் பிரம்மோற்சவம் என வருடம் முழுவதும் உற்சவங்கள் நடைபெறுகின்றன. பங்குனி உத்திரத்தின் போது நேர்த்திகடன் செலுத்த இவ்வாலயத்திற்கு ஏராளமான பக்தர்கள் வருகை தருகிறார்கள்.

மித்ரா கிட்சன்

# Wajik Cake ( Malaysian Sweet )



**தேவையான பொருட்கள்:** Glutinous Rice *(பசையுள்ள அரிசி ) - 1/2 கிலோ, தேங்காய் பால், நாட்டுச் சர்க்கரை - 300 கிராம்*

**செய்முறை :** முதலில் Glutinous அரிசியை சுத்தமாக கழுவி 2 மணி நேரம் ஊற வைத்துக் கொள்ளவும் . பின்பு ஒரு தேங்காயை துருவி தேங்காய் பால் எடுத்துக் வைத்துக் கொள்ளவும். இரண்டு மணி நேரம் கழித்து ஊறிய அரிசியை எடுத்து அதில் தேங்காய் பால் ஊற்றி இட்லி பாத்திரத்தில் வேகவைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும். பிறகு ஒரு பாத்திரத்தில் தேங்காய் பால் ஊற்றி அதில் நாட்டுச் சர்க்கரையை சேர்த்து கலந்து வைத்துக் கொள்ளவும் . பிறகு அதை வடிகட்டி வைத்துக் கொள்ளவும் . பிறகு அடுப்பில் ஒரு PAN வைத்து வடிகட்டி வைத்துள்ள தேங்காய் பால் நாட்டு சர்க்கரையை ஊற்றிக் கொள்ளவும் . சிறிது நேரம் கழித்து அதில் சிறிதளவு தேங்காய் பால் ஊற்றவும். பிறகு பாகு பதம் வரும் வரை கலந்து விட்டுக் கொண்டே இருக்கவும். பாகுபதம் வந்தவுடன் நாம் வேகவைத்த Glutinous அரிசியை இதில் சேர்த்து நன்றாக கிளறவும். பிறகு கெட்டி ஆனவுடன் சதுர வடிவTRAY வில் சிறிதளவு நெய் தடவி விட்டு அதில் ஊற்றி இரண்டு மணி நேரம் அப்படியே வைக்கவும் . பிறகு இரண்டு மணி நேரம் கழித்து சதுர வடிவில் கட் செய்யவும் . இப்பொழுது அசத்தும் சுவையில் டேஸ்டான , அட்டகாசமான , சூப்பரான சுவையில் Wajik cake மலேசியா ஸ்வீட் ரெடி.....



S.கவிதா
சிட்லபாக்கம்



**நாட்டுச் சர்க்கரையில் உள்ள சத்துக்கள்:**

நாட்டு சர்க்கரையில் பல சத்துகள் உள்ளன. இவற்றில் மிக குறைந்த அளவே கலோரிகள் உள்ளன. கால்சியம் பாஸ்பரஸ் மெக்னீசியம் ஜின்க் செலினியம் இரும்புசத்து போன்ற சத்துக்கள் நாட்டு சர்க்கரையில் நிறைந்துள்ளன. இது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது..

# Digital Marketing techniques for small businesses at Tamil Nadu

What is digital marketing Digital marketing refers to the practice of promoting products, services, or brands using digital channels and technologies. It encompasses various online marketing tactics and strategies aimed at reaching and engaging a target audience through the internet and other digital platforms. Digital marketing leverages digital devices such as computers, smartphones, tablets, and the internet to deliver marketing messages and drive desired actions. Some common components and techniques of digital marketing include:

1. Search Engine Optimization (SEO): Optimizing websites and content to improve their visibility in search engine results pages and drive organic (non-paid) traffic.

2. Pay-Per-Click (PPC) Advertising: Running paid advertising campaigns where advertisers pay a fee each time their ad is clicked. Examples include Google Ads, social media ads, and display advertising.

3. Social Media Marketing: Utilizing social media platforms like Facebook, Instagram, Twitter, LinkedIn, and others to engage with the target audience, build brand awareness, and drive website traffic.

4. Content Marketing: Creating and distributing valuable and relevant content such as blog posts, articles, videos, infographics, and podcasts to attract and retain an audience, and ultimately drive profitable customeractions.

5. Email Marketing: Sending targeted emails to a subscriber list to nurture leads, build customer relationships, and promote products or services.

6. Influencer Marketing: Collaborating with influential individuals on social media or in a specific industry to reach their audience and promote products or services.

7. Affiliate Marketing: Partnering with affiliates who earn a commission for driving traffic or sales to your business through their promotional efforts.




8. Online PR and Reputation Management: Managing and improving a company's online reputation through public relations activities, online reviews, and customer feedback.

9. Mobile Marketing: Optimizing marketing efforts for mobile devices, including mobile-optimized websites, mobile apps, and mobile advertising.

10. Analytics and Data-driven Marketing: Utilizing data and analytics tools to track and measure marketing campaigns' performance, gain insights, and make data-driven decisions for optimization and improvement. Digital marketing offers businesses the ability to target specific audiences, measure the effectiveness of marketing efforts, and often provides more cost-effective and targeted methods compared to traditional marketing approaches.

Why you should use digital marketing

There are several reasons why businesses in India should consider using digital marketing as part of their overall marketing strategy. Here are some key benefits:

1. Wide Reach: India has a large and rapidly growing internet user base. Digital marketing allows you to reach a vast audience across the country, including urban and rural areas. With the increasing penetration of smartphones and affordable internet access, more people are going online, making it a valuable channel for reaching potential customers.

2. Cost-effective: Digital marketing often offers a more cost-effective approach compared to traditional marketing methods. It allows businesses to target specific demographics and interests, ensuring that their marketing budget is spent on reaching the right audience. Compared to traditional advertising channels like television or print media, digital marketing can be more affordable, especially for small and medium-sized enterprises (SMEs).

3. Targeted Advertising: Digital marketing provides the ability to target specific audiences based on demographics, interests, behavior, and location. Platforms like social media and search engines offer advanced targeting options, allowing businesses to tailor their marketing messages to the right people at the right time. This targeting capability increases the chances of reaching potential customers who are more likely to be interested in your products or services.

4. Measurable Results: One of the significant advantages of digital marketing is the ability to measure and track campaign performance. Various analytics tools and platforms provide valuable insights into metrics such as website traffic, conversions, engagement, and ROI. This data helps businesses understand the effectiveness of their

marketing efforts and make data-driven decisions for optimization and improvement.

5. Enhanced Customer Engagement: Digital marketing channels allow for interactive and engaging content formats, such as videos, quizzes, polls, and contests. This enables businesses to foster meaningful connections with their target audience, encourage participation, and build brand loyalty. Social media platforms also provide opportunities for direct engagement with customers through comments, messages, and reviews.



6. Flexibility and Agility: Digital marketing provides flexibility in terms of adjusting campaigns, targeting, and messaging based on real-time feedback and insights. Unlike traditional marketing channels that require extensive planning and lead times, digital marketing allows businesses to quickly adapt their strategies, optimize campaigns, and respond to market trends and customer preferences.

7. Competitor Presence: Many businesses in India, including your competitors, are already leveraging digital marketing to connect with customers. By embracing digital marketing, you can stay competitive and ensure that you are not left behind. Establishing a strong online presence allows you to engage with your target audience and be visible in their digital journeys. Considering these benefits, it becomes evident that digital marketing can be a powerful tool for businesses in India to expand their reach, increase brand awareness, generate leads, and drive conversions in an increasingly digital-oriented landscape.

Difference between digital marketing and traditional marketing Digital marketing and traditional marketing in India differ in various aspects, including the channels used, targeting capabilities, reach, cost, measurability, and customer engagement. Here are the key differences between the two:

1. Channels Used: Traditional marketing in India relies on offline channels such as television, radio, print media (newspapers, magazines), billboards, and direct mail. Digital marketing, on the other hand, utilizes online channels and platforms such as websites, search engines, social media, email, mobile apps, and digital advertising networks.

2. Targeting Capabilities: Digital marketing offers more advanced targeting capabilities compared to traditional marketing. With digital channels, businesses in India can target specific demographics, interests, behaviors, and geographic locations. This enables precise audience segmentation and personalized messaging, increasing the chances of reaching the right customers. Traditional marketing methods typically have broader reach but less precise targeting options.

3. Reach and Accessibility: Digital marketing in India has the advantage of reaching a wider audience, including urban and rural areas. With the increasing penetration of smartphones and affordable internet access, more people are going online, making digital channels more accessible. Traditional marketing, on the other hand, may have limitations in terms of reach, especially in rural areas where internet access or exposure to traditional media may be limited.

4. Cost: Digital marketing often offers more cost-effective options compared to traditional marketing. Running digital campaigns, such as pay-per-click (PPC) advertising or social media advertising, can be more affordable, especially for small and medium-sized enterprises (SMEs) in India. Traditional marketing methods like television or print media can involve higher costs, production expenses, and fixed advertising rates.

5. Measurability and Analytics: Digital marketing provides extensive measurement and analytics capabilities, allowing businesses to track and measure the performance of their campaigns in real-time. Metrics such as website traffic, conversions, engagement, and ROI can be easily tracked and analyzed using various tools and platforms. Traditional marketing methods often lack the same level of measurability, making it challenging to accurately gauge the effectiveness of campaigns.

6. Customer Engagement: Digital marketing offers more interactive and engaging opportunities to connect with customers. Through social media, online content, and personalized messaging, businesses can foster meaningful interactions, encourage participation, and build brand loyalty. Traditional marketing methods, while effective in reaching broader audiences, may have limited opportunities for direct customer engagement and interaction.


7. Agility and Flexibility: Digital marketing allows for quick adjustments, optimizations, and real-time responses to market trends and customer preferences. Changes in campaigns, messaging, or targeting can be implemented promptly based on data-driven insights. Traditional marketing methods often require more lead time and planning, making them less agile in adapting to changing market conditions. It is important for businesses in India to consider both digital marketing and traditional marketing approaches based on their target audience, goals, budget, and industry. A well-rounded marketing strategy may involve a combination of digital and traditional channels to maximize reach, engagement, and results.

**Laven Lokesh Barani**
Digital Marketing Trainer,
Plant Green Inertia
Lokeshlaven@gmail.com

## நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

தொடர் 19

# கருப்பு பணம் மீட்கப்படுமா?



**துடுப்பதி ரகுநாதன்**

நமது ரிசர்வ் வங்கி மீண்டும் அதிரடியான உத்திரவு ஒன்று போட்டுள்ளது. வரும் செப்டம்பர் மாதம் வரை தான் 2000 ரூபாய் நோட்டுகளுக்கு மரியாதை! அதன் பின் அவைகள் செல்லாது!

கருப்பு பண பதுக்கலை ஒழிப்பதற்காக இந்த நடவடிக்கை என்று என்று ரிசர்வ் வங்கி இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டதாகச் சொல்லப் படுகிறது! கருப்பு பண பதுக்கலை ஒழிப்பது நல்ல நடவடிக்கை தான்! அதை பொது மக்கள் எல்லோரும் வரவேற்பார்கள்!

ஆனால் சென்ற முறை எடுத்த இதே போன்ற ரிசர்வ் வங்கியின் நடவடிக்கையால் சரியான பயன் கிடைக்கவில்லை என்ற பேச்சு இன்னும் நடந்து கொண்டு தானிருக்கிறது!

காரணம் கருப்பு பணம் பதுக்கி வைத்திருப்பவர்கள் மிகச் சிறந்த அறிவாளிகள்! பதவி சுகம் கண்ட பெரிய அரசியல் தலைவர்களும், மிக உயர்ந்த பதவியில் இருந்து அனைவரையும் மிரட்டிக் கொண்டிருந்த அதிகாரிகளும், மற்றும் அவர்களை எல்லாம் கைக்குள் போட்டுக் கொண்டு தொழில் நடத்தும் பல ஆயிரம் கோடிகளை வைத்து வியாபாரம் செய்யும் முதலாளிகளும் தான் அவர்கள்! அவர்கள் செயல் பாட்டை கட்டுப்படுத்துவது அசாரணமான விஷயம் தான்! இது போன்ற அறிவிப்புகளால் மட்டும் இந்த நடவடிக்கை போதுமா என்று சிந்திக்க வேண்டும்!

பொது மக்களுக்கு செப்டம்பர் 30 வரை தங்களிடம் உள்ள இராண்டாயிரம் நோட்டுகளை இந்த 135 நாட்களுக்கு வங்கியில் கொடுத்து மாற்றிக் கொள்ள சலுகை கொடுக்கப் பட்டுள்ளது.

சில அப்பாவி கிராம மக்கள் தங்கள் குழந்தைகளின் எதிர்கால படிப்பு, கல்யாணம் போன்ற சில காரணங்களுக்காக சில நோட்டுகளை பத்திரப் படுத்தி வைத்திருக்க கூடும்! அவர்கள் இதன் மூலம் பயன் பெறலாம்!

அரசு சார்பாக எல்லா முடிவுகளும் எடுக்கும் உயர் பதவிகளில் நீண்ட காலம் வகித்த அரசியல் தலைவர்கள், நீண்ட காலம் தன்னிடம் இருக்கும் அதிகார பலத்தால் பல உத்தரவுகள் பல உத்தரவுகளைப் போட்டு அனைவரையும் மிரட்டிக் கொண்டிருந்த உயர் அதிகாரிகள், அவர்கள் இரண்டு பேர்கள் தயவில் மாத மாதம் பல பல ஆயிரம் கோடிக்கு வியாபாரம் செய்யும் முதலாளிகள் ஆகிய இந்த மூன்று வகையினரிடம் தான் இந்த கருப்பு பணம் பதுங்கியிருக்கும்!

அந்த மூன்று வகை பிரமுகர்களும் இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகளை போட்டு அடைக்கவே தனியாக கோடவுன் வைத்திருபதாக பல செய்திகளை நாம் கேட்டிருக்கிறோம்! உண்மையில் இது போன்ற உத்தரவால் கருப்பு பணம் ஒழிக்கப் பட்டுவிடுமா என்று நன்கு யோசித்துப் பார்க்க வேண்டும்!

அந்த மூன்று வகையான மக்களும் இன்றும் செல்வாக்கோடு தான் இருக்கிறார்கள்!

இது போன்ற அரசியல் தலைவர்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கும் கட்சித் தொண்டர்கள் நிறைய இருக்கிறார்கள்!

அவர்களில் மிக நம்பிக்கையானவர்கள் நூறு பேர்களை தேர்வு செய்து அவர்களிடம் தினசரி இருபதாயிரம் மாற்றிக் கொள்ள அந்த நோட்டுகளை கொடுத்தால், அவர்களும் இந்த 135 நாட்களில் ஆள் ஒன்றுக்கு சுமார் 20 லட்சம் மாற்றி விடலாம்! நூறு பேர்களிடம் அந்த வேலையை கொடுத்தால் 20 கோடியை சுலபமாக மாற்றி விடலாம்!

இவ்வாறு அந்த புத்திசாலிகள் செய்தால் என்ன செய்வது என்று நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களுக்கே நினைக்கத் தோன்றுகிறது!

இந்த முறையாவது கருப்பு பணத்தை மாற்றவதற்கு பொது மக்களுக்கு தொல்லை கொடுக்காமல் சிறப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்! ஒரே மனிதன் இந்த 135 நாட்களில் எத்தனை முறை எத்தனை வங்கிகளில் அப்படி இரண்டாயிர்ம் ரூபாய் நோட்டுகளை கொண்டு வந்து மாற்றி இருக்கிறார்கள் என்ற கணக்கை வங்கிகள் மூலம் அரசு தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி தொகை அதிகமாக மாற்றியிருப்பவர்களிடம் அந்தப் பணம் எப்படி அவர்களுக்கு வந்தது என்று கணக்கு கேட்க வேண்டும்! அப்படி ஒரு உத்திரவு இருந்தால் நல்லது!

இந்த முறையாவது அந்த கறுப்பு ஆடுகள் தப்பிக்காமல் இருக்க அரசு நடவடிக்கை சிறப்பாக இருந்தால் அனைத்து பொது மக்கள் அனைவரும் விரும்புவார்கள்!அதே சமயத்தில்

முன்னாள் நிதிச் செயலாளர் சுபாஷ் சந்திர கார்க் “ரிசர்வ் வங்கி ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெறுவது பணமதிப்பிழப்பு நடவடிக்கை அல்ல. செப்டம்பர் 30 வரை ரூ.2000 நோட்டுகள் செல்லும் என்று தான் ரிசர்வ் வங்கி கூறி உள்ளது. ஒரு கரன்சி நோட்டை மதிப்பிழக்கச் செய்யும் அதிகாரம் அரசுக்கு மட்டுமே உள்ளது. தற்போது ரூ.2000 நோட்டுகளை மக்கள் அதிகளவில் பயன்படுத்தாததால் எந்த பாதிப்பும் வராது. இது பொருளாதாரத்திலும், நிதி அமைப்பின் செயல்பாட்டிலும் எந்த விளைவையும் ஏற்படுத்தாது. ரூ.2,000 நோட்டு அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்பே, அது விரைவில் வெளியேற்றப்பட வேண்டும் என அதன் விதி வகுக்கப்பட்ட ஒன்றாகும். அதனால்தான் 2018-19ம் ஆண்டில் ரூ.2,000 நோட்டுகள் அச்சடிப்பது முற்றிலும் நிறுத்தப்பட்டது” என்று சொன்னதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்!



# மஞ்சப்பை மகிமை, மனித குலம் அறியுமா!?

முனைவர். பா. ராம் மனோகர்



## (உலக சுற்றுச் சூழல் தினம் 05.06.23 சிறப்பு கட்டுரை )

"அட, என்னப்பா இது! ஒரு தமிழ் ஆளுங்களை கூட இந்த ஜெய்ப்பூர் நகரத்தில பார்க்க முடியல!" நானும் என் நண்பர் பாலுவும்,1985 ஆம் ஆண்டு ராஜஸ்தான் பல்கலைகழகத்தில் ஆய்வு பட்டம் பயிலும்போது ஒரு நாள் அங்கு உள்ள இளஞ் சிவப்பு நகர கடைத்தெரு, சாலையில் நடந்து கொண்டிருக்கும்போது, எங்கள் உரையாடல்!ஆனால் திடீரென்று, அருகில் ஒருவர் அந்த கால ஜவுளிக்கடை "மஞ்சப்பை "வைத்துக் கொண்டு, எங்களைத் தாண்டி சென்ற காட்சி!




ஆமாங்க !பின்னாடியே ஓடி போய் அவரிடம் "சார் நீங்க தமிழ் நாடா !?"என்று கேட்டு அறிமுகம் செய்து கொண்டு, உரையாடி மகிழ்ந்தோம்! ஒரு சாதாரண மஞ்சள் துணிப்பை, நம் மாநில அடையாளம் ஆக இருந்து வந்தது பெருமை அல்லவா !?இந்த உண்மை நிகழ்ச்சி நடக்கும் போது, நாங்கள் இருவரும் நினைக்கவில்லை,40 வருடம் கழித்து மஞ்சப்பை முற்றிலும் மறைந்து விடும் காலம் வரும்!, என்றும் உலகம் முழுவதும் மக்காத பிளாஸ்டிக் பைகள் ஆக்கிரமிப்பு செய்து மண்ணை அழிக்க ஆரம்பித்து விடும் என்று!"

இந்த ஆண்டு உலக சுற்றுச் சூழல் தினம், 05.06.23, ஐக்கிய நாட்டு சுற்றுச் சூழல் திட்டம் (UNEP) அறிவித்துள்ளது. இதன்படி மக்காத பிளாஸ்டிக் பொருட்கள் மாசுக்களுக்கு தீர்வு காணும் விதமாக, "BEAT PLASTIC POLLUTION " பிளாஸ்டிக் கழிவுகள் ஒழிப்போம் என்ற மைய கருத்தைக் கொண்டு அனைத்து நாடுகளிலும் சிறப்பாக செயல்பாடுகள் அனுசரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் உலக அளவில், ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் அளவிற்கு உள்ள பிளாஸ்டிக் 400 மில்லியன் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.இதில் 10% மட்டுமே மீள் சுழற்சி செய்யப்பட்டு வருகிறது.

மேலும் 1923 மில்லியன் டன் அளவு பிளாஸ்டிக் ஏரி, குளம், கடல் பகுதியில் வெளியேற்றம் செய்யும் வருந்தத் தக்க நிலை காணப்படுகிறது.பிளாஸ்டிக் எரித்தல், நச்சு வாயுக்கள் உருவாக்கி மனித குல ஆரோக்கியம் பாதிக்க செய்கிறது எனில் மிகையன்று!

பிளாஸ்டிக் பொருட்கள் அக்ரிலிக்ஸ், பாலியெஸ்டர், சிலிகன், பாலி யூரித்தேன் டெப் லான், பாலிப்ரோப்லீன், நைலான், பாலிகார்பனேட் என பல வகைப்படும். இதில் மக்காதவை பாலித்தீன் பிவிசி பொருட்கள் ஆகும். செல்லுலோஸ், கரி,இயற்கை எரி வாயு, குரூடு எண்ணெய் மற்றும் சில வேதி பொருட்கள் இணைந்து பிளாஸ்டிக் பொருட்கள் உருவாக்கப்படுகிறது. நிலத்தில் கொட்டப்படும் ஒரு முறை பயன்படும் பிளாஸ்டிக் கழிவுகள் மக்காது.450 ஆண்டுகளுக்கு பிறகு மக்குவதற்கு வாய்ப்புள்ளதாக அறிவியல் அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். நீரில் எறியப்படும் பிளாஸ்டிக், குறிப்பாக கடலில் உயிரினங்கள் இனப்பெருக்கம்,, அவற்றினால் நச்சு உருவாகி இறப்புகளும் நிகழ்கின்றன என்பது வேதனை! மேலும் பிளாஸ்டிக் பொருட்கள், பைகள் எரிப்பு பை பினைல் பாலி க்ளோரின் நச்சு வாயு உற்பத்தி செய்யும். மைக்ரோ பிளாஸ்டிக் கடல் நீர் உயிரிகளை கொல்லும். நம் நாட்டில் பிளாஸ்டிக் உற்பத்தி குஜராத் மாநிலத்திலும், உலக அளவில் ஐக்கிய அமெரிக்கா (42 மில்லியன் டன் /ஒரு ஆண்டு )நாட்டிலும் அதிகம் ஆகும். ஐரோப்பாவில் நார்வே நாட்டில் இந்த கழிவு இல்லை. முதலில் நம் நாட்டில் மகாராஷ்டிரா மாநிலத்தில் பாலித்தீன் பைகளுக்கு தடை விதித்தது. ஆனால் சிக்கிம் மாநிலத்தில் இந்த பிளாஸ்டிக் முழுமையாக பயன்படுத்துவது இல்லை.1986ஆம் ஆண்டிலேயே சுற்று சூழல் பாதுகாப்பு சட்டம் பிளாஸ்டிக் கழிவு பற்றிய விளக்கம் தந்தாலும்,2021 ஆம் ஆண்டு, திடக்கழிவில் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளை அரசு உருவாக்கியது.



கடந்த 2018-19 ஆம் ஆண்டுகளில், இந்தியா 17 மில்லியன் டன் பிளாஸ்டிக் உற்பத்தி செய்துள்ளது. ஆனால் 18.45 மில்லியன் டன் பிளாஸ்டிக் நம் மக்கள்பயன்படுத்தி வந்துள்ளனர். ஆம். கடந்த 20 ஆண்டுகளுக்கு முன் 0.9 மில்லியன் டன், இருந்த பிளாஸ்டிக் நுகர்வு,20 மடங்கு பெருகி விட்டது. பிளாஸ்டிக் கழிவுகள் பற்றிய பல அறிவியல் உண்மைகள் பலரும் அறிவதில்லை. அறிந்த, மக்கள் முறையாக கழிவுகள் மேலாண்மை பற்றி கவலை கொள்வது இல்லை. இதற்கு காரணம் நம் மக்கள் அலட்சியம், எப்போதும் பொருள் வாங்க செல்கையில்எவ்வித பாத்திரம், துணிப்பை எடுத்து செல்வதை கௌரவ குறைவு என தவறாக எண்ணுவது ஆகும். மேலும், பொருள் உற்பத்திநிறுவனங்கள், எல்லாவற்றையும் கவர்ச்சிகரமான பொட்டலங்கள் ஆக (PACKAGING)செய்வது , அதனால் , மாமிசம், காய்கறி, பூக்கள் போன்றவை கூட பாலித்தீன் பைகளில் வணிகம் செய்யும் நிலை வந்துவிட்டது.

தமிழ் நாடு அரசு 2018 ஆம் ஆண்டு உலக சுற்றுசூழல் தினத்தில் ஒரு முறை பயன்படுத்தி எறியும் பிளாஸ்டிக் தடை விதித்தது.2019 ஆம் ஆண்டில் முழுமையாக தடை ஏற்படுத்தி செயல்பாடு, தமிழ் நாடு மாசு கட்டுப் பாடு வாரியம் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொண்டு வந்தது. எனினும் பிளாஸ்டிக்குக்கு மாற்றாக மஞ்சள் பை திட்டம் 23.12.21 அன்று, தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கம் செய்தார். வெவ்வேறு மாற்று உபயோக பொருட்கள்விழிப்புணர்வு மாநிலம் முழுவதும் ஏற்படுத்த கண்காட்சிகள் நடத்தப்பட்டன. இந்தியாவிலேயே நம் மாநிலம் இந்த மண் மலடாக்கும் பிளாஸ்டிக் விழிப்புணர்வு தொடர்ந்து மேற்கொண்டு வருவது சிறப்பு! இந்த உலக சுற்றுசூழல் தினத்தில் நம் மக்கள் பாலித்தீன் பொருட்களுக்கு மாற்றாக, இயற்கை பொருட்களால் உருவாக்கப்பட்ட கொள்கலங்கள், பொட்டலங்கள், மஞ் சப்பை, துணிபதாகைகள், மீள்சுழற்சி பயன்பாட்டு நுகர்வோர் பொருட்கள் பயன்படுத்த உறுதி மொழி ஏற்கவேண்டும். ஒவ்வொரு நல்ல திட்டம் அரசு கொண்டு வரும்பொழுது, அதற்குரிய ஒத்துழைப்பு பொது மக்கள் தந்தால் மட்டுமே அதன் பயன்கள் முழுமையாக சமுதாயத்தினை சென்றடைய இயலும். மண்ணையும், சூழலையும் மாசு படுத்தும், பிளாஸ்டிக் கழிவு பற்றி சிந்திப்போமா!!!?

## தஞ்சையில் இருக்கும் பிரம்மாண்ட நந்தி!



**த**ஞ்சாவூர் பெரிய கோயிலில் உள்ள பெரிய நந்தி ஒரே கல்லால் செய்யப்பட்டது. இதன் உயரம் 14 மீட்டர், நீளம் 7 மீட்டர், அகலம் 3 மீட்டர் ஆகும். நந்தி மண்டபம் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர் செவ்வப்ப நாயக்கரால் கட்டப்பட்டது.

ஆரம்பத்தில் உள்ள ராஜ ராஜ சோழன் வைத்த நந்தி தற்போது இருக்கும் நந்தியயைவிட சிறியது தான் ஆனால் அதற்கு ஒரு கதை உள்ளதாக கூறுகின்றனர். கோயிலில் நுழையும் போது சிவலிங்கம் தெரிய வேண்டும் என்பதற்காக சிறிய அளவிலான நந்தியை ராஜராஜன் அமைத்தார். ஆனால் பின்பு வந்து நாயக்க மன்னர்கள் இவ்வளவு பெரிய கோயிலுக்கு சிறிய நந்தியா என்று தற்போது உள்ள பிரமாண்ட நந்தியம் பெருமானை அமைத்தனர். பின்பு ராஜ ராஜ சோழன் அமைத்த நந்தி கோயில் திருச்சுற்று மாளிகைக்கு இடம் மாற்றப்பட்டது.

நந்தி அமைந்துள்ள மண்டபம் சாதாரண மண்டபமாக இல்லாமல் ஒவ்வொரு தூணிலும் அழகான கற்சிலைகளும் மேல் பகுதியில் ஓவியங்களும் பல கதைகளை எடுத்து சொல்லுவது போல அமைந்துள்ளது. ஒரே கல்லில் அமைக்கப்பட்டுள்ள நந்தி 20 டன் எடை கொண்டதாகும். இந்த நந்தியம் பெருமான், லேபாக்ஷி கோயில் நந்திக்கு அடுத்தபடியாக இந்தியாவிலேயே 2வது பெரிய நந்தி ஆவார். தற்போது இந்த நந்தியம் பெருமானுக்கு மாதந்தோறும் நடைபெறும் பிரதோஷத்தின்போது, பால், தயிர், மஞ்சள், சந்தனம் உள்ளிட்ட திரவியங்களால் அபிஷேகம் செய்யப்படுகிறது.

மேலும் வருடத்தில் ஒரு சில நாட்களில் வரும் சனிப்பிரதோஷம் மிகவும் விசேஷமாக கருதப்படுவதால், அன்றைய தினம் நந்தியம் பெருமானுக்கு சிறப்பாக அபிஷேகம் நடைபெறுகிறது. அப்போது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நந்தியம் பெருமானை வழிபடுகின்றனர்.




*கொட்டுது கொட்டுது கோடைமழை*
*குளிருது குளிருது*
*மண்பரப்பே*
*துளிர்க்குது துளிர்க்குது செடிகொடிகள்*
*மிளிருது மிளிருது இலைதழைகள்*
*குடிக்குது குடிக்குது*
*நீர்நிலைகள்*
*நடக்குது நடக்குது*
*நதிகள்தான்*
*மகிழுது மகிழுது*
*புள்ளினங்கள்*
*குதிக்குது குதிக்குது விலங்கினங்கள்*
*செழிக்குது செழிக்குது பயிரினங்கள்*
*உயிர்க்குது உயிர்க்குது உயிரினங்கள்*
*பிறக்குது பிறக்குது*
*கற்பனைகள்*
*சிறக்குது சிறக்குது*
*கவிமணிகள்*
*மெய்க்குது மெய்க்குது கவிச்சொற்கள்*
*திரண்டிடு திரண்டிடு*
*வானமுதே*
*சேர்த்திடு சேர்த்திடு*
*முழுவதுமாய்*
*தவிர்த்திடு தவிர்த்திடு*
*தாவாக்களே!*

**சபா.வடிவேலு**
திருச்சி



# நான் உங்கள் வீட்டுப் பிள்ளை பாடல்: பூவை செங்குட்டுவனை எம்ஜிஆர்!



கண்ணதாசனும் வாலியும் எழுதிய பாடல்கள் மட்டுமே எம்ஜிஆருக்கு ஏற்றதாக அமைந்தது என்று ஒரு பொதுவான கருத்து உண்டு. ஆனால் பூவை செங்குட்டுவன் எழுதிய நான் உங்கள் வீட்டுப் பிள்ளை என்ற புதிய பூமி படத்தில் வெளியான பாடல் எம்ஜிஆர் புகழுக்கு மகுடம் சூட்டியது.

சிவகங்கைச் சீமையைச் சேர்ந்த கீழப்பூங்குடியில் ராமையா அம்பலம் லட்சுமி அம்மாள் தம்பதியின் மகனாகப் பிறந்தவர் செங்குட்டுவன். ஊரில் நடக்கும் பாட்டுக் கச்சேரிகளும், நாடகங்களும் செங்குட்டுவனை ஈர்த்தன.

பத்தும் பத்தாதற்கு இவர் குடும்பத்தார் திரையரங்கம் ஒன்றை லீசுக்கு எடுத்து நடத்தி வந்தார்கள். அதில் படங்களை பார்த்து திரைப்பட ஆசையை வளர்த்து வந்தார். வாசகசாலைக்குச் சென்று பல நூல்களைப் படித்தபோது, கலைஞரின் 'சேரன் செங்குட்டுவன்' இவரை மிகவும் கவர்ந்தது. முருகவேல் காந்தி என்ற இயற்பெயரை துறந்து, பூவை செங்குட்டுவனாக வலம்ஊரில் நாடகங்களில் பாடல்கள் எழுதி, அதில் கதாநாயகனாகவும் நடித்துவந்த செங்குட்டுவன் ஒரு கட்டத்தில் திரை ஆர்வத்தால் சென்னைக்கு புறப்பட்டு வந்தார். கைவசம் ஒரு தொழில் இருந்தால் நல்லது என்று வாடகை மிதிவண்டி நிலையக் கடை நடத்தினார். பல பேர் காசு தரவில்லை, சில பேர் மிதிவண்டியையே திருப்பித் தரவில்லை. மனைவியை ஊரில் கொண்டு போய் விடுவதும், சிறிது நாள் கழித்து அழைத்து வருவதுமாக வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது.

பின்னணிப் பாடகர் எஸ்.சி. கிருஷ்ணன் தொடர்பால் இரண்டு பாடல்களை இசைத்தட்டுக்காக எழுதினார். அதை ஊருக்கு எடுத்துப் போய் போட்டுக்காட்டி, உறவினர்களின் பாராட்டைப் பெற்றார். மனைவி மக்களைப் பட்டினி போடும் சூழ்நிலை வந்தபோது, விரக்தியின் விளிம்புக்குப் போய், எழுதி வைத்திருந்த கதைகளை எல்லாம் தீயிட்டுக் கொளுத்துவதற்காக தீப்பெட்டியை எடுத்தபோது, ஒருவர் வந்து 'நீங்கள் கொடுத்த நாடகங்கள் ரெக்கார்டு ஆகிவிட்டன. வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று சொல்லி இருக்கிறார். கிடைத்த இருநூறு ரூபாயில், குடும்பம் பசியில்லாமல் ஓடியிருக்கிறது. இவர் திருவல்லிக்கேணி அரசு நாடக மன்றத்துக்கு எழுதிய 'தம்பி தவறி விட்டான்' நாடகத்தைப் பார்த்த அறிஞர் அண்ணா, இவரைப் பாராட்டியிருக்கிறார். 'நான் பெற்ற பரிசு' நாடகத்தில் எழுதிய 'பாலுக்குப் பாலகன் பசித்து அழும்போது பாழான கல்லுக்கு, பாலாபிஷேகமா...?' பாடலைக் கேட்டு பாராட்டியிருக்கிறார் எம்.ஜி.ஆர்.

கோவைக்கூத்தன் என்னும் நண்பர் மூலமாக குன்னக்குடி வைத்தியநாதன் அறிமுகமானார். 'ஓவியன் மகள்' என்ற அவரது கதைக்கு வசனம், பாடல்களை எழுதினார் செங்குட்டுவன். நாடகப் பாடல்கள் என்றாலும், அவற்றை திரைப்படப் பாடல்களைப் போல ஒலிப்பதிவு செய்து பாராட்டுகளை அள்ளினார் குன்னக்குடி. ஒருமுறை குன்னக்குடி மிகவும் வற்புறுத்தி பக்திப் பாடல் ஒன்றை எழுதச் சொன்னார். செங்குட்டுவன் மிகவும் தயங்கினார். ஏனென்றால் அப்போது திராவிட இயக்கக் கொள்கைகளில் மிக ஈடுபாடு கொண்டவராக இருந்தார். ஆகவே பக்திப் பாடலை எப்படி எழுதுவது என்று மிகவும் தயங்கினார். ஆனாலும் குன்னக்குடி தொடர்ந்து வற்புறுத்தவே, ஒரு பாடலை எழுதினார். அதுதான் "திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால் முருகா, திருத்தணி மலை மீது எதிரொலிக்கும்..."

அந்தப் பாடலால் பெரிதும் கவரப்பட்ட குன்னக்குடியின் வேண்டுகோளின்படி எழுதப்பட்ட இன்னொரு பாடல், 'ஆடுகின்றானடி தில்லையிலே...'. இரண்டு பாடல்களையும் சூலமங்கலம் சகோதரிகள் தங்களது கச்சேரிகளில் பாடி, கைதட்டல்களைப் பெற்றார்கள். கொலம்பியா நிறுவனம் இசைத் தட்டாக வெளியிட்ட போது அந்தப் பாடல்களுக்கு வரவேற்பு அதிகமானது.

பிலிம்சேம்பரில் நடந்த ஒரு விழாவில் 'திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால்...' பாடலை இறைவணக்கப் பாடலாக சூலமங்கலம் சகோதரிகள் பாடினார்கள். விழாவுக்கு வந்திருந்த இயக்குநர் ஏ.பி. நாகராஜனுக்கும், கவியரசர் கண்ணதாசனுக்கும் அந்தப்பாடல் வெகுவாகப் பிடித்திருந்தது.

'நான் எழுதியிருந்தால் கூட இவ்வளவு சிறப்பாக வந்திருக்காது' என்று மனப்பூர்வமாக கருத்து சொன்ன கண்ணதாசன், 'இந்தப் பாடலை 'கந்தன் கருணை' படத்தில் இடம் பெறச் செய்யலாம்' என்று கூறினார்.



உடனே சம்மதித்தார் ஏ.பி. நாகராஜன். 'சென்னையிலே கந்தகோட்டமுண்டு...' என்று செங்குட்டுவன் அதில் ஒரு வரி எழுதி இருந்தார். 'கந்தன் கருணை'கதை நடக்கும் புராணகாலத்தில் சென்னை இல்லை. ஆதலால் 'சிறப்புடனே கந்தகோட்டமுண்டு...' என்று திருத்தம் செய்து 'கந்தன் கருணை'யில் இடம் பெறச் செய்தார் கண்ணதாசன். அந்தப் பாடல் பி. சுசீலாசூலமங்கலம் ராஜலட்சுமி குரல்களில் ஒலித்தது. நாடகத்துக்காக, கொலம்பியா இசைத்தட்டுக்காக, படத்துக்காக என மூன்று முறை பூவை செங்குட்டுவனுக்கு

பணத்தைப் பெற்றுத் தந்தது அப்பாடல்.இவரது முதல் பாடல் ஏ.பி.என்னின் 'கந்தன் கருணை'க்காக பதிவு செய்யப்பட்டது. ஆனாலும் முதலில் வெளிவந்த படம் 'கௌரி கல்யாணம்'. அதில் 'திருப்புகழைப் பாடப் பாட வாய் மணக்கும்...' என்று எழுதியதை பி. சுசீலாவும், சூலமங்கலம் ராஜலட்சுமியும் இணைந்து பாடி ஊர் மணக்க வைத்தார்கள். ஏ.பி. நாகராஜன் இயக்கத்தில் குன்னக்குடி இசையில் வெளிவந்த படம், 'வா ராஜா வா'. அதில் 'இறைவன் படைத்த உலகை எல்லாம் மனிதன் ஆளுகின்றான்...' என்று தத்துவமும் பக்தியும் கலந்து எழுதினார் செங்குட்டுவன். பாடி நடித்து, பாட்டுக்குப் பெருமை சேர்த்தார் சீர்காழி கோவிந்தராஜன்.

எம்.ஜி.ஆர். நடிப்பில் வி.சி. குகநாதன் இயக்கத்தில் 'புதிய பூமி' என்ற படம் உருவானது. கண்ணதாசன் எழுதி, எம்.எஸ். விஸ்வநாதன் இசையில் மூன்று பாடல்கள் பதிவு செய்யப்பட்ட நிலையில், செங்குட்டுவன் எழுதிய பாடல் ஒன்று எம்.ஜி.ஆரின் பார்வைக்குப் பல கட்டங்களைத் தாண்டிச் சென்றது. 'யாரந்த கவிஞர்?' என்று வியந்து கேட்ட எம்.ஜி.ஆர், பாடலைப் படத்தில் சேர்க்கச் சொல்லி விட்டார்.'நான் உங்கள் வீட்டுப் பிள்ளை... இது ஊரறிந்த உண்மை' என்ற அந்தப் பாடல் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றதுடன், எம்.ஜி.ஆரின் பிரச்சாரப் பாடலாகவும் பின் அங்கம் வகித்தது.

கலைஞரின் எழுத்தாலும், தி.மு.க.வின் கொள்கைகளாலும் ஈர்க்கப்பட்ட பூவை செங்குட்டுவன் எழுதி, எம்.எஸ்.வி. இசையில் பி.சுசீலா பாடிய 'கருணையும் நிதியும் ஒன்றாய்ச்சேர்ந்தால் கருணாநிதியாகும்ஞ்' மற்றும் டி.எம்.சௌந்தரராஜன் பாடிய 'கழகம் நல்ல கழகம்ஞ்' பாடல்கள், தி.மு.க தொண்டர்களால் எங்கும், எப்போதும் பொதுக்கூட்டங்களில், மாநாடுகளில் ஒலிக்கச் செய்யப்படுபவை.

'இராஜராஜ சோழன்' படத்தில் இவர் எழுதிய 'ஏடு தந்தானடி தில்லையிலே...' பாடல், முன்னதாக 'ஆடுகின்றானடி தில்லையிலே...' என்று எழுதப்பட்டு, கொலம்பியாவில் இசைத்தட்டாக வந்தது. பிறகு 'நந்தனார்' படத்துக்காகவும் பதிவு செய்யப்பட்டது. இதுவும் மும்முறையும் கவிஞருக்குப் பணம் வாங்கிக்கொடுத்த பாடல்!

'கற்பூரம்' படத்தில் இவர் எழுதிய "வணங்கிடும் கைகளில் வடிவத்தைப் பார்த்தால் வேல்போல் இருக்குதடி" மற்றும் அகத்தியர் படத்தில் இவர் எழுதிய "தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" இது போன்ற இன்னும் எண்ணற்ற பாடல்கள் கவிஞர் பூவை செங்குட்டுவன் புகழை உலகுள்ளவரை பறை சாற்றிக் கொண்டே இருக்கும்!

– அம்ரா பாண்டியன்

# எம் பதில்கள்

## மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரங்கள் ரத்து செய்யப்படுகிறதே?

நாடு முழுவதும் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகள், பல்கலைகள் போன்றவற்றில், தேசிய மருத்துவ ஆணையம் ஆய்வு செய்து, அங்கீகாரத்தை புதுப்பித்து வருகிறது.



அப்போது, மருத்துவமனை உட்கட்டமைப்பு, மருத்துவக் கல்லூரி வளாகம், பேராசிரியர்கள் பணியிடம், மாணவர்களின் வருகைப்பதிவு, ஆய்வக வசதிகள், விளையாட்டு மைதானம் உள்ளிட்டை ஆய்வு செய்யப்படுகின்றன.

இவ்வசதிகள் அடிப்படையில் கூடுதல் மருத்துவப் படிப்புக்கான இடங்களும் ஒதுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், தேசிய மருத்து வ ஆணைய அதிகாரிகள், தமிழக அரசு மருத்துவக் கல்லூரிகளில் கடந்த மாதம் ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து, தேசிய மருத்துவ ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடிக்க தவறியதால், சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி, திருச்சி, தர்மபுரி அரசு மருத்துவக் கல்லூரகளின் அங்கீகாரத்தை தேசிய மருத்துவ ஆணையம் இந்தாண்டுக்கு ரத்து செய்தது. அந்த வகையில் நாடு முழுவதும் 40 மருத்துவக் கல்லூரிகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டு உள்ளது.

இந்நிலையில், நாடு முழுவதும் மேலும் 150 மருத்துவக் கல்லூரிகளுக்கு சிக்கல் ஏற்பட்டு உள்ளது. ஏற்கனவே நீட் தேர்வு மூலம் மருத்துவக் கனவு நிர்மூலமான நிலையில் அங்கீகாரம் ரத்து செய்யப்படும் சூழலில் தமிழகத்தில் மருத்துவ கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் கேள்விக்குறியே என்பது வருத்தத்துக்குரியது.

## கோவையில் விளம்பர பலகை விழுந்து விபத்து ஏற்பட்டுள்ளதே?

வாகன ஓட்டிகளின் கவனத்தைத் திசை திருப்பும் வகையில் ரோட்டில் எந்த விளம்பரமும் இருக்கக்கூடாது என்பதை இந்திய சாலைக் குழும(ஐ.ஆர்.சி.) விதிகளும் வலியுறுத்துகின்றன. ஆனால், ஒவ்வொரு முறை கோர்ட் உத்தரவிடும்போது, இவை அகற்றப்படுவதும், அதன் பின் சில நாட்கள் கழித்து அவை மீண்டும் வைக்கப்படுவதும் வாடிக்கையாக நடந்து வருகிறது.

விளம்பர பலகை, மற்றும் விளம்பர பேனர் தொடர்பான வழக்குகளில் உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் தலையிட்டு கண்டித்து வந்ததுடன், கடுமையான உத்தரவுகளை தொடர்ந்து பிறப்பித்து வந்தாலும், அரசியல் கட்சியினர் தங்கள் செல்வாக்கை பயன்படுத்தியும் அதிகார துஷ்பிரயோகத்தால் விளம்பர பேனர் கலாசாரம் தொடர்கதையாகி வருகிறது.

விளம்பரப் பலகைகளுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம், மாவட்ட நிர்வாகத்துக்கே உள்ளது. இந்த அனுமதி வாங்கியபின்பே உள்ளாட்சிகளுக்கு உரிய கட்டணம் செலுத்தி அவற்றை நிறுவ வேண்டும். இந்நிலையில் கோவை மாவட்டம், கருமத்தம்பட்டி நகராட்சிக்குட்பட்ட அவிநாசி மெயின் ரோட்டில், விளம்பர பலகை கட்டும் பணி நடந்து கொண்டிருந்தது. அப்போது திடீரென சரிந்து விழுந்தது. இந்த சம்பவத்தில் மூன்று பேர் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

விளம்பர பலகையால் விழுகின்ற உயிர்களை கவனத்தில் கொண்டு அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள், அரசு அதிகாரிகள் ஆகியோர் இணைந்து இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பது நம்முடைய தாழ்மையான வேண்டுகோள்.

## தமிழகத்தில் புதிய தலைமை நீதிபதி பொறுப்பேற்றுள்ளாரே?

சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக இருந்த முனீஸ்வர்நாத் பண்டாரி, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பணி ஓய்வு பெற்றார். இதைத்தொடர்ந்து மூத்த நீதிபதியாக இருந்த எம்.துரைச்சாமி, நீதிபதி டி.ராஜா ஆகியோர் பொறுப்பு தலைமை நீதிபதியாக பணியாற்றி ஓய்வு பெற்றனர். இதைத்தொடர்ந்து மூத்த நீதிபதி எஸ்.வைத்தியநாதன் பொறுப்பு தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

கடந்த 8 மாதங்களாக தலைமை நீதிபதி பணியிடம் நிரப்பப்படாமல் இருந்த நிலையில், சுப்ரீம் கோர்ட்டு கொலீஜியம் கடந்த ஏப்ரல் 19ந் தேதி மும்பை ஐகோர்ட்டின்



பொறுப்பு தலைமை நீதிபதியாக இருந்த சஞ்சய் விஜய்குமார் கங்கா பூர்வாலாவை, சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக நியமிக்க மத்திய அரசுக்கும், ஜனாதிபதிக்கும் பரிந்துரை செய்தது.இதனை ஏற்ற ஜனாதிபதி திரவுபதி முர்மு, எஸ்.வி.கங்கா பூர்வாலாவை சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதியாக நியமித்து உத்தரவு பிறப்பித்தார். ஆளுநர் அமைச்சர்கள் அரசியல் கட்சி பிரமுகர்கள் சமூகத்தில் முக்கிய அந்தஸ்து உள்ளவர்கள் சட்ட வல்லுனர்கள் வழக்கறிஞர்கள் ஆகியோர் பங்கேற்க கடந்த வாரம் நடந்த நிகழ்ச்சியில் 33வது தலைமை நீதிபதியாக எஸ்.வி.கங்கா பூர்வாலா பதவியேற்றுக் கொண்டார்.

பதவி ஏற்றவர் விழா மேடையில் இருந்து இறங்கி விருந்தினர்கள் அமர்ந்திருந்த பகுதிக்கு வந்தார். பின்னர் அவர் தனது தாயார் அமர்ந்திருந்த இருக்கை அருகே சென்று தாயாரின் காலில் விழுந்து ஆசி பெற்றார். அப்போது அவரது தாயார் தலைமை நீதிபதி எஸ்.வி.கங்கா பூர்வாலாவை கட்டி அணைத்தபடி ஆனந்த கண்ணீர் விட்டார். இந்த சம்பவம் அங்கிருந்தவர்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

## வறுமையிலும் கல்வியில் செழுமை காணும் மாணவர்கள் பற்றி!

ஒரு மனிதனின் வாழ்க்கையில் எவ்வளவு வசதிகள் இருந்தாலும் அவனிடத்தில் கல்வி இல்லாவிட்டால்






சமூகத்தில் அவனுக்கு மரியாதை கிடைக்குமா என்பது கேள்விக்குறியே!

படிக்காமல் எத்தனையோ சாதித்து இருக்கிறார்கள். என்னையும் சேர்த்து சொல்லுகிறேன் நான் அதிகம் படிக்காவிட்டாலும் இன்றைக்கு ஒரு சமூக அந்தஸ்தோடு இருக்கிறேன். ஆனாலும் எனக்குள் நான் அதிகம் படிக்கவில்லையே என்கிற ஏக்கம் உண்டு. இன்றைய சூழலில் எத்தகைய வறுமையான சூழல் இருந்தாலும் மாணவர்கள் சாதிக்கிறார்கள்.கடந்த மாதம் வெளியான பிளஸ்2 பொதுத்தேர்வில் திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த மாணவி நந்தினி என்பவர் 600க்கு 600 மதிப்பெண் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளார். மாணவி நந்தினி தமிழ், ஆங்கில, பொருளாதாரம், வணிகம், கணக்குப்பதிவியல், கணினிபயன்பாடு என அனைத்து பாடங்களிலும் 100 க்கு 100 மதிப்பெண் பெற்றுள்ளார்.

இவரின் தந்தை சரவணகுமார் தச்சுத் தொழிலாளி. வறுமை படிப்புக்கு தடையாக இருக்காது என்பதற்கு நந்தினி போன்ற நிறைய மாணவ மாணவிகள் இருக்கிறார்கள். "இளமையில் கல்" என்று சொன்னார்கள். படிக்கிற காலத்தில் முழு கவனத்தோடு தன்னுடைய எதிர்காலம் அதில் அடங்கியிருக்கிறது என்ற எண்ணத்தோடு ஒவ்வொரு மாணவ மாணவியரும் படிப்பவர்கள் ஆனால் நிச்சயம் அனைவரும் சாதனை படைப்பவர்களாக இருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

மதிப்பெண்கள் குறைவாக எடுத்தால் தான் விரும்பிய பாடப்பிரிவில் தான் விரும்பிய கல்லூரியில் சேர முடியாமல் பெற்றோர்களை அதில் சேர்க்கச் சொல்லி அதிக மன உளைச்சலுக்கு ஆளாகும் மாணவர்களுக்கு மத்தியில் நந்தினிக்கு தான் விரும்பிய கல்லூரி இடம் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. பிளஸ் 2 வில் வணிகவியல் பிரிவு எடுத்திருந்தார். இவரை தங்கள் கல்லூரியில் சேர்க்க நிறைய கல்லூரிகள் போட்டி போட்டுக் கொண்டு அழைத்த நிலையில் அவரோ கோவை பிஎஸ்ஜி கல்லூரியில் B.com Professional Accounting சேர்ந்துள்ளார். இந்த படிப்புக்கான அனைத்து செலவையும் அந்த கல்லூரி நிர்வாகவே ஏற்றுள்ளது. விடுதி கட்டணம், உணவு கட்டணம் உள்பட அனைத்துமே நந்தினிக்கு இலவசமாக வழங்க முன் வந்துள்ளது.




"**அ**ப்பப்பா... என்ன வெயிலு ...என்ன சூடு... முடியலங்க..."

என்று புலம்பியபடியே உள்ளே வந்தார் கபாலிகான். கையில் ஈரமாக வைத்திருந்த கைத்துண்டை எடுத்து முகத்தில் அவ்வப்போது துடைத்துக் கொண்டார். அவருக்கு ஒரு டம்ளரில் மோரில் கறிவேப்பிலை கொத்துமல்லி இஞ்சி போட்டு நீட்டினோம். குடித்துக்கொண்டே இப்பதான் குளுகுளுனு இருக்கு என்றார்.

"எப்படி இருக்கிறது அரசியல்" என்று கேட்டோம்.

எல்லோருடைய கவனமும் செயல்பாடும் 2024 நாடாளுமன்றத் தேர்தலை நோக்கியே இருந்து வருகிறது"என்றார்.

கர்நாடக தேர்தல் முடிவுக்கு பிறகு காங்கிரஸ் கட்சிக்கு புதிய தெம்பு வந்துள்ளது. நாடாளுமன்ற தேர்தலுக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் காங்கிரஸ் எடுத்து வருகிறது. நாடு முழுவதும் உள்ள எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் பணியில் காங்கிரஸ் தொடங்கி இருக்கிறது.

"என்ன நடவடிக்கை? என்ன நடக்கும்?

"பாராளுமன்ற புதிய கட்டிடத்தை திறப்பு விழாவை புறக்கணிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் திட்டமிட்டன?"

ஆமாம்!

"இதில் நாலு,ஐந்து கட்சிகள் மட்டுமே பங்கேற்கும் என்று எல்லோரும் நினைத்தார்கள் ஆனால் அகில இந்திய அளவில் உள்ள 19 கட்சிகள் புறக்கணித்து நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டிய கூட்டணிக்கு அடுத்த வழியை ஏற்படுத்திக் கொண்டார்கள்"

"எதிர்க்கட்சியில் ஒன்று சேருமா?"

யாரும் தனக்கு பாதிப்பு வரும் வரை எதையும் எதிர்ப்பதற்கு துணை வரமாட்டார்கள் ஆனால் பாதிப்பு என்று வரும்போது இன்னொருவரை நாடுவது என்பது இயல்பான ஒன்று

ஆமாம்!

அப்படி ஒரு சூழல் தனித்தனியே கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது. டெல்லியில் ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சி நடைபெறுவது அறிந்ததே. அது ஒரு யூனியன் பிரதேசம். அதனுடைய அதிகாரமே குறைவு. அந்த அதிகாரத்தையும் குறைக்கின்ற வகையில் சட்டம் இயற்றிய மத்திய அரசுக்கு எதிராக டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு மாநில முதல்வரையும் சந்தித்து வருகிறார். அந்த வகையில் சமீபத்தில் பஞ்சாப் முதல்வருடன் தமிழ்நாடு வந்த அவர் தமிழ்நாடு முதல்வர் மு. க .ஸ்டாலினை சந்தித்தார்கள்.

ஏற்கனவே பல்வேறு மாநில முதல்வர்களை சந்தித்த அரவிந்த் கெஜ்ரிவால் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர்களை சந்தித்து ஒருங்கிணைக்க முடிவு செய்துள்ளார். அதன் அடிப்படையில் வரும் ஜூன் மாதத்தில் அகில இந்திய அளவில் எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து மாநாடு ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளது. அந்த மாநாட்டில் 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்காக தங்களை தயார் படுத்திக் கொள்ள திட்டம் ஒன்று ஏற்படுத்த முடிவு எடுத்துள்ளார்கள். குறிப்பாக 450 இடங்களில் பொது வேட்பாளர்களை நிறுத்த உத்தேசித்துள்ளார்கள்.





முடியுமா?

வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகவே அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். மூன்றாவது அணி ஒன்றை உருவாக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக சொல்லி வந்தவர்கள் அந்த கருத்தில் இருந்து மாறி பா.ஜ.கவை எதிர்க்க ஒன்று சேர வேண்டும் என்கிற ஒரு புள்ளியில் இணைவதால் அதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன.

"ஒவ்வொரு கட்சிக்கும் வெவ்வேறு கருத்து இருக்கிறதே?

ஆமாம். காங்கிரஸ் கட்சி தன்னுடைய நிலையிலிருந்து இறங்கி வந்து எல்லோரோடும் இணக்கமாக செல்ல வேண்டும் என்கிற நிலையை எடுத்து ராகுல் காந்தி வகுத்து தருகிற திட்டத்தின் படி செயல்பட்டு வருகிறார்கள்.

"தமிழ்நாட்டு நிலைமை கொஞ்சம் சொல்லுங்களேன்"

தமிழ்நாட்டில் தி.மு.க தலைமையில் கூட்டணி வலுவாக உள்ளது. விடுதலை சிறுத்தைகளை அந்த கூட்டணியில் இருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்று எதிர் கட்சிகள் அவ்வப்போது ஏதேனும் ஒரு வகையில் அரசியல் செய்கின்றன?

எப்படி சொல்றீங்க?

பாஜக கூட்டணியில் இருந்து அதிமுக விலக வேண்டும் என்று திருமாவளவன் கூறிய நிலையில் திமுக கூட்டணியில் இருந்து விலகி பாஜக கூட்டணிக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி வரவேண்டும் என வானதி சீனிவாசன் செய்தியாளர்களிடம் பேட்டி அளித்தார். சமூக நீதிக்கு எதிரான கட்சி தான் திமுக என்றும் அந்த கூட்டணியை விட்டுவிட்டு பாஜக கூட்டணிக்கு திருமாவளவன் வரவேண்டும் என்றும் திமுக கூட்டணியில் பட்டியலின மக்களுக்கு தீர்வு கிடைக்காது என்பதை திருமாவளவன் உணர்ந்துள்ளார் என்றும் வானதி சீனிவாசன் கூறினார். அவரது இந்த பேட்டி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அதற்கு திருமா என்ன சொன்னார்?

இதற்கு பதில் அளித்துள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், சாதிய மதவாத கட்சிகளான பாஜக, பாமக போன்ற கட்சிகளோடு எக்காரணத்தை கொண்டும் ஒரு தற்காலிகமான தேர்தல் கூட்டணி வைத்துக் கொள்ளமாட்டோம். இந்த நிலைப்பாட்டில் விடுதலை சிறுத்தைகள் கட்சி என்றென்றும் உறுதியாக இருக்கும். ஒரு போதும் இந்த நிலைப்பாட்டை நாங்கள் மாற்றிக்கொள்ள மாட்டோம்" என்று அதிரடியாக பதில் அளித்துள்ளார். நாங்கள் பாஜகவுடன் கூட்டணி வைத்தாலும் விடுதலை சிறுத்தைகள் கட்சி எங்களுடன் உடன்பாடு வைத்துக் கொள்ளலாம் என்றும் தேர்தலில் கூட்டணி என்பது வேறு உடன்பாடு என்பது வேறு என்றும் அதிமுக கூட்டணிக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி வந்தால் திருமாவளவனின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்றும் அவர் கூறினார் என்று முன்னாள் அமைச்சர்கள் கடம்பூர் ராஜு ,செல்லூர் ராஜு அழைப்பு விடுத்தனர்.

திமுக கூட்டணியில் குழப்பத்தை ஏற்படுத்த அ.தி.மு.க.வும்,பா.ஜ.க வும் முயற்சிக்கிறது. அதே போல அதிக சீட்டுக்களை பெறுவதற்காக அ.தி.மு.க மீது தன்னுடைய ஆதிக்கத்தை அண்ணாமலை அவ்வப்போது செலுத்தி வருகிறார். அது போக போக இன்னும் பரபரப்பை அரசியலில் ஏற்படுத்தும் பார்க்கலாம் பொறுத்திருங்கள் என்று சொல்லிவிட்டு வெளியேறினார் கபாலிகான்.

# வேப்பம் பூவில் இனிக்கும் நன்மைகள்!



**உ**ப்பு கலக்காத வேப்பம்பூ 50 கிராம் கேட்டு வாங்கி, அதை 100 கிராம் தேங்காய் எண்ணெய்யில் போட்டு நன்கு காய்ச்ச வேண்டும்.

இளம் சூடு பதத்திற்கு ஆறியதும், வேப்பம் பூவுடன் சேர்த்து எண்ணெய்யை தலையில் நன்றாகத் தேய்த்து அரை மணிநேரம் ஊறிக் குளித்தால், பொடுகு பிரச்னை தீரும். வேப்பம் பூவில் துவையல், ரசம் செய்து சாப்பிட்டால் குமட்டல், வாந்தி மயக்கம் குணமாகும். பசி உண்டாகும். வேப்பம் பூவை ஊற வைத்துக் குடிக்க பித்த தன்மை தீரும். வேப்பங்காயை வெயிலில் உலர்த்தி அந்த பொடியை வெந்நீரில் கலந்து கொடுக்க மலேரியாக் காய்ச்சல் குணமாகும்.

வேப்பம் பூ உடலில் உள்ள கெட்ட கிருமிகள் அனைத்தையும் அழித்து விடும் ஆற்றல் கொண்டதாகும். வேப்பம்கொட்டையை உடைத்து உள்ளிருக்கும் பருப்பை எடுத்து அரைத்துப் புரையோடிய புண்கள் மீது பூசி வரக் குணம் கிடைக்கும். குஷ்ட நோயாளிகளின் புண்களையும் குணப்படுத்தும்.



நீண்ட நாள் சாப்பிட்டு வரத் தோல் நோய்கள், சூதக சன்னி, நரம்பு இசிவு, குடல் புழுக்கள் போன்ற தொந்தரவு நீங்கும். வாயுத்தொல்லை, ஏப்பம் அதிகமாக வருதல், பசியின்மை போன்றவைகளுக்கு வேப்ப மரத்தின் பூக்களை மென்று தின்றால் நல்ல பலன் கிடைக்கும்.

வயிற்றுக்கோளாறு உள்ளவர்கள், பல்பம், சாக்குகட்டிகள் சாப்பிடும் வழக்கமுள்ள குழந்தைகளுக்கு வேப்பம் பூ கஷாயம் கொடுத்தால் வயிறு சுத்தமாகும்.

வேப்பம் பூவை வெயிலில் காயவைத்துப் பொடி செய்து பருப்புப் பொடியுடன் சேர்த்து சாதத்துடன் கலந்து சாப்பிட்டால் வாந்தி, ஏப்பம், பித்தம் நீங்கும்.

வேப்பம் பூவுக்கு ஜீரணத்தை அதிகரிக்கும் சக்தி உண்டு. உடல் பலம் பெறும். வயிற்றில் உள்ள கிருமிகளை கொல்லும். வேப்பம் பூவை கொண்டு குல்கந்து தயாரிக்கலாம். இது வியாதியைத் தடுக்கும். ஆண்மையை அதிகரிக்கும் சக்தி கொண்டது.

கொதிக்க வைத்த நீரில் வேப்பம் பூவை போட்டு ஆவி பிடித்தால் தலைவலி, காது வலி நீங்கும். வேப்ப மரக் காற்றே பல வியாதிகளைக் குணப்படுத்தும். அதன் குச்சி, இலை, துளிர், பூ என அனைத்தும் மிக பயன் உள்ளது.

– ஹரிபாபு

# போன் நம்பர் தேவையில்லை: வாட்ஸ் அப் அப்டேட்

**நா**ம் ஃபேஸ்புக், டிவிட்டர், வாட்ஸ் அப் போன்ற பல சமூக வலைதளங்களைப் பயன்படுத்தி வருகிறோம்.



பெரும்பாலான வலைதளங்களில் நாம் இமெயில் மற்றும் ஃபோன் மூலமாக சைன் அப் செய்திருந்தாலும் நம்மை அடையாளப்படுத்திக் கொள்ள தனித்துவமான யூஸர்நேம் உருவாக்கிக் கொள்ள முடியும். ஆனால், வாட்ஸ் அப்ஐ பொருத்தவரையில் நாம் நம்முடைய ஃபோன் நம்பரில் தான் இயங்கியாக வேண்டும். நம் நட்பு வட்டத்தில் நம் ஃபோன் நம்பர்களை ஏற்கனவே சேமித்து வைத்திருப்பார்கள் என்றாலும், பல தரப்பினரும் உள்ள குரூப்களில் நம் நம்பர் நேரடியாக தென்படுவதால் நமது தனியுரிமை பாதுகாப்பு குறித்து கேள்வி எழுகிறது.

இந்த நிலையில், வாட்ஸ் அப்பிலும் யூஸர்நேம் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலான அப்டேட் வர இருப்பதாக தொழில்நுட்ப வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து WABetaInfo நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், "ஆண்டிராய்ட் தளத்தில் இயங்கக் கூடிய சமீபத்திய வாட்ஸ் அப் அப்டேட் வெர்சன் 2.23.11.15 பான்படுத்தியபோது, முக்கியமான வசதி ஒன்று மேம்படுத்தப்பட்டு வருவதை நாங்கள் கண்டறிந்தோம்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆப் செட்டிங்ஸ் மூலமாக யூஸர்நேம் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலான சிறப்பு வசதி குறித்து ஸ்கிரீன்சாட் பதிவு ஒன்றை WABetaInfo பகிர்ந்துள்ளது.

பயனாளர்கள் செட்டிங்க்ஸ் பக்கம் சென்று இதனை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

யூஸர்நேம் ஒன்றை தேர்வு செய்து கொள்வதன் மூலமாக பயனாளர்கள் தங்களை தொடர்பு கொள்வதற்கான வசதிகளில் ஃபோன் நம்பரை நீக்கிக் கொள்ள முடியும். அதேபோல எளிதில் நினைவுகூரத்தக்க யூஸர்நேம் ஒன்றை அவர்கள் உருவாக்கிக் கொள்ளவும் முடியும்.

ஒரு யூஸரின் ஃபோன் நம்பரை தெரிந்து கொள்ளாமலேயே, அவர்களின் யூஸர்நேம் உள்ளீடு செய்து வாடிக்கையாளர்கள் பிறரை தொடர்பு கொள்ள முடியும் என்று WABetaInfo நிறுவனம் தெரிவிக்கிறது. யூஸர்நேம் வசதி எப்படி செயல்படும் என்பது முழுமையாக தெரியாமல் இருந்தாலும், யூஸர்நேம் வாயிலாக நடைபெறக் கூடிய உரையாடல்களுக்கும் எண்டுடூ என்கிரிப்ஷன் பாதுகாப்பு வசதி கிடைக்கும் என்று உறுதியாகக் கூறப்படுகிறது. யூஸர்களின் தனியுரிமை மற்றும் டேட்டா பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் கருதி இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறது. யூஸர்நேம் பயன்படுத்தும் வசதி இப்போது வரையில் பரிசோதனை நிலையில் தான் உள்ளது. எனினும் ப்ரீமியம் வாடிக்கையாளர்களுக்கு இந்த வசதி வெகு விரைவில் பயன்பாட்டிற்கு கிடைக்கும் என்று கருதப்படுகிறது. குரூப் செட்டிங்க்ஸ் தொடர்பில் புதிய வசதிகளை வாட்ஸ் அப் நிறுவனம் அறிமுகம் செய்ய திட்டமிட்டிருப்பதாகவும் செய்திகள் வெளிவாகியுள்ளன.

இந்த வசதிகள் தற்போது ப்ரீமியம் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கின்றன. இந்த புதிய வசதியின்படி, செட்டிங்க்ஸ் மெனுவில் ஒவ்வொரு புதிய வசதிக்கும் புதிய விண்டோவுக்கு நீங்கள் செல்ல வேண்டியிருக்காது.

அதற்குப் பதிலாக அதே விண்டோவில் டாகிள் செய்வதன் மூலமாக இந்த வசதியைப் பெறலாம்.



எஸ்.சூர்யா


Ready-to-Occupy
Door-step-Metro
64L*
Onwards
NO.1 Jawaharlal Nehru Road ,
Ponniamman Medu ,Kolathur,
Chennai - 99
sales@krmhomemakers.com
+91 9003 454 454
044 - 2374 3008
krmhomemakers.com
krmhomemakers
krm_home_makers

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/ 2022-2024
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2022-2024
POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 JUNE 2023

# ரெட்டை ஏரி அருள்மிகு வலம்புரி விநாயகர் ஆலயம்!

கொளத்தூர் - 600099



**ஆன்மீக அன்பர்களுக்கு வணக்கம்!**

இந்த உலகில் வாழும் மனிதன் இயற்கையையும் இறைவனையும் தவிர்த்திட இயலாது. இயற்கை என்பது நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், நிலம் என்ற வடிவங்களில் அமைந்து மனிதனை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. அதைப் போலத்தான் இறைவனும் சிவன், விநாயகர், முருகர் பைரவர், தட்சிணாமூர்த்தி என்று பல்வேறு வடிவங்களில் மனிதனை காத்து வருகிறார்.

இயற்கை எழிலை அழகாக எடுத்துச் சொல்லும் சென்னை ரெட்டை ஏரிக் கரையில் அமைந்திருக்கும் **கே. ஆர். எம். 99 டிலைட்ஸ்**-ல் வீற்றிருக்கும் அருள்மிகு வலம்புரி விநாயகர் இங்கு வாழும் மக்களை பாதுகாத்து வருகிறார். இவரை சங்கட சதுர்த்தி நாளில் வணங்கி செல்வோருக்கு தாங்கள் செய்யும் எந்த செயலிலும் தடை இல்லாமல் நிறைவேறும் மகிழ்ச்சியான நிலை அருள்மிகு வலம்புரி விநாயகர் தருகிறார். அதைப்போல வேண்டும் வரம் வேண்டி வணங்கி நிற்பவர் வாழ்வில் அனைத்து வளமும் உடல் நலமும் வாழ்வில் பலமும் தந்து காத்து வருகிறார்.

இத்தகைய பெருமை வாய்ந்த ரெட்டேரி அருள்மிகு வலம்புரி விநாயகர் ஆலயத்தில் வரும் ஜூன் 26 ஆம் தேதி திங்கட்கிழமை மண்டல பூஜை நடைபெற உள்ளது. **இந்த பூஜையில் தாங்கள் தவறாது பங்கு கொள்வதோடு தங்களின் பெயர், பிறந்த தேதி, ராசி, நட்சத்திரம், லக்னம் ஆகியவற்றை குறிப்பிட்டு முன்கூட்டியே கொடுத்தால் அந்த பூஜையில் அர்ச்சனை செய்யப்படும்.** ஒருவர் எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் அர்ச்சனை செய்து கொள்ளலாம். ஆனால் விவரங்களை தனித்தனியாக தர வேண்டும். உங்கள் அனைவருக்கும் ரெட்டேரி அருள்மிகு வலம்புரி விநாயகர் அருள் கிடைத்திட வேண்டுகிறோம்.

## RETTERI ARULMIGU VALAMBURI VINAYAGAR

KOLATHUR, CHENNAI - 600099.

**Power is Here**

Dear Devotees!

Man cannot live without the blessing of nature and God. Nature consist water ,fire, wind, sky, space. God care us as lord Shiva lord Ganesha lord muruga Shri Amman and various Avatar.

On the lake side of RETTERI one of famous God name SREE VALAMBURI VINAYAGAR was placed in **99Delights at KRM.** Ganesha with a right trunk is rare. One can find these idols mostly in temples. The right trunk signifies the Pingala or the Surya Nadi, representing masculinity. The fiery nature can give quick results or destroy everything. Ganesha's trunk turned to the right, standing for moksha or freedom from worldly pleasures. The Valampuri Ganesha should be worshipped according to the Vedic customs to attain the maximum benefit. Appropriately worshipping him can bring you immense happiness.



*அனைவரும் வருக!*
*இறையருள் பெறுக!*

There was a special day to this temple on26.06.2023 Monday called Mandala Pooja. Especially you are welcome to participate in the Pooja particularly with your family Before that you Should inform to our office with your details. **Name,Rasi,lagnam,natchathiram should mentioned in a paper.A special Archanai by Acharya to you and your family. So we expected your presence and get lord Ganesha 's blessing.**

For details: **KRM Haribabu, 9840502238**

Thank youEver&EverYour:

**People Star: M.S.Moorthy, KRM 99 delights**

No.1, Jawaharlal Nehru Road, Ponniamman Medu, Kolathur, Chennai - 99

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY